

கல்கி
40 காசு
20.8.1967
KALKI

ஸ்பென்ஸர் 'டீ' தான்
சந்தேகமில்லை!

ஸ்பென்ஸர் 'டீ'யின் சுவையும், மணமும் தனிப்பட்டவை. தரத்தை விரும்புவோர் அனைவரும் கேட்டு வாங்குவது ஸ்பென்ஸர் தேயிலையைத்தான்.

ஸ்பென்ஸர் 'கிரீன்லேபல்' 'ரெட் பாண்ட்' மற்றும் 'பீகோ டஸ்ட்' ஆகியவை நீலகிரியின் உயர் மிகு சாரல்களில் பயிராகும் தேயிலை ரகங்கள்.




உங்கள் தேவைக்கேற்ப 100, 250 மற்றும் 500 கிராம் கார்டன்களில் கிடைக்கின்றன.

ஸ்பென்ஸர்
அண்டு கோ.,
லிமிடெட்
சென்னை மற்றும் கிளைகள்





FDSST842



ஈடிணையற்ற தென்புக்கு... கோலாகலமான
சக்திசெறிந்த
க்ளூகோ பிஸ்கெட்

க்ளுக்கோ—கோதுமை, பால், சர்க்கரை, ஆகியவற்றின்
வளமைச் சத்துக்கள் யாவுமடங்கிய பிஸ்கெட்.



பார்லேயின் க்ளூகோ பிஸ்கெட்

பாரதநாட்டின் உன்னதமான விற்பனை உடைய பிஸ்கெட்

everest/37b/PP/TM

கல்கி

பொருளடக்கம்










பிலவங்க, ஆவணி 4 - ஆகஸ்ட் 20

''கல்கி''யில் வெளியாகும் கதைகளில் உள்ள பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்களே; சம்பவங்களும் கற்பனையே.



பிரதேச மொழிகளின் அன்பு
ஹிந்தி
பிரதேச மொழிகள்
இதைக் கட்டிக் கொண்டுதான் நீந்த வேண்டும்!
மத்திய சர்க்கார்
மாணவர்
பிரதேச மொழிகள்



தமிழ்த்திருநாடு தன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா — பாரதியார்

மலர் 27 □ இதழ் 3

போதனை மொழிக் குளறுபடி

நம்முடைய புராதன காலத்தை நாம் போற்றுகிறோம். அது பற்றிப் பெருமிதம் கொள்கிறோம். அந்தக் காலத்தில் இங்கே ஆங்கிலமோ வேறு அந்நிய மொழிகளோ இருக்கவில்லை என்பது வாஸ்தவம். அப்போது நாம் ஆங்கிலம் இல்லாமலே மகத்தான சமூகமா யிருந்தது உண்மை.

ஆனால் இப்போது காலம் மாறிவிட்டது. இன்று நம்முடைய பழைய பெருமையை நாம் பெறுவிட்டாலும் மற்ற நாடுகளைப் போலச் சாமானியமாக இருக்கவும்கூட ஆங்கிலம் அவசியமாகிவிட்டது. ஸயன்ஸின் வளர்ச்சி இதற்கொரு முக்கியமான காரணம். பழமைக்காக ஏங்குவதோ, அது பற்றிப் பெருமிதம் கொள்வதோ, அதைப் போற்றுவதோ பிரத்யட்ச உண்மையைத் தோல்வியடையச் செய்ய முடியாது.

சர்வகலாசாலைகளில் போதனை மொழியாக உள்ள இக்கால அறிவு மொழியான ஆங்கிலத்தை அகற்றி, அதனிடத்தில் ஐந்தாண்டுகளுக்குள் பிரதேச மொழிகளை அமர்த்துவதே யூனியன் சர்க்காரின் திட்டம். இது சத்தியத்தை எதிர்த்துச் செய்கிற போர். எனவே இது தோற்றுத்தான் தீரும். ஆனால் தோற்பதற்கு முன் இதனால் மகத்தான உற்பாதங்களும் விளையும். சுதேசி ஆசையினால் இருநூறாண்டு சரித்திரத்தை அழித்துவிட முடியாது. இந்த இருநூறாண்டுகள் அந்நிய ஆட்சி நடைபெற்ற காலம் மட்டுமல்ல. உலகில் மகத்தான மாறுதல்கள் நடைபெற்ற காலம் இதுவே. புதிய அறிவு விழிப்பும் தொழில் நுணுக்க முன்னேற்றமும் நடைபெற்ற காலமும் இதுவே.

ஐந்தாண்டுகளில் ஆங்கிலத்துக்குப் பதில் பிரதேச மொழிகள் போதனை மொழிகளாவது சிரமம் என்று சிலர் சொல்கிறார்கள். உண்மையில் எத்தனை ஆண்டுகளில் போதனை மொழி மாற வேண்டும் என்பது பிரச்னை அல்ல. போதனை மொழி ஆங்கிலத்திலிருந்து பதினைந்து பிரதேச மொழிகளாக மாற வேண்டுமா என்பதே அடிப்படைப் பிரச்னை. ஒவ்வொரு பிரதேசத்திலும் அந்தந்தப் பிரதேச மொழியில் போதனை நடத்தினால் மாணவர்களும் ஆசிரியர்களும் தேசத்தின் ஒரு பகுதியிலிருந்து இன்னொரு பகுதிக்கு எப்படிச் செல்ல முடியும்? படிப்பாளிகளின் சமூகம் நாடு எங்கிலும் தங்கு தடையின்றிச் செல்ல வசதி தருவது யுக்தமா அல்லது பதினைந்து மொழிகளையும் கொண்டு அவர்களுக்குத் தடைகள் விதிப்பது யுக்தமா என்பதே கேள்வி. இந்தக் குழப்பத்தில் ஹிந்தி எப்படியாவது ஆங்கிலத்தை வென்று அதன் இடத்தைப் பிடித்து விடும் என்று 'பிரித்து ஆளும்' திட்டக்காரர்கள் ஆசைப்படுகிறார்கள்.

மாணவர்கள் படிப்புக் காலத்தில் ஒரு பிரதேசத்தை விட்டுச் செல்ல முடியாமல் இருப்பதோடு இப்பிரச்னை முடியவில்லை. படித்த பிறகு அவர்கள் உத்தியோகம் பெற்றுத் தேசத்துக்குச் சேவை செய்வதற்கும் இதன் விளைவாகத் தடை ஏற்படும் என்பதே அதனிலும் பயங்கரமானது. இந்த விளைவை நிச்சயமாக உண்டாக்கும் ஒரு திட்டத்தை நாம் எந்த நியாயம் காட்டி ஏற்க முடியும்? இந்தியாவில் மொழிகளின் உண்மை நிலையைப் பார்ப்போம். 1966ல் 56 லட்சம் ஆங்கிலச் செய்திப் பத்திரிகைகள் செலாவணியாகி யிருக்கின்றன. இதே ஆண்டில் 39 லட்சம் ஹிந்திப் பத்திரிகைகள்தான் செலாவணியாகி யிருக்கின்றன. இதில் ஆங்கிலப் பத்திரிகைகள் மட்டுமே அகில தேசத்திலும் செலாவணியாகின்றன என்பதும் ஹிந்தி மொழிப் பத்திரிகைகள் யாவும் குறிப்பிட்ட ஒரு பிரதேசத்தில்தான் செலாவணியாகின்றன என்பதும் கவனிக்க வேண்டிய விஷயம்.

ராஜ்யங்களின் துறையான கல்வியில் யூனியன் சர்க்கார் குளறுபடி செய்வது

விசித்திரம். பார்லிமெண்டும், சர்க்காரும் ஒரு தேசியக் கல்விக் கொள்கையை அங்கீகரித்துவிட்டால் போதும், அக்கொள்கையை அமுல்படுத்தும் கருவியாகிய மொழிப் பிரச்னையை எளிதில் தீர்த்துவிடலாம் என்று யூனியன் கல்வி மந்திரி ஸ்ரீ திரிகுண சேன் ராஜ்ய சபையில் கூறியுள்ளார். கொடுங்கோன்மை என்பது எப்போதுமே கொடுங்கோலர்களுக்கு எளிய நிர்வாகத்தான் தோன்றும். சர்வகலாசாலைகள் சுய விருப்பப்படி போதனை மொழியைத் தேர்வு செய்வதற்குச் சட்டம் அநுமதித்தபோதிலும், ஹிந்தியைப் போதனை மொழியாக அறிமுகப்படுத்தியுள்ள தர்பங்கா சர்வ கலாசாலை தவிர எந்தச் சர்வ கலாசாலையும் இதுவரை எந்தப் பிரதேச மொழியையும் போதனை மொழியாக ஏற்கவில்லை. போதனை மொழிப் பிரச்னையில் முடிவெடுக்க சர்வ கலாசாலையினருக்கே அதிக உரிமையுண்டு. கல்வித் துறையில் அநுபவம் வாய்ந்தவர்களின் ஆலோசனையைப் பெறாமல் அரசியல்வாதிகள் போதனை மொழி பற்றித் திட்டம் போடுவது சிறிதும் சரியல்ல.

மத்திய சர்க்காரின் தொழில் நுட்பக் கலாசாலைகளி லெல்லாம் இனி ஹிந்தியைப் போதனை மொழியாக்கிவிட வேண்டும் என்று யூனியன் கல்வித் துறை யோசித்து வருவதாகவும் சொல்லப்படுகிறது. அதாவது மக்கள் விரும்பி நாடும் இந்தக் கல்வி நிலையங்கள் ஹிந்தி தெரியாத மாணவர் சமூகத்துக்கு இனி திறந்திராது என்று பொருள். இது மிகவும் துர்ப்பாக்கியமான, மிகவும் அநியாயமான ஓர் ஏற்பாடு.

அறிவாளிகளை ஒரே இடத்தில் கட்டிப் போடுவதும், நாடு பல திட்டுக்களாகப் பிளந்து போவதும் தேசத்துக்குப் பெரும் விபத்தாகும். இந்த விபத்தைத் தடுக்கப் பாடுபடுவது சர்வகலாசாலைகளின் கடமை; மாணவர் கடமை. இந்தியாவின் ஐக்கியத்தைக் காக்கவும், இந்தியாவில் நவீன ஸயன்ஸ் தடையின்றி வளரவும், ஆங்கிலம் நீடித்தே யாக வேண்டும் என்பதை நன்கு உணரக் கூடிய மாணவர்களும் சர்வ கலாசாலைகளுமே இப்போது விழிப்புடன் இருக்க வேண்டும்.

படிப்பினை சரியல்ல

எண்ணுவதற்கே கோரமான பயங்கரம் நிகழ்ந்திருக்கிறது! நச்சுப் பொருள் கலந்த வார்னிஷை உட்கொண்டு சென்னையிலும், வாலாஜாபாத்திலும் சுமார் நூற்று நாற்பது பேர் மரணமடைந்திருக்கின்றனர்! இன்னும் பலர் குடற்புண் முதலிய உபாதைகளுக்கு ஆளாகியுள்ளனர். இன்னலுற்ற குடும்பத்தினர் அனைவருக்கும் நம் அநுதாபங்களை அளிக்கிறோம்.

மதுவிலக்கை ரத்து செய்துவிட்டு அசல் கள்ளை விற்பனை செய்தால் இது போன்ற உற்பாதங்கள் நேராது என்று பல பத்திரிகைகள் எழுதியுள்ளன. விபத்திலிருந்து இவர்கள் சரியான படிப்பினை பெறவில்லை என்றே தோன்றுகிறது. மது அரக்கனின் ஆட்சியிலும் குடற்புண் ஏற்பட்டு நாளாவட்டத்தில் மாண்டவர்கள் பலர். ஆனால் இது உடனடியாகவோ ஒரு கூட்டமாகவோ சம்பவிக்காததால் கணக்குக்கு வரவில்லை, அவ்வளவுதான். மதுவிலக்கு இல்லாத போது ஏழைகளின் குடும்ப வாழ்வில் இருந்து வந்த சச்சரவுகளையும் அப்போது மானுடர்கள் உற்ற இழிநிலையையும் இன்றைய விபரீதச் சாவுகளினால் மறந்துவிடுவதற்கில்லை. எந்தக் கொடுந் தீமையிலும் கூட நன்மைக்கான ஒரு படிப்பினையைக் காண முடியும். இப்போது ஏற்பட்டுள்ள துர்மரணங்களினால் மக்கள் இனிமேல் வார்னிஷ் முதலிய எவ்விதப் போதைப் பொருள்களையும் நாடாமலிருப்பார்கள் என்று நம்பிக்கை கொள்வதே நாம் பெறக் கூடிய படிப்பினை. மதுவும் இல்லாமல் வார்னிஷ் விஷமும் இல்லாமல் வாழ்வு நடத்துகிற பண்பு நம் மக்களுக்குக் கிடையாது என்று நினைத்து, விஷ வார்னிஷுக்குப் பதில் மதுவரக்கனுக்கு வரவேற்பு நல்குவதில் விவேகம் இல்லை.

காமகோடியின் கருணைமொழி



'கலியில் அதர்மம் நடக்கும் என்று சாஸ்திரம்தான் சொல்கிறதே. தர்ம ரட்சணத்துக்கு ஏன் பாடுபட வேண்டும்?' என்று சிலர் ஆட்சேபிக்கிறார்கள். ஓர் ஊரில் திருடன் வரப் போகிறான் என்று போலீஸ்காரர் சொல்கிறார். 'திருடன் வரப்போகிறானே' என்று சாமான்களைத் தாங்களே வீதியில் எடுத்துப் போடுவார்களா? திருடன் வருவான் என்பது தெரிந்தால் எச்சரிக்கை அடைந்து ஜாக்கிரதையாக இருக்க வேண்டும். அதர்மம் வரப்போகிறது என்று பயந்து இந்தக் கலியில் நாம் அதிக ஜாக்கிரதையாக இருக்க வேண்டும். கலியுகத்தில் வரும் அதர்மப் பிரவாகத்தை ஒருவன் எதிர்த்து நின்றால் மற்ற யுகத்தில் கிடைப்பதை விடக் கோடி மடங்கு பயன் கிடைக்கும். எதிர்ப்பு உண்டான சமயத்தில் தடுத்து நின்றால்தான் பெருமை அதிகம். உலகம் பரிகாசம் செய்வதைப் பொருட்படுத்தாமல் தர்மாநுஷ்டானங்களைக் காப்பாற்றிச் சித்த சுத்தி அடைவதே பெருமை.

ராஜாஜியின் கருத்துக்கள்

தமிழகத்தில் உள்ள வைத்தியக் கல்லூரிகளுக்கும், மற்ற தொழில் கல்லூரிகளுக்கும் மனுப் போட்ட மாணவர்களுக்கு, தங்களுக்கு அட்மிஷன் கிடைக்காதிருக்கையில் தங்களை விடக் குறைவாக மார்க் வாங்கியவர்களுக்கு அட்மிஷன் கிடைத்திருப்பது ஏன் என்று புரியவில்லை. இக்கல்லூரிகளில் பின்தங்கிய வகுப்பினருக்குத் தாராளமாக ஸ்தானம் ஒதுக்கியதோடு மட்டுமின்றி, கடந்த சில காலமாக மாவட்ட அடிப்படையிலும் ஸ்தானங்கள் அளிக்கப்படுகிறது. இதனால் தகுதி என்பது மாவட்டங்களின் அடிப்படையில் பின்னப்படுத்தப்பட்டு வருவது மக்களுக்குத் தெரியவில்லை. மாவட்டங்களிலுள்ள தொழிற் கல்லூரிகளில் அந்தந்த மாவட்டத்தின் புத்திசாலி மாணவர்களுக்கு முதலிடம் தரவேண்டும்; ராஜ்யம் முழுவதற்கும் பொதுவெனக் கருதக்கூடிய மத்திய கல்வி நிலையங்களில் மாணவருடைய மாவட்டத்தைப் பாராமல், தகுதி ஒன்றின் மீதே அட்மிஷன் தரவேண்டும் என்பது என் கருத்து. இந்தச் சீர்திருத்தம் நன்கு அமுலாவதற்காக, மாவட்டங்களில் மேலும் பல தொழிற் கல்லூரிகளை அமைக்க வேண்டும். இவ்வாறு நடந்தால் பல முரண்பாடுகள் நீங்கி சந்தேகாஸ்பதமான போக்குகளும் ஊழல்களும் குறைய வாய்ப்பு உண்டாகும்.

* * *

ருஷியாவிலிருந்து 'அருள்' பெறுவதற்காக மத்திய கல்வி மந்திரி ஸ்ரீ திரிகுண சேன் அந்நாட்டுக்கு க்ஷேத்திராடனம் செய்யவிருக்கிறார். செப்டம்பர் பின் பாதியில் அவர் அந்தப் புனித தேசத்தில் தங்கியிருப்பார். நம் நாட்டில் மொழிக் குழப்பம் உண்டாக்கும் திட்டங்களை மந்திரி சபை மேற்கொண்டிருப்பது பற்றி இந்தியாவின் விரோதிகள் மகிழ்ச்சியடைவார்கள் என 'ஹிந்து' கூறியுள்ளது. மத்திய சர்க்கார் செய்யவிருக்கும் தீமை மொழிக் குழப்பத்தோடு நிற்கவில்லை. அது இந்தியாவில் படிப்பாளிகள் நாட்டின் எல்லாப் பாகங்களிலும் சென்று வாழ்வதற்கே ஆபத்தாக இருக்கிறது; தேசத்தின் அரசியல் ஒற்றுமைக்கும் நிருவாக ஐக்கியத்துக்கும் ஊறாக நிற்கிறது. இந்தத் தீய விளைவுகள் எவ்வளவு பெரியவை என்பதை உணரத் தலைவர்கள் தவறிவிட்டதாகத் தெரிகிறது. எனவே, தீமையின் விஸ்தாரமான விளைவுகளை உணர்ந்திருப்பதோடு, தங்களது சொந்த நலன்களுக்கு ஏற்பட்டுள்ள உற்பாதத்தையும் உணர்ந்துள்ள சர்வகலாசாலை மாணவர்களின் மீது தான் எதிர்ப்புச் செய்கிற பொறுப்பு விழுந்திருக்கிறது.

* * *

ஆங்கிலத்தையே இந்திய சர்வகலாசாலைகளின் போதனை மொழியாக நீடிக்கவேண்டும் என்று நான் வற்புறுத்துவதால், அகில இந்தியாவிலும் பேசும் தொடர்பு மொழியாக ஹிந்துஸ்தானி வளர்வதை நான் எதிர்ப்பதாக எண்ணலாகாது. ஹிந்துஸ்தானி தெரியாதவர்களுக்குப் பிரதிகூலம் செய்யாத முறையில் அம்மொழி வளர்ச்சியடையலாம். பேச்சுத் தொடர்புக்கு ஹிந்துஸ்தானி ஒரு பெரிய சக்தி என்பதை ஒப்புக்கொள்வோம். ஆனால் சர்வகலாசாலைகளிலும், அரசாங்க நிருவாகத்திலும் ஆங்கிலத்தை அகற்றலாகாது. ஹைதராபாத்துக்கு வடக்கே உள்ள பகுதி மட்டுமே இந்தியாவாகி விடாமல் இந்தியா என்பது அகில இந்தியாவாக நீடிக்க வேண்டுமாயின் ஆங்கிலத்தில் போதனை நடப்பது நீடித்தேயாக வேண்டும்.

* * *

கல்வி புகட்டுவதில் அநுபவம் பெறாதவர்கள் போதனை மொழி பற்றிப் பேசுகிறார்கள். இவர்கள் பிரச்னையைத் தவறாகப் புரிந்துகொண்டிருக்கின்றனர். அறிவு புகட்டுவதே எந்தப் போதனைக்கும் லட்சியம். போதனை என்பது புத்தகத்தில் இருப்பதை விளக்கி அறிவை விருத்தி செய்வதாகும். இதை மாணவர்கள் புரிந்துகொள்ளும் எந்த மொழியின் மூலமும் செய்யலாம். புத்தகங்களும் ஆதார நூல்களும் ஆங்கிலத்தில் இருப்பினும் கூடப் புரியாத இடங்களில் அவற்றைப் பிரதேச மொழிகளில் விளக்கத் தடையே இல்லை. 'அறிவு புகட்டுவது' என்ற லட்சியத்தை மனத்தில் வைத்துக் கொண்டால் எந்தச் சிக்கலும் இல்லை. இவ்வாறு பிரதேச மொழியில் விளக்கம் தருவது பற்றி நான் பல முறை எழுதியிருக்கிறேன். என் கருத்து என்றும் மாறவில்லை.

* * *

வெவ்வேறு கருத்துக் கொண்டவர்கள் ஒரே தேசிய மந்திரி சபையாக அமைந்து பணி செய்வதில் உள்ள கஷ்டத்தைப் பற்றி ஸ்ரீமதி இந்திரா காந்தி குறிப்பிட்டிருக்கிறார். அவர் கூறுவது உண்மை. இதே சிரமத்தின் காரணமாகத்தான் எதிர்க் கட்சிகள் யாவும் ஒன்று சேர்ந்து புது தில்லியிலுள்ள காங்கிரஸ் சர்க்காரை அகற்ற முடியவில்லை.

ஆயினும் ஒரு விஷயத்தைக் கவனிப்போம். பிரதமரும், ஸ்ரீ மொரார்ஜி தேசாயும் ஸ்ரீ சவானும் தங்களிடையே பெருத்த கருத்து வேற்றுமை கொண்டுள்ளனர் என்பது 'அதிகாரபூர்வமாக' மறுக்கப்பட்ட போதிலும், இதுவே உண்மை நிலை என்பது நன்கு தெரிந்த விஷயம். கட்சி நலனை உத்தேசித்தே இவர்கள் ஒன்று கூடிப் பணி புரிகிறார்கள். அவ்வாறிருக்க, கட்சி நலனை விடப் பெரியதான தேச நலனை முன்னிட்டு எதிர்க் கட்சிக்காரர்கள் ஒன்றுபட்டுச் செயல் புரிவது கடினமல்ல. விவேகமும், நெகிழ்ச்சியும் இருந்தால் இது நடந்துவிடும்.

அமெரிக்காவும் பிரிட்டனும் ருஷியாவும் ஹிட்லரை எதிர்த்து ஒன்று சேரவில்லையா? ஹிட்லர் செய்த தீமைக்கு ஏறக்குறைய ஈடான குழப்பம் இந்தியாவின் பொருளாதாரத்திலும், நிதி நிலைமையிலும் இன்று ஏற்பட்டுள்ளது. பயங்கரமான ஆயுதப் போட்டியில் நம்மை ஈடுபடுத்தியுள்ள அந்நியக் கொள்கை பற்றியோ கேட்கவே வேண்டாம். முன்பு ரூஸ்வெல்டையும் சர்ச்சிலையும் ஸ்டாலினையும் ஒன்று சேர்த்த சக்தியை நாமும் பெற வேண்டும்.

வருந்துகிறோம்

உயிர் பிரிந்த உத்தமி

செல்வச் சிறப்புக்களுடன் பணிவையும் எளிமையையும் சிறந்த பண்புகளையும் பெற்றிருந்த இலங்கையைச் சேர்ந்த பெருமாட்டியான ஸ்ரீமதி ராஜலக்ஷ்மி நடேசன் கோரமான கார் விபத்தில் காலமாகியதை விதியின் கொடுமை என்றே சொல்ல வேண்டும்.



ஸ்ரீமதி ராஜலட்சுமி நடேசன்


வீரகேசரி ஸ்தாபனம், அரசாங்க ஆதரவில் உள்ள ஹோட்டல் கார்ப்பரேஷன் ஆகியவற்றின் டைரக்டர்களில் ஒருவரும் பிரபல தொழில் அதிபருமான திரு ஆர். ஏ. நடேசனின் வாழ்க்கைத் துணைவியார் ஸ்ரீமதி ராஜலட்சுமி. சென்னைக்குச் சென்றிருந்த திரு நடேசன் 28ந் தேதி நண்பகல், விமான மார்க்கமாகக் கொழும்புக்குத் திரும்பினார். அப்பொழுது கண்டியிலிருந்த ஸ்ரீமதி நடேசன் கணவரைச் சந்திக்கக் கொழும்புக்குத் திரும்புகையில் விபத்துக்குப் பலியாகி விட்டார். அவரது தகனக் கிரியை கொழும்பு கனத்தை மைதானத்தில் நடைபெற்றபொழுது கவர்னர் ஜெனரல் திரு வில்லியம் கோபல்லவ, பார்லிமெண்ட் அங்கத்தினர்கள், நீதிபதிகள், மந்திரிகள், அரசியல் கட்சித் தலைவர்கள், தொழிலதிபர்கள் முதலானவர்கள் ஆயிரக்கணக்கில் திரளாக வந்திருந்து அஞ்சலி செய்தது ஸ்ரீமதி நடேசனின் சிறப்பியல்புகளுக்கு ஒரு சான்று.

வாழ்க்கைத் துணைவியைப் பிரிந்து வருந்தும் திரு நடேசனுக்கு நாம் என்ன ஆறுதல் கூறித் தேற்ற முடியும்?

வழக்கறிஞர் பிரிவு

சிறந்த [வழக்கறிஞர்களில் ஒருவரான ஸ்ரீ ஆர். வெங்கட்ராம் அவர்களின் மறைவு குறித்து மெத்த வருந்துகிறோம். பர்மாவிலும் பிறகு சென்னை ஹைகோர்ட்டிலும், ஸுப்ரீம் கோர்ட்டிலும் வக்கீலாகப் பணி புரிந்தவர் ஸ்ரீ வெங்கட்ராம். வழக்கறிஞர் சங்கத்தில் முக்கியமான பங்கு பெற்றிருந்ததுடன் பல துறைகளில் அவருக்கிருந்த ஈடுபாடு காரணமாகவும், அவரது அன்னியோன்னிய பண்பு காரணமாகவும் ஏராளமான நண்பர்களைப் பெற்றிருந்தார். அவர்களுக்கு ஸ்ரீ வெங்கட்ராமுடைய மறைவு பேரிழப்பாகவே இருக்கும்.

தமிழன்பர் மறைவு



பிரபல விசைப் பொறி இயல் நிபுணரும் சிறந்த தமிழன்பருமான ஸ்ரீ டி. எஸ். சீதாபதி அவர்களின் திடீர் மறைவு நமக்கு அதிர்ச்சியூட்டியது. பல்லாண்டுகள் கல்கத்தாவில் ஒரு கேபிள் கம்பெனியில் பணிபுரிந்த அவர் மின்சாரத் துறையில் செய்துள்ள தொண்டு அளவற்றது. பல தொழில் குழுக்களுக்குத் தலைவராக இருந்தார் அவர். கலாசார, ஆன்மிகத் துறைகளிலும் ஸ்ரீ சீதாபதி பெயர் எடுத்திருந்தார். பிரபல டென்னிஸ் ஆட்டக்காரர் ஆர். கிருஷ்ணனின் மாமனார் இவர். கல்கத்தா தமிழ்ச் சங்கத்தின் தலைவராக இருந்து அவர் ஆற்றியுள்ள அரும் பணியைத் தமிழன்பர்கள் நன்கு அறிவர். அவரது பிரிவினால் வருந்தும் குடும்பத்தினருக்கும், நண்பர் குழாத்துக்கும் நமது அநுதாபங்கள்.

விசித்திர விவகாரம்

க. சந்தானம்

திரு மொரார்ஜி தேசாய் மிகவும் கண்டிப்பானவர். தனது முடிவுகளைத் தெளிவாகவும் அழுத்தமாகவும் வெளியிடும் சுபாவம் உள்ளவர். மத்திய அரசாங்கத்துக்குத் தாங்கள் கொடுக்க வேண்டிய கடன்களின் வட்டிகளை வசூல் செய்யாமல் நிறுத்தி வைக்க வேண்டுமென்றும், கடன்களையே ஓரளவு ரத்து செய்ய வேண்டுமென்றும் கோரிய ராஜ்ய அரசாங்கங்களுக்கு அவ்வித யோசனைகளைக் கவனிக்க முடியாது என்று கன்னத்தில் அறைவதுபோல் கூறி விட்டார். ராஜ்யங்கள் வட்டிகளையும் கடன்களையும் திருப்பிக் கொடுக்காவிட்டால் மத்திய அரசாங்கம் அவற்றுக்கு எவ்விதம் மேலும் உதவி செய்ய முடியும் என்று வினவினார். இக்கேள்வி மிகவும் பொருத்தமாகத் தோன்றுகிறது. ஆனால் ஆழ்ந்து ஆலோசித்தால் அதில் நகைச்சுவையே அதிகம் என்றும் புலப்படும். 'நீங்கள் செலுத்த வேண்டிய கடன்களையும் வட்டிகளையும் நாங்களே எங்களுக்குச் செலுத்திக் கொண்டால் இதில் உங்களுக்கு என்ன கஷ்டம்' என்று கேட்டிருந்தால் அது எவ்வளவு ருசிகரமாக இருக்கும்? அதுதான் உண்மை.

நமது அரசியலில் மத்திய, ராஜ்ய அரசாங்கங்களுக்குள் வரி நிதிப் பிரிவினைகள் சிக்கலானவை. அவற்றை நான்கு பாகங்களாக வகுக்கலாம். சில வரிகள் மத்திய அரசாங்கத்துக்கும் மற்றும் சில வரிகள் ராஜ்யங்களுக்கும் ஏகபோகமாக ஒதுக்கப்பட்டிருக்கின்றன. ஐந்து ஆண்டுகளுக்கு ஒரு முறை ஒரு நிதிக் கமிஷன் நியமிக்கப்பட்டு அதன் சிபாரிசுகளின் பேரில் வருமான வரி, கொள்முதல் வரிகள் மூலம் வசூலாகும் தொகைகள் பங்கிடு செய்யப்படுகின்றன. ராஜ்யங்களின் தேவைகளைப் பரிசீலித்து நிதிக் கமிஷன் மானியங்கள் கொடுப்பதற்கும் சிபாரிசு செய்கிறது. மூன்றாவதாக ஐந்தாண்டுத் திட்டங்களின் புதிய செலவினங்களுக்காகத் திட்டக் கமிஷனின் சிபாரிசுகளின் பேரில், விசேஷ மானியங்கள் வழங்கப்படுகின்றன. கடைசியாகத் திட்டங்களின் முதலீட்டுக்காக மத்திய அரசாங்கம் ராஜ்ய அரசாங்கங்களுக்குக் கடன்கள் கொடுத்து வருகிறது. இக்கட்டுரை இக்கடன்களைப் பற்றியே.

ஃ ஃ ஃ

அரசியல் சாஸனத்தில் மத்திய, ராஜ்ய அரசாங்கங்கள் நேரில் பொது மக்களிடமிருந்து கடன் வாங்கலாமென்றும், மத்திய அரசாங்கம் ராஜ்யங்களுக்குக் கடன் வழங்கலாமென்றும் விதிக்கப்பட்டிருக்கிறது. சாதாரணமாகத் தமது முதலீடுகளுக்கு ராஜ்யங்கள் நேரில் கடன் பத்திரங்கள் மூலம் நிதி திரட்ட வேண்டுமென்பதும், பெரும் வெள்ளம், பூகம்பம் போன்ற எதிர்பாராத நெருக்கடிகளைச் சமாளிக்க மத்திய அரசாங்கம் கடன் கொடுத்து உதவ வேண்டும் என்பதும் அவ்விதிகளின் நோக்கம். ஆனால் ஐந்தாண்டுத் திட்டங்களின் மூலம் நாட்டின் பொருளாதாரத்தை விரைவில் பெருக்க வேண்டுமென்று முடிவு செய்ததும், ராஜ்யங்களின் முதலீடுகளில் பெரும் பாகத்தை மத்திய அரசாங்கம் கடனுகக் கொடுப்பது அவசியமாயிற்று. ராஜ்யங்களுக்கு வேண்டிய முதல் தொகைகளை நேரில் மக்களிடமிருந்து பெறுவது சாத்தியமில்லை. மேலும் திட்ட முதலீடுகளில் கணிசமான பாகம் வெளிநாட்டுக் கடன்கள் மூலம் கிடைத்தது. அதை ராஜ்யங்களோடு பங்கிடு செய்வதும் கடன்கள் மூலமாகவே செய்ய வேண்டும்.

முதல் திட்டத்தில் பாரத அரசாங்கம் ராஜ்ய அரசாங்கங்களுக்கு ரூ. 799 கோடி கடன் வழங்கிற்று. இது இரண்டாவது திட்டத்தில் ரூ. 1410 கோடியாகவும், மூன்றாவது திட்டத்தில் ரூ. 3101 கோடியாகவும் அதிகரித்தது. நான்காவது திட்டத்தில் 1966–67ல் ரூ. 916 கோடியும், 1967–68க்கு ரூ. 728 கோடியும், ஆக இரண்டு வருஷங்களுக்கு ரூ. 1644 கோடி ஒதுக்கி வைக்கப்பட்டன. 1968 மார்ச்சு 31ல் ராஜ்யங்கள் மத்திய அரசாங்கத்திடம் பெற்றுள்ள கடனின் மொத்தம் ரூ. 4977 கோடியாக இருக்கும் என மதிப்பிடப்பட்டிருக்கிறது.

இக்கடன்கள் ராஜ்யங்களுக்கு மொத்தமாகவோ, குறிப்பிட்ட வட்டியும்

தவணையுமுள்ளனவாகவோ வழங்கப்படவில்லை. ஆண்டுதோறும் ஒவ்வொரு ராஜ்யத்துக்கும் பல கடன்கள் வெவ்வேறு வட்டி விகிதம், தவணைகளுடன் கொடுக்கப்பட்டிருக்கின்றன. இவற்றின் கணக்குகளை வைத்துக் கொள்ளவும், வட்டி, முதலில் திருப்பிக் கொடுக்க வேண்டிய தொகைகளைக் கணக்கிடவும் மத்தியக் கணக்கர் காரியாலயத்தில் பல உத்தியோகஸ்தர்களும், நூற்றுக் கணக்கான சிப்பந்திகளும் இருக்கிறார்கள். முதல் இரண்டு ஐந்தாண்டுத் திட்ட காலங்களில் இந்தக் கடன்களுக்காகச் செலுத்த வேண்டிய வட்டித் தொகைகளும், முதல் தொகைகளில் தவணைப்படி திருப்பிச் செலுத்த வேண்டிய தொகைகளும் மத்திய அரசாங்கம் வழங்கும் கடனில் ஒரு சிறு பாகமாகவே இருந்தன ஆனால் அவை படிப்படியாகப் பெருகி இப்பொழுது கொடுக்கும் கடனில் கணிசமான பாகத்தை ஒவ்வொரு ராஜ்யமும் திருப்பிக் கொடுக்க வேண்டியிருக்கிறது. மூன்றாவது திட்ட காலத்தில் இது 40 சதவீதமாக இருந்தது. 1966–67. 67–68ல் மொத்தக் கடன் ரூ. 1644 கோடியில் வட்டிக்காக ரூ. 376 கோடியும், முதலுக்காக ரூ. 618 கோடியும் ஆகமொத்தம் ரூ. 994 கோடி திருப்பிக் கொடுக்க வேண்டும். இது 60 சதவீதம் ஆகிறது. நான்காவது திட்டத்தின் இறுதியில் மத்திய அரசாங்கம் கொடுக்கும் கடன்களும் ராஜ்யங்கள் செலுத்தும் தொகைகளும் ஏறக்குறைய சரிசமானமாகி விடக்கூடும்.


ஃ ஃ ஃ

தங்களுக்குக் கிடைத்த கடன்களை ராஜ்யங்கள் லாபம் தரக்கூடிய துறைகளில் முதலீடு செய்து அவற்றின் வருமானத்திலிருந்து மத்திய அரசாங்கக் கடன்களுக்கு ஈடு கொடுத்திருந்தால் இந்த ஏற்பாடு நன்றாகத்தான் இருக்கும். ராஜ்யங்களின் பொருளாதாரமும் அதன் மூலம் நாட்டின் செல்வமும் வளர்ந்திருக்கும். ஆனால் ராஜ்யங்கள் மத்தியக் கடன்களில் ஒரு பாகத்தைக் கல்லூரிகளும் வைத்தியசாலைகளும், அலுவலகங்களும் கட்டுவதில் செலவழித்து விட்டன. மற்றோர் பகுதியை விவசாயிகளுக்குக் கடனாகக் கொடுத்தன. சில ராஜ்யங்களில் இந்தக் கடன்கள் சுமாராக வசூலிக்கப்பட்டன. பெரும்பான்மையில் அவை வசூலிக்கப்படாமல் தேங்கிக் கிடக்கின்றன. நீர்ப்பாசனம், மின்சார உற்பத்தி, அரசாங்கப் பஸ் போக்குவரத்து முதலிய தொழில் துறைகளில் ஈடுபடுத்தப்பட்ட முதல்களுக்கும் பல ராஜ்யங்களில் லாபம் கிடைப்பதில்லை.

ஆதலால் ராஜ்யங்கள் கடன்களுக்காகச் செலுத்தும் தொகைகள் பெரும்பாலும் மத்திய அரசாங்கம் கொடுக்கும் புதிய கடன்களிலிருந்தே ஈடு செய்யப்படுகின்றன. பாரத அரசாங்கம் வலது கையால் கொடுத்து இடது கையால் எடுத்துக் கொள்கிறது. ஏதாவது கொஞ்சம் மிஞ்சும் வரையில் ராஜ்யங்கள் பொறுத்துக் கொண்டுதான் இருக்க வேண்டும். மொரார்ஜி தேசாய் கண்டிப்பாக இருக்கலாம்.

ஆனால் இரண்டு கைகளின் தொகைகள் சரிசமமாகப் போகும்பொழுது ராஜ்யங்கள் ஒன்று கூடி மத்திய அரசாங்கத்துக்கு எதிராகக் கிளர்ச்சி செய்யும் என்பதில் சந்தேகமில்லை. 'உங்கள் உதவியும் வேண்டாம். நாங்களும் ஒன்றும் கொடுக்க மாட்டோம்' என்றுகூடச் சொல்லக் கூடும். கணவன் மனைவிக்கும், அவிபக்த குடும்பத்தில் தந்தைக்கும் மகனுக்கும் உள்ள கடன் ஒப்பந்தங்கள் செல்லுபடியாகா. அதைப் போலவே கூட்டு அரசாங்கத்தில் மத்திய - ராஜ்ய அரசாங்கங்களின் லேவாதேவிகளும்.

நாட்டின் பொருளாதார நலத்தை நாடுவோர் இம்முறைக்கு உடனே முடிவு கட்ட வேண்டும் என்று ஒப்புக் கொள்ளுவார்கள். மத்திய அரசாங்கம் தனது முதலீட்டுக்கு மட்டுமே கடன் வாங்கிக் கொள்ள வேண்டும். ராஜ்ய அரசாங்கங்களின் முதலீடுகளுக்குக் கடன் வழங்க உலக பாங்கியைப் போல் ஒரு தனி பாங்கியையோ, ரிஸர்வ் பாங்கியில் ஒரு தனி பிரிவையோ ஏற்பாடு செய்ய வேண்டும். அந்த ஸ்தாபனம் ராஜ்யத்தின் முதலீட்டுத் திட்டங்களை நன்கு பரிசீலித்துத் தனது கடன் வட்டியுடன் திரும்புவதற்கு வேண்டிய நிபந்தனைகளுடன் கடன் வழங்க வேண்டும். இதுகாறும் வழங்கிய கடன்களை ரத்து செய்ய மத்திய அரசாங்கம் ஏற்காவிடினும், அவற்றை ஒரு நீண்ட காலக் கடனாக மாற்ற வேண்டும். வட்டியில்லாமலோ அல்லது மிகக் குறைந்த வட்டியோ விதிக்க வேண்டும். லாபம் தரக்கூடிய முதலீடுகளுக்கு, ராஜ்யம் நேரி பொதுமக்களிடமிருந்து கடன் வாங்கிக் கொள்ள வேண்டும். இவ்வித ஏற்பாடு உடனடியாகச் செய்யாவிடில் மத்திய, ராஜ்ய அரசாங்கங்களின் பொருளாதார உறவுகள் படிப்படியாகச் சீரழிந்து நெருக்கடியில் முடியும்.




ரிட்ஸ் குரூப் ஆப் ஹோட்டலின் டைரக்டரான ஸ்ரீ கே.எஸ். ஸ்ரீநிவாசன் அவர்கள் மருமான் சௌபாக்யவதி சரோஜாவுக்கும், லொக்ஹோ லேப ரட்டரீஸ், ஸ்ரீ R. சாம்பசிவன் அவர்கள் குமாரர் சிரஞ்சீவி U. S. ரகுராமன் B. Sc., Text க்கும் சமீபத்தில் செம்பூரிலுள்ள திரு ஸ்ரீநிவாசன் அவர்கள் இல்லத்தில் திருமணம் சிறப்பாக நடைபெற்றது.

வாழ்க மணமக்கள் !

ஷஷ்டியப்தபூர்த்தி



திருமணப் பத்திரிகை நிருபரும், T. T. D. பப்ளிகேஷன்ஸ் ஏஜெண்டுமான ஸ்ரீ T.K. விஜயராகவனின் மாமனார் (சென்னை கஸ்டம்ஸ் ஹவுஸ், சூப்பரின்டெண்டெண்ட்) ஸ்ரீ C. R. துரைசாமி ஐயங்காருக்கு 23-7-67ல் ஷஷ்டியப்தபூர்த்தி வைபவம் தியாகராயநகர் 12 வைத்தியராம அய்யர் தெருவிலுள்ள தனது சொந்த பங்களாவில் சிறப்பாக நடைபெற்றது.



ஸ்ரீ விசாலம் சிட் பண்டு லிமிடெட்

உயர்வின் சின்னம்


ஸ்தாபிதம் : 1947

பதிவு செய்யப்பட்ட அலுவலகம் :
திருநெல்வேலி-6.


31-3-1967 அன்று
அதிகாரம் பெற்ற மூலதனம் : ரூ. 5,00,000.

மத்திய அலுவலகம் :
61-B. உஸ்மான் ரோடு.
தி. நகர். சென்னை-17.
போன் : 442916

கடந்த 20 ஆண்டுகளாக பொதுமக்களுக்கு சிறந்த சேவை செய்துவரும் புகழ் பெற்ற ஸ்தாபனம்!



வட்டி 9½% P.A. வரை.



காரண்டி செய்த லோன்: கல்கத்தா ரிசர்வ் பாங்க், பாங்க் அல்லாத நிதி கம்பெனிகள் டிபார்ட்மெண்ட் 29-10-66ல் வெளியிட்ட நோட்டிபிகேஷன் DNBC. I/ED (s)-66 பாரா 2 (1) (f)ன் சப்ளாஸ் (X)ன்படி வாங்கப்படுகின்றன.

வட்டி விகிதம்

தவணை	ரூ. 300லிருந்து ரூ. 5000 வரை	ரூ. 5000க்கு மேல்
ஒரு வருடம்	8½%	9%
இரண்டு வருடம்	9%	9½%

தொழில் விபரம்

தினசரி, மாதம் மூன்று முறை, மாதம் ஒரு முறை உள்ள ஏலச் சீட்டுகள் நடத்துதல், ரூ. 10,000 வரை மதிப்புள்ள சீட்டுகள் எங்கள் 23 ஆபீஸ்களில் நடத்தப்படுகின்றன.

கம்பெனி நிர்வாகம்

மானேஜிங் டைரக்டர் :
ஸ்ரீ K. M. K. முத்தையா செட்டியார்

டைரக்டர்கள் :
ஸ்ரீ M. A. M. கோவிந்தன் செட்டியார்
ஸ்ரீமதி RM. மெய்யம்மை ஆச்சி

ஜெனரல் மானேஜர் :
ஸ்ரீ AR. ராமசுவாமி

மத்திய அலுவலக மானேஜர் :
ஸ்ரீ K. A. ராம், பி. ஏ., பி. எல்.

கடந்த மூன்று வருடங்களின் ஆதாயமும், டிவிடெண்டு விவரமும் :

	வரி கொடுப்பதற்கு முன் லாபம்	வரி கொடுத்த பின் லாபம்	டிவிடெண்டு விகிதம்
1963-64	41436-49	16429-24	12%
1964-65	41825-20	14295-70	12%
1965-66	61908-72	25170-72	13%

பொறுப்புகள் : 31-3-1966

செலுத்தப்பட்ட மூலதனம் ரூ.	1,02,966
ரிசர்வ் நிதி ,,	17,157
டெபாசிட்டுகளும் கடன்களும்	5,86,914
சீட்டு இதர வகை பொறுப்புகள்	ரூ 77,65,565
மொத்தம்	ரூ. 84,72 602

ஒவ்வொரு மாதமும் புதிய சீட்டு குரூப் 25,000 முதலுடன் ஆரம்பமாகிறது!
மாதம் ரூ. 1250 விதம் 20 தவணைகள்.

ஏலங்கள் வழக்கம்போல் எங்கள் திருச்சி கிளையில் நடைபெறும்.

தணிக்கை செய்யப்பட்ட பாலன்ஸ்ஷீட்டுகள் கோர விரும்புகிறவர்களுக்கு அனுப்பி வைக்கப்படும்.
எமது கிளைகளுடன் தொடர்பு கொள்ளப் புதிய டெலிபோன் டைரக்டரியைப் பார்க்கவும்.

அனுமதித்த தேதி 27—6—67

K. M. K. முத்தையா செட்டியார்
மானேஜிங் டைரக்டர்

Paramount

முழுக்க முழுக்க உண்மை.

சென்ற வியாழக்கிழமை இரவு புது தில்லி இந்தியத் தொழில் நுணுக்கக் கல்லூரியில் மூன்று பேராசிரியர்களும் முப்பது கணித மாணுக்கர்களும் இரவு முழுதும் கண் விழித்து நாற்பத்தாறு சிக்கலான கணக்குப் பிரச்னைகளைத் தயாரித்தார்கள். அவைகளுக்கு விடை இயந்திர சாதனங்கள் மூலம் கண்டு பிடித்தார்கள். எல்லாம் ஓர் இளநங்கையைச் சோதிக்க என்று எண்ணும்போது வியப்பு மேலிடுகிறதல்லவா ?

அந்நங்கை வேறு யாருமில்லை. உலகப் பிரசித்தி பெற்ற சகுந்தலா தேவிதான்.

இல்லை. நாம் படித்திருந்தும் ரஸிகமணி தற்காலப் பள்ளிப் படிப்பை அறவே வெறுத்தவர் அல்லவா?

ஃ ஃ ஃ

பிறந்த உடனேயே தாயாரைப் பறிகொடுத்தவர். பிறப்பதற்குச் சில நாட்கள் முன்பு தந்தையும் காலமானர். கடவுளைத் தவிர வேறு யாரும் கருணை காட்ட முன்வரவில்லை. பல இன்னல்களுக்கிடையே வளர்ந்தார். அதிருஷ்டக்கட்டை; அபசகுனம் என்றனர் உறவினர்கள்.

மூன்றுவது வயதில் பெரிய பெரிய கூட்டல்களை அலட்சியமாய் விநாடிகளில் போட்டுச் சக மாணவி

ஐ.ஐ.டி.யில் சிவராத்திரி

"சப்புரு"

'இது ஒரு கலியுக அற்புதம்' என்று மகாகனம் சாஸ்திரியார் பாராட்டினர்! ஏன் தெரியுமா?

மறு நாள் நடந்த கணக்கு விழாவில் சுமார் ஆயிரம் மாணுக்கர்களும், கணக்குப் புலிகளும், மற்றேரும் எள்ளுப் போட்டால் எண்ணெயாகும் ஒழுகும் நெருக்கத்தில் அமர்ந்திருந்தார்கள்.

கூட்டல், கழித்தல், பெருக்கல்களெல்லாம் 'தள்ளிப்பட்ட பாடம்'; இன்னுக் கிரை போங்கள்! ஸ்குயவர் ரூட், க்யூப் ரூட் போன்ற பெரிய பெரிய கணித முறைகளை ஊதித் தள்ளப்பட்டபோது இவைகள் எம்மாத்திரம்.

ஒரு போர்டு முழுதும் அடைத்துக் கொண்ட ஒரு கணக்கு. 'பல ஸ்தானங்களுக்கு நீண்டு கிடக்கும் தசாம்சங்கள்; அவைகளின் சின்னுபின்னமான பின்னங்கள்; கூட்டல் கழித்தல் வகுத்தல் இடையே; பெரிய கூட்ஸ் வண்டித் தொடர் மாதிரி மேலும் கீழும் கோடிட்டுப் பார்ப்பவர்க்கே தலையைச் சுற்றிற்று.

புன்னகை தவழும் முகத்துடன் சகுந்தலா தேவி போர்டை ஒரு நோட்டம் விட்டார். " இந்தா பிடி " என்ற தோரணையில் விடையை வடை சுடுவது போல் வெளியே போட்டார்.

எடுத்துக் கொண்ட காலம்—பதினைந்து விநாடிகள்.

கணக்கெழுத எடுத்துக் கொண்ட காலம் — பதினைந்து நிமிஷங்கள்.

உங்கள் பிறந்த தேதியைச் சொல்லுங்கள். கிழமையைச் சொல்லுகிறார், க்ஷண மாத்திரத்தில்.

வருஷத்தில் ஒரு தேதியைச் சொல்லுங்கள். வருடம் முழுதும் அந்தத் தேதி எந்தெந்த நாட்களில் வருகிறது என்று ஸ்ப்ராண்டியர் மெயில் வேகத்தில் சொல்லுகிறார் இந்தச் சின்னப் பெண்மணி.

பேராசிரியர்களெல்லாம் பேராச்சரியத்தில் மூழ்கிப் பேரா — சிறியர்களானர்கள்.

இத்தனைக்கும் டி. கே. சி. கோஷ்டியைச் சேர்ந்தவர். இவர் மழைக்குக் கூடப் பள்ளிக்கூட நிழலில் ஒதுங்கிய



களை வியக்க வைத்தார். உறவினர்கள் விழித்துக்கொண்டார்கள். அவளைப் பணம்பண்ணும் இயந்திரமாக்கி மிட்டாய்க்கும், ரவிக்கைத் துண்டுகளுக்கும் நிகழ்ச்சிகள் ஏற்பாடு செய்து வதைத்தார்கள்.

''பன்னிரண்டாவது வயதில் மனம் நொந்து வீட்டை விட்டு வெளியேறினேன் ; பூமாதேவியை நம்பி'' என்று கூறிக் கண்ணீர் மல்கிய கண்களுடன் விளங்கும்போது நமக்குத் தொண்டையை ஏதோ அமுக்குகிறது.

மகாகனம் ஸ்ரீநிவாச சாஸ்திரியார் மூக்கின் மேல் விரல் வைத்து, ''இது ஒரு கலியுக அற்புதம்'' என்றார்.

ஆகஸ்டு 28, 1950ஐ மறக்கவொண்ணாத தினமாகக் கருதுகிறார் சகுந்தலா. அன்றுதான், ஐரோப்பா பயணம் ஆரம்பமாயிற்று.

பி. பி. ஸி.யில் நடந்த ஒரு பேட்டி அவர் மனத்தில் பசுமையாயிருக்கிறது. சிக்கலான ஒரு கணக்கைப் பார்த்த க்ஷணமே ''தப்பு'' என்று கூவி விட்டாராம். பி. பி.ஸி.யைச் சார்ந்த திரு லெஸ்லி. மிச்சல், பரிசோதித்துப் பார்த்து மன்னிப்புக் கேட்டுக் கொண்டார்.

டர்பனில் ஒரு விநோதமான சம்பவம். 18,000 பவுன் பெறுமானமுள்ள Digital Electronic Computer இன் பல்லை இளித்துவிட்டார். உலகிலேயே மிக வேகமாகக் கணக்கிடும் இயந்திரம் இந்தக் குமாரியிடம் தோல்வியுற்றது. நேடால் சர்வகலாசாலை உயர் பேராசிரியர் திரு எஸ். இ. க்ருயிஸ் தோல்வியை ஒப்புக் கொண்டார்.

உலகமெங்கும் ஜெயக்கொடி நாட்டிவிட்டு வந்திருக்கும் சகுந்தலா மிக எளிமையானவர். ஆங்கிலம், தமிழ், கன்னடம் சரளமாகப் பொழிகிறார். பேச்சுக்களில் ஹாஸ்ய ரஸம் ததும்பி ஓடுகிறது. எவ்வளவு முரட்டுக் கூட்டமாயினும் சிரிப்பலைகளை எழுப்பி ஆச்சரியப்படத்தக்க முறையில் ஒழுங்கை நிலவ வைக்கிறார்.

''இப்படியே வாழ்நாளெல்லாம் கணக்குத்தானா, மணக்காமலே?'' என்றேன்.

''ஒருகாலுமில்லை. எந்த க்ஷணமும் மணக்க மணக்க, மணக்கத் தயார். ஓர் இந்தியப் பெண்ணுக்கு இல்லறத்தைவிட இன்பம் தருவது எது? ஆமாம், உங்கள் கண்ணில் யாராவது நல்ல பையன் தென்பட்டால் சொல்லுங்கள். எனக்கு முப்பத்தொன்று முடிந்து விட்டது. அப்படி ஒன்றும் நான் கிழவியாயில்லை அல்லவா?'' என்று போட்டாரே ஒரு போடு.

ஃ ஃ ஃ

நாடகத்தில் நல்ல ஈடுபாடு. நடிப்பதில்லை. எழுதியுள்ளார். கன்னட மேடைகளில் அவை அரங்கேற்றப்பட்டுப் பரிசுகள் பெற்றிருக்கின்றன.

புல்லாங்குழல் நன்றாக வாசிப்பாராம். எந்தக் கண்ணன் காத்திருக்கிறானோ !


வாழ்த்துக் கூறுகிறோம்



'கல்கி' துணைஆசிரியர் ஸ்ரீ கி. ராஜேந்திரன் அவர்கள் அமெரிக்க அரசின் அழைப்பைப் பெற்று இம்மாதம் அந்நாட்டுக்குப் புறப்படுகிறார் என்ற மகிழ்ச்சிச் செய்தியை வாசகர்களுக்குத் தெரிவிக்கிறோம்.

1960ல் பிரிட்டிஷ் சர்க்காரின் அழைப்பைப் பெற்று இங்கிலாந்து சென்ற ஸ்ரீ ராஜேந்திரன் 1964ல் தாம்ஸன் ஃபௌண்டேஷனின் அழைப்பின் மீது மீண்டும் ஒரு முறை இங்கிலாந்து சென்று, பத்திரிகைத் தொழிற் கல்வியில் பயிற்சி பெற்றார். இப்போது மூன்றும் முறையாக அயல் நாடு சென்று தமது அறிவைப் பெருக்கிக் கொண்டு, அதன் பயனைக் 'கல்கி'க்கும் புதுச் சிறப்புக்கள் கூட்டித் தரும் வாய்ப்பு அவருக்குக் கிடைத்துள்ளது.

அமெரிக்காவின் கிழக்கரையிலிருந்து மேலக்கரை வரையில் இரண்டு மாதங்கள் சுற்றுப் பிரயாணம் செய்துவிட்டு நவம்பர் மூன்றும் வாரத்தில் தாயகம் திரும்புகிறார் ஸ்ரீ ராஜேந்திரன். அவரது அந்நியப் பயணம் வெற்றிகரமாக நிறைவேற விநாயகப் பெருமானின் திருவருளை வேண்டுகிறோம்.



Criterion-ICT-1129

தெய்விகப் பேரவை



திருமடங்கள் யாவும் ஒன்று சேர்ந்து ஹிந்து சமயப் பிரசாரம் புரியவேண்டும் என்ற மேலான நோக்கத்துடன், ஸ்ரீ காமகோடி பெரியவர்களின் திட்டப்படி தெய்விகப் பேரவை ஒன்று சென்ற ஆண்டு நிறுவப்பட்டதல்லவா? முதலாண்டு சென்னையில் மாபெரும் கூட்டம் நடத்திய பேரவை இவ்வாண்டு ஜூலை 28, 29 தேதிகளில் மாயூரத்தில் கூடியது. பேரவையின் தலைவரான தருமை ஆதீனகர்த்தர் அவர்களும், மற்றும் திருப்பனந்தாள், குன்றக்குடி, மதுரை, (ஞான சம்பந்தர் மடம்), காஞ்சி (தொண்டை மண்டல ஆதீனம்), மயிலம், பேரூர், கோவை (கௌமார மடம்) ஆகிய ஆதீனகர்த்தர்களும் இந்து சமய வளர்ச்சிக்கான பணிகளை ஆராய்ந்தனர். தஞ்சை மாவட்டக் குழுவின் தொடக்க விழாவாகவும் இக் கூட்டம் அமைந்தது. மடாதிபதிகள் ஓரே மேடையில் கூடி நிகழ்த்திய நல்லுரைகளைப் பல்லாயிரக்கணக்கான மக்கள் கேட்டுப் பெருமகிழ்ச்சி கொண்டனர். 35,000 ரூபாய் செலவில் வாங்கப்பட்டுள்ள பிரசார வாகனமும் ஹிந்து சமயப் பணியில் ஈடுபடுத்தப்பட்டது.


ஜூலை 29ந் தேதியன்று மற்ற மடாதிபதிகளுக்குத் தருமை ஆதீனகர்த்தர் வைபவமாக வரவேற்பு அளித்து அவர்களுக்கெல்லாம் பொன்னாடை போர்த்தினர். அவர்களும் தருமை அதிபருக்குப் பொன்னாடை போர்த்தினார்கள்.

சமயப் பணியைச் சமூகப் பணியில் குழைத்துத் தரவேண்டுமென்ற பேரவை நோக்கப்படியே திருவாவடுதுறை ஆதீனகர்த்தரும், தருமை ஆதீனகர்த்தரும் மன்னம்பந்தலில் ஓர் அநாதை இல்லம் நிறுவுவதற்காக நூறு ஏக்கர் நிலம் வழங்கியுள்ளது குறிப்பிடத்தக்கது.

இதேபோல் பல பேரவைகள் நடைபெற்று இன்னும் பல மடாதிபதிகளும் அவற்றில் ஒத்துழைத்து, ஹிந்து சமய மறுமலர்ச்சிக்கு உதவுவர் என்ற நம்பிக்கை பிறந்துள்ளது.

புகைப்படம் : மேலே மடாலயத் தலைவர்கள். கீழே : சோமசுந்தரத் தம்பிரானும், அறநிலைய ஆணையர் திரு சாரங்கபாணி முதலியாரும் பேசுகின்றனர்.






உங்கள் சமையல்
பிரச்சினைக்கு முடிவு
காண்கிறது
கால்காஸ்
CALGAS
சமையல் அறையிலே கால்காஸ் இருந்தால், சமையல் செய்வதிலே உள்ள ஆனந்தம் உங்களுக்குப்புரியும். கால்காஸ் உபயோகிக்க எளிதானது...நொடியில் பற்றிக் கொள்கிறது ...உடனடியாக சூடு கொடுத்து, சமையல் நேரத்தை மணிக் கணக்கில் குறைக்கிறது...சிக்கனமானதும் கூட. கால்காஸ் சுத்தமானது..கரியில்லை புகையில்லை.. தேய்த்துக்கழுவும் தொல்லையில்லை.
கால்காஸ் அபாயமற்றது...
விசேஷமான மூடியைக் கொண்ட அபாயமற்ற இரும்பு சிலிண்டர்களில் கால்காஸ் வருவதால், ஒழுக்கோ, கையாளுவதில் தவறுதலோ எதுவும் நேராது.
வீட்டிலே டெலிவரி கொடுக்கப் படுகிறது
ஏக போக விநியோகஸ்தர்கள் :
ஈஸ்ட் கோஸ்ட் காஸ் கம்பெனி,
48-9-5 கோவாபரேடிவ் காலனி, துவாரகாநகர், விசாகப் பட்டிணம் 4. போன் : 3516
கன்னிமாரா அனெக்ஸ், மவுண்ட் ரோடு, மதராஸ் 2.
போன் : 83428
ஏஜெண்ட்ஸ்: மதராஸ், காக்கிநாடா, விசாகப்பட்டிணம், விஜயவாடா, ஏலூரு, குண்டூர், பலகோல், ராஜமுந்திரி, நெல்லூர், விஜயநகரம், மசூலிப்பட்டிணம்,நிசலம், காட்பாடி, ஓங்கோல், வாரங்கல், பாண்டிச்சேரி, காஞ்சிபுரம், கர்நூல், சித்தூர், திருப்பதி, பொப்பிலி, பார்வதிபுரம், ராமச்சந்திரபுரம், சோம்பேட்டா, நரசராவ்பேட்.
ஒரு கால்டெக்ஸ் தயாரிப்பு



வயிற்றுக் கோளாறுகளினால் எங்களுக்கு தொல்லை இல்லை

ஏனெனில் நாங்கள் இப்பொழுது பிலிப்ஸ் மில்க் ஆப மக்னிஷியாவை உபயோகித்துக் கொண்டு இருக்கிறோம்.

அதிகமான புளிப்புகளினால் ஏற்படும் வயிற்று கோளாறுகள் சிறந்த முறையில் மில்க் ஆப் மக்னிஷியா நிவாரணம் அளிக்கிறது.

பிலிப்ஸ மில்க் ஆப் மக்னிஷியா நவீன விஞ்ஞான முறைக்குத் தெரிந்த ஒரு புளிப்பு நிவாரணி — துரிதமாக பலனளிக்கும். நிச்சயமாகவும் இதமான முறையிலும் பூரண குணம் கிடைக்கும்.

அநேகமாக ஒவ்வொருவரும் சிற்சில சமயங்களில் அஜீரணம், வாயுப் பொருமல்; நெஞ் செரிச்சல், அல்லது பித்தம் முதலியவைகளால் அவதிப்படுகிறார்கள்.


ஒருபொழுதும் பிலிப்ஸ மில்க் ஆப் மக்னிஷியா உங்கள் வசம் இல்லாமல் இருக்க வேண்டாம். அபாயம் அற்றதும் நம்பிக்கையானதுமான பிலிப்ஸ மில்க் ஆப் மக்னிஷியா குடும்பத்தில் எல்லோருக்கும் தேவைப்படும்.

மலச்சிக்கலை பிலிப்ஸ மில்க் ஆப் மக்னிஷியா இதமான முறையில் நீக்கி உங்களுடைய ஜீரண உறுப்புகளை எப்பொழுதும் போல் இயங்கச் செய்கிறது.

பிலிப்ஸ்

மில்க் ஆப் மெக்னீஷியா

மான்யுபாக்சரர்: ரிஜிஸ்டர்ட் யூஸர்
டேய்ஸ் மெடிகல் ஸ்டோர்ஸ் (மான்யுபாக்சரிங்)
பிரைவேட் லிமிடெட்,
62, பண்டல் ரோட், கல்கத்தா-19



சுதந்திரம்


சக்கரவர்த்தி ராஜகோபாலாச்சாரியார்



''நம்முடைய சமூகம் சுதந்திர வாழ்க்கை அடைந்து விட்டது. சுதந்திரத்துடன் சுகமும் பெற வேண்டுமானால் மக்கள் அறவழியில் நிற்க வேண்டும். நின்றால், சுகமும் நிகரற்ற புகழும் பெறுவோம். ''கடவுளாவது! சாமியாவது!'' என்று பலர் இந்நாட்களில் தைரியமாகப் பேசுகின்றனர். இது நம்முடைய துர்ப்பாக்கியம். நாம் காணும் உலகமும் அற்புதப் பொருள்களும் வேகங்களும் ஒன்றிலிருந்து ஒன்று உண்டாவதைக் காண்கிறோம். எல்லாம் நியதியின்படி நடைபெற்றும் சுழன்றும் வருகின்றன. நியதி தானாக உண்டாகிவிடுமா? அனைத்துக்கும் காரணமான ஒரு வித்து இல்லாமல் இவ்வளவு உண்டாவதற்கில்லை. சூன்யத்திலிருந்தும் பொருளோ, வேகமோ, நியதியோ உண்டாகாது அல்லவா? நாம் ரசித்துக்கொண்டு விமரிசனம் செய்யக் கூடாத தன்மை படைத்த ஒரு காரணம் இருந்தே தீர வேண்டும். அதுவே பரம்பொருள். நியதி இயற்கையாகவே இருக்கிறது. அதற்குக் கடவுள் வேண்டியதில்லை என்று வாதித்துக் கடவுளுக்குப் பதிலாக இயற்கையைக் கொண்டாடுவதில் சாரம் ஒன்றுமில்லை.

கண்ணுக்குக் காணப்படவில்லை என்பது கடவுள் இல்லை என்பதற்கு ஒரு காரணமாகுமா? இரவில் நட்சத்திரங்கள் திரள் திரளாகக் காணப்படுகின்றன. பகலில் எல்லாம் மறைந்து போகின்றன. கண்ணைக் கொண்டு காணாத பொருள்கள் இல்லவே இல்லை என்று சாதிக்க முடியுமா? நம்முடைய அறிவின் வாழ்க்கையில் கடவுளைக் காணவில்லை என்கிற காரணத்தினால் கடவுளே இல்லை கடவுளுக்கு அவசியமுமில்லை என்று சாதிக்க வேண்டாம்.''

— 'ராமகிருஷ்ண உபநிஷதம்'



''இந்தியாவுக்குச் சுதந்திரத்தைச் சம்பாதித்துத் தந்த நமது அப்பன் வெறும் அரசியல்வாதியல்ல; தெய்வத்தைக் காட்டி வந்த முனிவருமாவான். காந்தி மகானுடைய அரசியல் அந்தரங்க உண்மையை அறிய வேண்டுமானாலும் அவருடைய சரித்திரத்தைப் படித்து விட்டால் மட்டும் போதாது. சம்பூரண காந்தியை அவருடைய பிரார்த்தனைக் கூட்டங்களில்தான் மக்கள் கண்டார்கள். எழுத்திலும்கூட அவருடைய அறவுரைகளில்தான் அவரைச் சரியாகக் கண்டு அறியலாம். நம்முடைய சுதந்திரத்தின் கனிந்த தனிச் சிறப்பு என்னவென்றால் அதன் வெற்றிச் சரித்திரத்தில் கலந்து வந்த கடவுள் பக்தியும், அதையொட்டிய சாத்வீகமும். அந்தத் தனிச் சிறப்பை மங்காமல் மறவாமல் நாம் காப்பாற்றி வரவேண்டும். அப்போதுதான் பாரத நாட்டுக்கு உலகத்தில் ஒரு தனி ஆசனம் இருக்கும். இல்லாவிடில் மற்றவர்களோடு பின் வரிசையில் பத்தோடு பதினொன்றாக இருக்க வேண்டியதுதான்.

நம்முடைய காந்தி மிக்க கர்மையான முனிவரும் தற்கால விஞ்ஞானக் கல்வியும் அனைத்தையும் அறிந்த இந்த யுகத்தின் ஆட்சேபனை ஐயப்பாடுகள் அனைத்தையும் படைத்தவர். இத்தகையவர், நம்முடைய அரசியல் தலைவர், ராம பஜனை செய்து வந்தார். மதங்கள் அனைத்திலும் ஒரே தெய்வம் என்பதைப் போதித்தார். இருபதாவது நூற்றாண்டில் ஓர் ஆஸ்திகராக விளங்கினார். இதைப் பாரத மக்கள் கல்வெழுத்தில் எழுதிய சாஸனமாக வைத்துக்கொண்டு வாழ்க்கை நடத்தவேண்டும். அப்படி நடத்தினால்தான் ஆண்டவன் அருள் பெற்றுச் சுதந்திரத்துடன் சுகமும் பெறுவோம்.'' — 'ரகுபதிராகவ'

தொகுப்பு: வி. ச. வாசுதேவன்



பிறந்த மண்



ஒரு சமயம் அபிசீனியாவுக்கு இரண்டு ஐரோப்பியர்கள் வந்து நாடு முழுவதையும் சுற்றிப் பார்த்தார்கள். அபிசீனிய தேசப் படத்தை வரைந்து அதில் காடு மலைகளையெல்லாம் குறித்தார்கள். எங்கெங்கே தங்கமும் வெள்ளியும் கிடைக்கும் என்று ஆராய்ந்தார்கள். அவர்கள் செய்வதையெல்லாம் பார்த்த குடிமக்கள் தலைநகரான அடிஸ் அபாபாவுக்கு வந்து சக்கரவர்த்தியிடம் விஷயத்தைச் சொன்னார்கள். உடனே அந்த இரு ஐரோப்பியர்களையும் அழைத்து வரும்படி சக்கரவர்த்தி கட்டளையிட்டார். அவர்களை வரவேற்று, உணவளித்து, ஏராளமான பரிசுப் பொருள்களையும் வழங்கி விடை கொடுத்து அனுப்பினார்.

ஐரோப்பியர்கள் தங்கள் தாய்நாட்டுக்குக் கப்பல் ஏறுவதற்காகக் கடற்கரைக்குச் சென்றார்கள். சக்கரவர்த்தியின் கட்டளைப்படி சில மெய்க் காவலர்களும் அவர்களோடு சென்றார்கள். கப்பல் ஏறப் போகும் தருணத்தில் அந்த இருவரையும் மெய்க்காப்பாளர்கள் தடுத்து நிறுத்தி அவர்களுடைய காலணிகளைக் கழற்றினார்கள். அவற்றை நன்றாகச் சுரண்டித் துடைத்து விட்டுத் திருப்பிக் கொடுத்தார்கள். ஐரோப்பியர்களுக்கு ஆச்சரியமாக இருந்தது. "இது என்ன விசித்

நியாயத் தீர்ப்பு

ஒரு நாள் ஒரு பெண் காணாமல் போன தன்னுடைய ஆடுகளைத் தேடிக் கொண்டு காடெல்லாம் சுற்றினாள். அங்கே ஒரு பாதையின் ஓரத்தில் செவிடன் ஒருவன் உட்கார்ந்து காட்டுக் கட்டைகளைப் போட்டு எரித்துத் தனக்குக் காப்பி தயார் செய்து கொண்டிருந்தான்.

"இந்த வழியாக என் ஆடுகள் வந்தனவா?" என்று செவிடனைப் பார்த்துக் கேட்டாள் அந்தப் பெண்.

எங்கே போய்த் தண்ணீர் குடிக்கலாம் என்று அந்தப் பெண் கேட்பதாக நினைத்துக் கொண்ட செவிடன், தூரத்தில் உள்ள ஒரு நதியைக் காட்டினான். அவளும் அவனுக்கு நன்றி தெரிவித்துவிட்டு அந்தத் திசையை நோக்கிப் போனாள். ஆற்றங்கரையில் அவளுடைய ஆடுகள் மேய்ந்து கொண்டிருந்தன. ஒரே ஒரு குட்டி மட்டும் பாறையிலிருந்து விழுந்து தன் காலை ஒடித்துக் கொண்டிருந்தது. அவள் கால் ஒடிந்த குட்டியைத் தூக்கிக் கொண்டு, மற்ற ஆடுகளையும் ஓட்டிக் கொண்டு வீட்டை நோக்கித் திரும்பினாள். வரும் பாதையில் செவிடனைப் பார்த்து, அவனுக்கு நன்றி தெரிவித்துவிட்டு, அந்தக் கால் ஒடிந்த குட்டியையும் அவனுக்குக் கொடுக்கப் போனாள்.

அவனை நோக்கி அவள் குட்டியை நீட்டியபோது, அநியாயமாகத் தன்மீது அவள் பழி சுமத்துகிறாள்

சிறுத்தையைக்கொன்ற ஆடுகள்

காட்டில் தனியாக அலைந்து திரிந்து கொண்டிருந்த ஒரு சிறுத்தைக் குட்டியை அந்த வழியாக வந்த ஒரு யானைக் கூட்டம் தெரியாமல் மிதித்துக் கொன்று விட்டது. இதைப் பார்த்த மற்ற சிறுத்தைகள் நேராக அந்தக் குட்டியின் தகப்பனிடம் ஓடி வந்து, "உன் குட்டி செத்துப் போய் விட்டது" என்று கூறின.

"கொன்றது யார்? நான் பழிக்குப் பழி வாங்காமல் விடமாட்டேன்" என்று சீறியது தகப்பன் சிறுத்தை.

"யானைகள் கொன்றுவிட்டன."



திரமான வழக்கம்? ஏன் இப்படிச் செய்தீர்கள்?'' என்று மெய்க் காவலர்களை நோக்கிக் கேட்டார்கள்.

மெய்க்காவலர்கள் பின்வருமாறு கூறினார்கள்: ''உங்களை வழியனுப்பி விட்டு வருமாறு சக்கரவர்த்தி எங்களுக்குக் கட்டளையிட்டார். அதோடு இந்தச் சமாசாரத்தையும் உங்களிடம் சொல்லும்படி கூறினார்:

''எங்கள் அபிசீனிய நாட்டின் இணையற்ற அழகை நீங்களே பார்த்தீர்கள். இந்த நாட்டின் மண் எங்களுக்கு உயிரை விடப் பெரியது. இந்த மண்ணில் தான் நாங்கள் பயிர் செய்கிறோம்; எங்களில் இறந்தவர்களைப் புதைத்து அடக்கம் செய்கிறோம். நாங்கள் களைப்புத் தீரப் படுத்து உறங்குவதும், எங்கள் ஆடுமாடுகளை மேய்ப்பதும், பரம்பரை பரம்பரையாக நாங்கள் காலூன்றி நடப்பதும் இந்த மண்ணில்தான். அபிசீனிய மண்தான் எங்களுக்குத் தாய்; எங்களுக்குத் தந்தை; எங்களுக்குச் சகோதரன். உங்களையும் வரவேற்று விலைமதிப்புள்ள பரிசுப் பொருள்களையும் நாங்கள் கொடுத்தோம். ஆனால் அபிசீனிய மண் எங்களுடைய அபூர்வமான சொத்து. அதன் ஒரு துகளைக்கூட மற்றவர்களுக்கு எங்களால் கொடுக்க முடியாது.''

அபிசீனியக் குட்டிக் கதைகள்



தொகுப்பு: கு. அழகிரிசாமி

- அபிசீனிய நாட்டுக் குட்டிக் கதைகள்
- பொருள் பொதிந்து காணப்படுகின்றன!
- ஒவ்வொன்றும் ஒரு வைரம்தான்!

''யானைகளா?'' என்று கேட்டது தகப்பன்-சிறுத்தை. அப்போது அதன் குரலில் ஒரு திகைப்பு ஏற்பட்டது. ''ஆம், யானைகள்தான் கொன்றுவிட்டன'' என்றன சிறுத்தைகள்.

தகப்பன் சிறுத்தை ஒரு நிமிஷம் யோசனை செய்தது. ''யானைகள் கொன்றிருக்க முடியாது. அவை ஏன் கொல்கின்றன? உண்மையில் என் குட்டியைக் கொன்றது யார் தெரியுமா? ஆடுகள் தான். ஆம், ஆடுகள் செய்த கொலைபாதகம் தான் இது'' என்று சொல்லிக்கொண்டே மலையடிவாரத்தில் மேய்ந்து கொண்டிருந்த ஆடுகளை ஆத்திரத்தோடு கொன்று பழி வாங்கியது.

இந்த வழக்கம் இன்றும் இருக்கிறது. வலியவன் செய்த தீங்குக்கு எளியவனைத்தானே பழி வாங்குகிறார்கள்?



என்று செவிடன் நினைத்து விட்டான். அவனுக்குக் கோபம் வந்து விட்டது. ''இதைப் பற்றி எனக்கு எதுவுமே தெரியாது தெரியுமா?'' என்று அவன் உரக்கக் கத்தினான்.

''ஆனால் நீங்கள் தானே ஆடுகள் இருக்கும் இடத்தை எனக்குக் காட்டினீர்கள்? அந்த உதவிக்கு நான் நன்றி தெரிவிக்க வேண்டாமா? இந்தக் குட்டியை நீங்களே வைத்துக் கொள்ளுங்கள்'' என்று சற்று அருகில் போய் நின்றுகொண்டு சொன்னாள் பெண்.

''ஆடுகளுக்கு இது சகஜம்தான்'' என்றான் செவிடன்.

''ஆனாலும் இடத்தைக் காட்டியது நீங்கள் தானே?'' என்று பெண் சொல்லவே செவிடனுக்கு மிகுந்த கோபம் வந்துவிட்டது.

''என்னிடத்தில் இனியும் பேசிக்கொண்டு நிற்காதே. பேசாமல் போய்விடு. நான் எதற்காகக் குட்டியின் காலை ஒடிக்கிறேன்? அதுவா எனக்கு வேலை? பேசாமல் போ!'' என்று சொன்னதோடு அவளை அடித்தும் விட்டான்.

'என்னை இவன் அடித்துவிட்டானே!' என்று கோபம் கொண்ட பெண் நேரே நீதி மன்றத்துக்கு ஓடினாள். அவனைத் தொடர்ந்து

ஊர் மக்களும் ஓடினார்கள். நடந்த சமாசாரங்களை ஒன்று விடாமல் அவள் நீதிபதியிடம் சொன்னாள். நீதிபதி அந்தச் செவிடனை அழைத்து வரச் சொல்லி, அவனுடைய கட்சியை எடுத்துரைக்கும்படி கட்டளை இட்டார்.

நீண்ட நேரம் வாதப் பிரதிவாதங்கள் நடந்தன. ஆனால் ஒரு வார்த்தைகூட நீதிபதியின் காதில் விழவில்லை. ஏனென்றால் அவரும் ஒரு முழுச் செவிடு. அத்துடன் அவருக்குக் கண் பார்வையும் மங்கல்!

விசாரணை முடிந்த பின் நீதிபதி தீர்ப்பும் கூறினார். "இப்படிப்பட்ட குடும்பச் சண்டைகள் நாட்டுக்கும் மன்னருக்கும் இழிவை உண்டுபண்ணுபவை" என்று நீதிபதி சொல்லி விட்டுச் செவிடனைப் பார்த்துத் திரும்பி, "இனிமேல் நீ உன் மனைவியைக் கொடுமைப் படுத்தாதே" என்று சொன்னார். பிறகு அந்தப் பெண்ணைப் பார்த்து, "இனியும் நீ சோம்பேறியாக இருக்கக் கூடாது. காலாகாலத்தில் உன் கணவனுக்குச் சமைத்துப் போட வேண்டும்" என்று கூறினார். அப்புறம் ஆட்டுக் குட்டியை நோக்கித் திரும்பி, "இந்த அழகான குழந்தை பெரியவனாக வளர்ந்து பெற்றோர்களின் வாழ்க்கை இன்பமயமாக இருக்கும்படி செய்வானாக" என்று வாழ்த்தினார். அத்துடன் தீர்ப்பையும் முடித்தார்.

நீதி மன்றம் கலைந்தது. எல்லோரும் அவரவர் வீடுகளை நோக்கிச் சென்றார்கள். அப்போது, ஒருவரை ஒருவர் பார்த்து, "இப்படி நியாயத் தீர்ப்பு வழங்கும் வழக்கமே முன்காலத்தில் கிடையாது. அப்பொழுதெல்லாம் குடிமக்கள் எப்படித் தான் வாழ்க்கை நடத்தினார்களோ!" என்று பேசிக் கொண்டார்கள்!

நிரந்தரப் போராட்டம்

மெய், பொய், நெருப்பு, நீர் ஆகிய நான்கும் ஒன்றாக வசித்து வந்தன. ஒரு நாள் அவை வேட்டைக்குச் சென்றன. அநேக ஆடு மாடுகளைப் பார்த்தன. அவற்றைத் தங்களுக்குள் பங்கு போட்டுக்கொள்வதெனத் தீர்மானித்தன. பொய் மட்டும் தன் பங்குக்கு அதிக ஆடு மாடுகளை வசப்படுத்திக் கொள்ள ஆசைப்பட்டது. எனவே அது நீரிடம் சென்று, "நெருப்பை அணைத்து விடக் கூடிய சக்தி உனக்கு இருக்கிறது. நீ மட்டும் அந்தக் காரியத்தைச் செய்துவிட்டால் நெருப்பின் பங்குக்குரிய ஆடு மாடுகளை நாம் இருவரும் எடுத்துக் கொள்ளலாம்" என்றது.

பொய் கூறியதை நம்பிய நீர், அவ்வண்ணமே நெருப்பின்மீது பாய்ந்து அதை அணைத்து விட்டது.

பிறகு பொய் மெய்யினிடம் சென்று பின் வருமாறு கூறியது: "நெருப்பு செத்துப் போய் விட்டது. நீர் அதைக் கொன்றுவிட்டது. ஆனால் நீருக்கு நாம் ஏன் பங்கு கொடுக்க வேண்டும்? வேண்டாம். நாம் இருவர் மட்டுமே எல்லா ஆடு மாடுகளையும் மலைக்குக் கொண்டு போய் நமக்குள் பங்கு போட்டுக் கொள்ளுவோம்."



பொய் இவ்வாறு சொன்னதும், மெய்யும் பொய்யும் சேர்ந்து ஆடு மாடுகளை மலைக்கு ஓட்டிச் சென்றன. அதைப் பார்த்த நீர் பின்தொடர்ந்து செல்ல முயன்றது. ஆனால் மலைமீது ஏற நீரால் முடியவில்லை.

மெய்யும் பொய்யும் மலைமீது ஏறிச் சென்று ஓரிடத்தில் நின்று கொண்டன. அப்பொழுது மெய்யைப் பார்த்துப் பொய் சொன்னது: "ஏ, முட்டாளே! நான் பலசாலி; நீ பலமில்லாதவன். நான் எஜமானன்; நீ வேலைக்காரன். ஆகவே, ஆடு மாடுகள் அனைத்தும் எனக்கே சேர வேண்டும்."

"முடியாது. நான் உனக்கு வேலைக்காரன் அல்ல. நான்தான் பலசாலி. அதனால் நான்தான் எஜமானன்" என்று கூறியது மெய். அத்துடன் பொய்யை எதிர்த்துப் போரிடவும் தொடங்கியது. வெகு நேரம் போரிட்டும் கூட, ஒன்றை ஒன்று வெல்ல முடியாமலே இருந்தது. கடைசியில் அவை இரண்டும் காற்றினிடம் சென்றன. யார் பக்கம் நியாயம் இருக்கிறது என்று தீர்ப்புக் கூறும்படி காற்றைக் கேட்டுக் கொண்டன. காற்று கூறியது:

"இதுதான் விஷயம்: மெய் பொய்யை எதிர்த்துப் போராடியே ஆக வேண்டும். உண்மை வெற்றி பெறும். ஆனால் பொய் மறுபடியும் திரும்பி வரும். மறுபடியும் மெய் போராடித்தான் ஆக வேண்டும். காலம் உள்ளவரையிலும் பொய்யை எதிர்த்து மெய் போராடிக் கொண்டே இருக்க வேண்டும். அப்படிப் போராடத் தவறினால் மெய் அடியோடு அழிந்து விடும்."

கழுதை செய்த பாவம்!



மழை பெய்யாமல் போகவே நாட்டில் பஞ்சம் வந்துவிட்டது. எந்த விதமான உணவுப் பொருளும் கிடைக்கவில்லை. இதைப் பற்றி ஒரு சிங்கம், ஒரு சிறுத்தை, ஒரு கழுதைப் புலி, ஒரு கழுதை ஆகிய நான்கு மிருகங்களும் ஆலோசனை செய்தன.

"இப்படிப் பஞ்சம் வரக் காரணம் என்ன?" என்று ஒவ்வொரு மிருகமுமே திரும்பத் திரும்பக் கேட்டுக் கொண்டிருந்தது.

"நம் நான்கு பேரில் யாராவது ஒருவர் பாவம் செய்திருக்க வேண்டும். இல்லையென்றால், கடவுள் இப்படிச் செய்திருக்க மாட்டார்" என்று ஒரு மிருகம் சொன்னது.

"நாம் செய்த பாவங்களை யெல்லாம் சொல்லி அதற்காக வருந்தினால் கடவுள் ஒருவேளை நம்மிடம் இரக்கம் காட்டக் கூடும்" என்று மற்றொரு மிருகம் கூறியது.

அதுவே சரியான யோசனை என்று எல்லா மிருகங்களும் ஒப்புக் கொண்டன. சிங்கம் பேச ஆரம்பித்தது: "ஒரு சமயம் நான் மிகப் பெரிய பாவம் ஒன்றைச் செய்துவிட்டேன். கிராமத்தின் பக்கம் ஒரு காளையைப் பார்த்தேன். உடனே அதைக் கொன்று தின்று விட்டேன்."

இவ்வாறு சொல்லி முடித்த சிங்கத்தை மற்ற மிருகங்கள் பார்த்தன. அதனிடம் அவற்றுக்கு மிகுந்த பயம் என்பதைச் சொல்ல வேண்டியதில்லை. எனவே, "இது ஒரு பாவமா? இது எப்படிப் பாவச் செயலாகும்? கிடையவே கிடையாது" என்று கூறிவிட்டன.

பிறகு சிறுத்தை பேசியது. "நான் ஒரு கொடும் பாவத்தைச் செய்து விட்டேன். ஒரு சமயம் கணவாயில் ஓர் ஆட்டைப் பார்த்தேன். உடனே அதைக் கொன்று தின்று விட்டேன்..."

இவ்வாறு சொல்லி முடித்த சிறுத்தையை மற்ற மிருகங்கள் பார்த்தன. எப்பொழுதுமே பாராட்டிப் பேசும் அந்த மிருகங்கள், "இது பாவமே அல்ல" என்று கூறின.

அப்புறம் கழுதைப் புலி பேசத் தொடங்கியது: "நான் ஒரு பெரும் பாவம் செய்திருக்கிறேன். ஒரு சமயம் ஊருக்குள் போய் ஒரு கோழிக் குஞ்சைத் தூக்கிக் கொண்டு வந்து சாப்பிட்டு விட்டேன்."

"இது பாவச் செயலாகுமா? இல்லவே இல்லை" என்று மற்ற மிருகங்கள் கூறி விட்டன.

பிறகு கழுதை பேசியது: "ஒரு சமயம் என் சொந்தக்காரன் என்னைச் சாலை வழியே ஓட்டிக் கொண்டு போனான். எதிரே அவனுடைய நண்பன் ஒருவன் வந்தான். இருவரும் பேசிக் கொண்டு நின்றபோது சாலை ஓரமாகச் சென்று அங்கே முளைத்திருந்த கோரைப் புல்லை மேனிட்டாற்போல் கடித்து மென்றுவிட்டேன்."

கழுதை இவ்வாறு சொன்னதைக் கேட்ட மற்ற மிருகங்கள் அதை ஒரு முறை ஏறிட்டுப் பார்த்தன. கழுதையினிடத்தில் அவற்றுக்குப் பயமும் கிடையாது; கழுதையை எந்தச் சமயத்திலும் அவை பாராட்டியதும் கிடையாது. ஒரு நிமிஷம் மௌனமாக இருந்து யோசித்தன. பிறகு அந்த மூன்று மிருகங்களும் ஒரே குரலில், "ஆம். கழுதை செய்தது பாவச் செயலேதான். பாவத்திலும் பாவம், கொடும் பாவம். இதில் சந்தேகமே இல்லை. ஏ, கழுதையே! மழை இல்லாமல் போனதற்கும் பஞ்சம் வந்ததற்கும் நீயேதான் காரணம்" என்றன.

மறு நிமிஷம் சிங்கமும் சிறுத்தையும் கழுதைப் புலியும் கழுதையின் மேல் பாய்ந்து அதைக் கொன்று தின்று விட்டன.

விழுந்தது... ..?






'யுனெஸ்கோ'வின் ஆதரவில் 'வாழ்க்கை வாழும் முறை' பற்றிய கருத்தரங்கை உதவிப் பிரதம மந்திரி திரு மொரார்ஜி தேசாய் தொடங்கி வைத்தார். சென்னை முதன் மந்திரி திரு அண்ணாதுரை 'யுனெஸ்கோ கூரியர்' பத்திரிகையை வெளியிட்டார்.

செய்திப் படங்கள்


திட்டக் கமிஷன் அங்கத்தினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள திரு ஆர். வெங்கடராமனுக்கு அபட்ஸ்பரியில் உபசரிப்பு விழா நடந்தது. முதன் மந்திரி திரு அண்ணாதுரை இவ் வைபவத்துக்குத் தலைமை வகித்தார்.





திருவல்லிக்கேணி சாரதி சங்கீத வித்தியாலயத்தின் நான்காவது ஆண்டு விழா முசிரி ஸ்ரீ சுப்பிரமணிய அய்யர் அவர்கள் தலைமையில் நடந்தது. செம்மங்குடி ஸ்ரீ சீனிவாசய்யர் விழாவைத் தொடங்கி வைத்தார்.

தென்மொழிகள் புத்தக டிரஸ்டின் ஆதரவில் தமிழ்ப் புத்தகக் கண்காட்சியை ஹிக்கிம்பாதம்ஸில் கல்வி மந்திரி திரு நெடுஞ்செழியன் திறந்து வைத்தார்.






எப்படியாவது மக்களுக்கு மகிழ் ஊட்டினால் போதும் என்ற எண்ணத்தில் படம் தயாரிப்பது ஒருவிதம். மக்களுக்கு ஏதாவது நல்ல கருத்துக்களாகச் சிலவற்றைச் சொல்ல வேண்டும் என்ற எண்ணத்தில் படம் தயாரிப்பது மற்றொரு விதம்.

மக்களை மகிழ்விப்பதாகச் சொல்லிக்கொண்டு கீழ்த்தரமான உணர்ச்சிகளைத் தூண்டும் ஆபாச நடனங்களையும், படம் பார்ப்பவர்கள் வெட்கித் தலை குனியும்படியான கண்ணறாவிக் காதல் காட்சிகளையும் சேர்த்துப் படமாக்கி வெளியிட்டுத் தமிழ்த் திரைப்படத் தொழிலுக்குச் சமீபத்தில், படாதிபதிகள் கரி பூசி வந்திருக்கின்றனர்.

திருவருட் செல்வர்





இந்த அவல ! நிலை மாறாதா என்று ஏங்கிக் கொண்டிருந்தவர்களின் ஏக்கம் தீர ஸ்ரீ விஜய லக்ஷ்மி பிக்சர்ஸாரின் ''திருவருட் செல்வர்'' வந்திருக்கிறது.

ஆலமுண்ட நீலகண்டப் பெருமான் அடியார்களை ஆட்கொள்ளும் பொருட்டுப் புரிந்த தெய்விகத் திருவிளையாடல்களில் சிலவற்றைத் தொகுத்து வண்ணப் படமாக வெளியிட்டிருக்கின்றனர்.

இறைவனுக்கு இன வேற்றுமை, நிற வேற்றுமை எதுவும் இல்லை. அவன் அடியார்க்கு எளியவன். அடியார் படுந் துயரங்களை யெல்லாம் நிவத்தரம் செய்து நீள்விசும்பு அருளும் கருணையுள்ளம் படைத்தவன் அவன் என்பதை எடுத்துக் காட்டுவதே மேற்படி தெய்விகக் கதையின் நோக்கம்.

திருவருட் செல்வரின் முதல் கதை ஒரு மன்னனைப் பற்றியது. அரண்மனை ஆடலழகியின் எழில் உருவத்தையும், நடனத் தோற்றங்களையும் கண்டு மயங்கிய அம் மன்னன், தான் அரசன் என்ற ஆணவத்தில் அவளது இல்லம் சென்று அவளை அடைய முற்படுகிறான். அப்பொழுது அறிவிலும் சிறந்து விளங்கிய அந் நடன நங்கை, அரசனை அறநெறியில் நிறுத்திப் பிறகு பக்தி மார்க்கத்துக்குத் திருப்புகிறாள். (இது பெரிய புராணக் கதை அன்று).

ஆசையுடன் அணைய வந்த அரசனின் ஆசைத் தீயை அணைத்து அறிவுரை புகலும் கட்டத்தில் அற்புதமாக நடித்திருக்கிறார் பத்மினி. மன்னனாக வரும் சிவாஜியின் நடை ஒன்று போதும். ராஜ சபைக்கு வந்து மன்னனின் மனத்தைக் குடைந்து கொண்டிருந்த பிரச்னைகளுக்குப் பளிச்சப் பளிச்சென்று







பதில் சொல்லி யாவர் மனத்திலும் பதியும் வண்ணம் நடித்திருக்கும் குட்டி பத்மினியின் சுட்டித்தனம் திருவருட்செல்வரின் திலகமாக விளங்குகிறது.

சலவைத் தொழிலாளியாக இருந்து கொண்டு, சிவனடியார்களுக்குத் தொண்டு செய்து சிவனருளுக்குப் பாத்திரமாகும் பேறு பெற்ற திருக்குறிப்புத் தொண்ட நாயனார் வரலாறு அழகாக வெளிவந்திருக்கிறது. திருக்குறிப்புத் தொண்ட நாயனாரின் தன்னடக்கமான தோற்றத்தை நேரில் கொண்டு வந்து நிறுத்துகிறார் சிவாஜி.

தில்லைவாழ் அந்தணர் மூவாயிரவர் எதிரில் அடக்கமே உருவாக அமர்ந்து சேக்கிழார் பெரிய புராணத்தை அரங்கேற்றும் காட்சியில் நடிகர் திலகத்தின் முக பாவங்களும் பவ்வியமான பேச்சும் மறக்க முடியாதவை.

எல்லாவற்றுக்கும் சிகரம் வைத்தாற்போல் பிறை சூடிய பெருமானின் அடியார்களுள் தலை சிறந்தவராகக் கருதப்படும் அப்பர் பெருமானின் வரலாறு அருமையாக அமைந்து விட்டது. வீரம், சோகம், ரௌத்திரம், சிருங்காரம் ஆகிய ரசங்களிலிருந்து தனித்து நிற்கும் பக்தி ரசம் ததும்பிப் பெருகுகிறது. எந்தப் பாத்திரத்தையும் தம் சொந்தப் பாத்திரமாக்கிக்; கொண்டு விடும் ஆற்றல் பெற்ற நடிகர் திலகம், 'திருவருட் செல்வ'ரில் இது வரையில் நடித்த அத்தனை 'ரிக்கார்டு'களையும் மிஞ்சி விட்டார். முன் பாதியில் சுரத்தில்லாமல் இருந்த படம் பின்பாதியில் விறுவிறுப்படைந்து விடுகிறது.


திருஞானசம்பந்தராக நடிக்கும் சிறுவன் மாஸ்டர் பிரபாகரன் நடிகர் திலகத்தோடு தன்னையும் நினைக்கும்படி செய்து விட்டான். திரைக் கதை, வசனம், டைரக்ஷன் ஆகிய பொறுப்புக்களை ஏற்றுக் கொண்டு வெற்றி பெற்றிருக்கும் திரு ஏ. பி. நாகராஜன் அவர்களை எவ்வளவு பாராட்டினாலும் தகும். தமிழ்ப் பண்பு கெடாமல் தயாரிக்கப்பட்டிருக்கும் 'திருவருட் செல்வர்' தொண்டின் பெருமையை விளக்கும் படம். இப் படத்துக்கு இந்த இதழ் ''கல்கி'' மேலட்டையில் இடம் தந்து கௌரவிக்கிறோம்.

— காந்தன்



யாரோ இவர் யாரோ

'சோ'



அத்தியாயம் 3

மற்ற மனிதர்கள் தங்களைப் பற்றி என்ன நினைக்கிறார்கள் என்பதைப் பற்றியே கவலைப்படாத மானிட ஜன்மம், ஒரு பெட்டியின் அபிப்பிராயங்களைப் பற்றியா கவலைப்படப் போகிறது?

ரவியும் முத்துவும் பெட்டியின் உள்ளக் குமுறலைப் பற்றி அறியாமலே பேசிக்கொண்டிருந்தார்கள்.

ரவி, முத்துவைப் பார்த்து, ''டேய்! பேசிக்கிட்டே இருந்தால் எப்படி? சீக்கிரமாக் குளிப்போம். சாப்பிடற வழியைப் பார்க்கலாம்'' என்றான்.

''சரி'' என்று கூறி முத்து, பெட்டி சற்றும் எதிர்பார்க்காத சமயத்தில் உடைகளை எடுப்பதற்காகப் பெட்டியைத் திறக்கப்போனான். சாவியைப் போட்டுத் திறக்க முயன்றான். பெட்டியோ 'ஐயோ! நான் உன் பெட்டியல்ல என்று இன்னுமா உனக்குத் தெரியவில்லை?' என்று அங்கலாய்த்தது.

''ரவி! இது என்னடா இது! என் பெட்டியைத் திறக்கவே முடியலை!'' என்று முத்து ரவியைப் பரிதாபமாகப் பார்த்தான்.

''கொஞ்சம் இருடா, நான் திறந்து தர்றேன்!'' என்று நண்பனின் உதவிக்கு

விரைந்தான் ரவி. சாவியைப் போட்டு ஒரே திருகு திருகினான். உடைந்தது சாவி.

''என்னடா ரவி சாவியை உடைச்சுப்பிட்டே!'' என்று தவித்தான் முத்து.

''போகட்டும் விடு! எனக்குப் பூட்டை உடைச்சுப் பழக்கம் இல்லே. ஆஹா! ஐடியா!'' என்று திடீரென்று ரவி மேஜையின் மீதிருந்த பேனாக் கத்தி ஒன்றை எடுத்துச் சாவித் துவாரத்தில் நுழைத்தான். ஒரே திருகு... பேனாக் கத்தியும் வளைந்து விட்டது.

பெட்டியோ கம்பீரமாகச் சற்றும் கவலைப்படாமல் இருந்தது.

ரவிக்கு அவமானம் தாங்க முடியவில்லை. ஒரு பெட்டியைச் சாவி இல்லாமல் திறக்கத் தெரியாத தான் இந்த உலகத்தில் எப்படிப் பெரிய மனிதனாகப் போகிறோம் என்று எண்ணி வருந்தினான்.

''கொஞ்சம் இரு, முத்து!'' என்று கூறிப் பக்கத்து அறைக்குச் சென்று கையில் கத்தி, ஆணிகள், 'ஸ்பானர்' முதலிய பலவிதமான ஆயுதங்களோடு போர்க் கோலம் பூண்டு திரும்பினான்.

முத்து அவனைப் பார்த்துத் திகைத்து, ''என்னடா, ரவி இது?, பெட்டியைத் திறக்கப் போறியா, இல்லே கார் ரிப்பேர் செய்யப் போறியா?'' என்றான்.

''பேசாதே! இன்னிக்கு அந்தப் பெட்டிக்காச்சு — எனக்காச்சு. ஒரு கை பார்த்துடறேன்'' என்றான் மறத் தமிழன் ரவி!

''டேய், பெட்டி என்னிதுரா!'' என்று அழாக்குறையாகக் கெஞ்சினான் முத்து.


''இரண்டிலே ஒண்ணு பார்த்துடறேன். உடைச்சாவது இதைத் திறந்துட்டுத்தான் மறு காரியம்'' என்று ரவி யுத்த களத்தில் இறங்கினான்.

'டமால் — டுமீல் — டப்-டப் டபீல்-டபீல்...' தினப்பத்திரிகைத் தலைப்புக்கள் போன்ற சத்தங்கள் வந்தன. பெட்டியின் ஒரு கிளிப் தெறித்து முத்துவின் பாதார விந்தங்களில் விழுந்து சரணாகதி யடைந்தது!

''ரவி! ரெண்டுலே ஒண்ணு பார்த்துடறேன்னு சொன்னே. ஒரு கிளிப்பை உடைச்சுட்டே. இன்னொரு கிளிப்பாவது உருப்படியா இருக்கட்டும்டா!'' என்று முத்து சொல்லி முடிப்பதற்கும் மற்றொரு கிளிப் எகிறி விழுவதற்கும் சரியாக இருந்தது.

''எப்படி?'' ரவியின் முகத்தில் வெற்றிக் களை தாண்டவமாடியது.

''இனிமேல் இந்தப் பெட்டி எதுக்குடா லாயக்கு?'' என்று பெட்டியைத் திறந்த முத்து திகைத்தான்.



''ரவி! என் பெட்டியிலே எப்படிப் புடவை எல்லாம் வந்தது? இது என்ன இக்கினி வேலையா இருக்கு? ஒருவேளை நீ வெச்சியா?''

''என்னது, புடவையா? எங்கிட்ட ஏதுடா புடவை?''

—'ஷாக்' அடித்தாற் போல் துள்ளினான் ரவி.

''ஐய்யய்யோ! ஜாக்கெட் வேறே... என்னடா இது!''

''முத்து!'' — திடீரென்று கூவினான் ரவி.

''டேய், எனக்கு இப்பத்தான்டா ஞாபகம் வருது. நீ பார்த்த பொண்ணுகிட்டே இருந்த பெட்டியும் உன்பெட்டி மாதிரியேதான் இருந்தது. நீ நிஜமாகவே அதை மாத்தி எடுத்துக்கிட்டு வந்திருக்கிறே! பெரிய ஆள்ரா நீ!''

''ஐய்யய்யோ! அவள் பெட்டியையா நான் எடுத்துக்கிட்டு வந்திருக்கிறேன்? இப்ப என்னடா செய்யறது?''

''ஏன்டா இப்படி விழிக்கிறே? உன் காதலுக்குக் கடவுளே உதவி செய்கிறார்.... எப்போ பெட்டி மாறிப் போச்சோ அப்போ இது தெய்விகக் காதல்தான்!''

''இப்போ என்ன செய்யலாம்? அதைச் சொல்லு.''

''இரு...'' பெட்டியின் மேல் பையைத் திறந்து பார்த்தான் ரவி. ''டேய்! இதோ பார்ரா அவள் விலாசம்'' என்று ரவி ஒரு கார்டை எடுத்துப் படித்தான். ''மிஸ் கிரிஜா ராஜரத்தினம், காந்தி நகர், அடையாறு....''

''இது அவள் விலாசம்தான்னு உனக்கு எப்படித் தெரியும்?''

''அவள் விலாசம் இல்லேன்னு உனக்குமட்டும் எப்படித் தெரியும்?''

''அவள் பேர் கிரிஜா ராஜரத்தினமா?''

''இல்லே. அவள் அப்பா பேரு!''

''ரவி! அவள் ஞாபகார்த்தமா இந்தப் பெட்டியை எங்கிட்டயே வெச்சுக்கட்டுமா?''



''போடா முட்டாள்! இதை எடுத்துப் போய் அவள் வீட்டிலே, அவள் கிட்டே கொடுத்து, உன்னை அறிமுகப் படுத்திக்க! இதுதான்டா சான்ஸ்! காதலை ஆரம்பிச்சுடு!''

''அது வேறே ஒரு பொண்ணு

வீடாக இருந்தால் நான் என்னடா செய்யறது?''

''அந்தப் பொண்ணைக் காதலிச்சுடு! முட்டாள்! வேறே ஒரு பொண்ணாக இருந்தால், 'ஸாரி, மன்னிச்சுடுங்க'— அப்பிடின்னு சொல்லிட்டு வந்துடு!''

''எப்ப இந்தப் பெட்டியைக் கொண்டு போறது?''

''குளிச்சிப்பிட்டு உடனே நீ புறப்பட வேண்டியதுதான்!''

''பயம்மா இருக்குடா!'' என்று நடுங்கினான் முத்து.

''குளிக்கிறதுக்கா?''

''விளையாடாதே ரவி! பெட்டியைக் கொடுத்துவிட்டு நான் என்ன கேட்கணும்?''

''பெட்டியைத் தூக்கிக்கிட்டுப் போய்க் கொடுத்ததற்குக் கூலி கேளு!''

''ரவி! ப்ளீஸ். என்னைக் கலாட்டாப் பண்ணாதேடா. எனக்கொண்ணும் புரியலே. நான் என்ன, உன்னை மாதிரியா? நான் இப்பத்தாண்டா முதல் தடவையாக் காதலிக்கிறேன்!''

''அப்போ நான் எத்தனை தடவைடா காதலிச்சிருக்கேன்! இன்னும் எனக்கு முதல் காதலே ஆரம்பிக்கலே.''

''பெட்டியை வேறே போட்டுக் கன்னா பின்னாவென்று உடைச்சிருக்கே. இதைப் பார்த்து அந்தக் கிரிஜா என்னைக் கோபிச்சுக்க மாட்டாளா?''

''கோபத்திலே ஆரம்பிக்கிற காதல் பெரிய வெற்றியாகத்தான் முடியும்!''

''பெட்டியைக் கொடுத்து முதலிலே என்ன சொல்லணும்?''

'''மிஸ் கிரிஜா! இந்தாங்க உங்கள் பெட்டி. சாரி! நான் தவறிப்போய் எடுத்துக்கிட்டுப் போயிட்டேன்' - அப்படின்னு சொன்னால் போதும். அவள் உடனே என்ன பதில் சொல்லுவாள் தெரியுமா ?''

''தெரியும். 'ஏன் உங்களுக்கு இந்தத் திருட்டுப் புத்தி'ன்னு கேட்பாள்!''

ரவிக்கு ஆத்திரம் பற்றிக் கொண்டு வந்தது.

''எக்கேடு கெட்டுப் போடா! ஏதோ போனால் போகிறதுன்னு உதவி செய்யலாம்னு பார்த்தால், ஏடாகூடமாகப் பேசிக்கிட்டு நிக்கறே!'' என்று கத்தினான்.

''டேய் ரவி! கோவிச்சுக்காதேடா... நீதாண்டா என்னைக் காதலிக்கணும்!''

''என்னது?''

''இல்லே... இல்லே... வந்து... நீதான் என் காதலியைத் தேடிக் கொடுக்கணும்!''

''முத்து! எதுக்கும் தைரியம் வேணும்.''

''ரவி! என்னைப் பத்தி உனக்குத் தெரியாது. நான் தைரியத்திலே பாதிப் புலியாக்கும்!''

''பாதிப் புலியா?''

''ஆமாம். புலி பதுங்கிப் பாயும். நான் பதுங்குவேன். அவ்வளவுதான்!''

''நீ கவலைப்படாதே. நான் உன்கூட அந்தப் பொண்ணு வீட்டுக்கு வரேன். கிரிஜாவைத் தெரிஞ்சுக்காமல் நீ திரும்பக்கூடாது.''

ஃ ஃ ஃ

ரவியும் முத்துவும் குளித்து உணவருந்திவிட்டு அடையாற்றுக்கு டாக்ஸியில் புறப்பட்டனர். ராஜரத்தினம் வீட்டைக் கண்டுபிடிப்பதில் அவர்களுக்கு ஒருவிதமான கஷ்டமும் இருக்கவில்லை. யாரைக் கேட்டாலும் ராஜரத்தினம் வீட்டை உடனே காண்பித்தார்கள். ஆனால் ஆளுக்கொரு ராஜரத்தினம் வீட்டைக் காண்பித்ததுதான் குழப்பமாக இருந்தது! கடைசியில் கிரிஜா ராஜரத்தினம் வீடு என்று கேட்டவுடன், ஒரு கல்லூரி மாணவன் வீட்டின் எதிரிலேயே அவர்களைக் கொண்டு வந்து விட்டுச் சென்றான்.

முத்துவுக்கு ஒரு சந்தேகம். அந்தக் கல்லூரி மாணவன் சென்ற திக்கையே முறைத்துப் பார்த்து, ரவியிடம் கேட்டான்: ''ஏண்டா ரவி, இவ்வளவு கரெக்டா இவள் வீட்டு விலாசத்தை இந்தப் பையன் தெரிஞ்சு வச்சிக்கிட்டிருக்கிறானே, ஒருவேளை இவனைத்தான் அவள் காதலிக்கிறாளோ?''

''தபால்காரருக்குக்கூட இவள் வீட்டு விலாசம் 'கரெக்டா'த் தெரியும். தபால்காரரை இவள் காதலிக்கிறாளா?''

''சரி...சரி. கோபிச்சுக்காதே.''

''முத்து! தைரியமாய் உள்ளே போய்ப் பெட்டியைக் கிரிஜாகிட்டே கொடுத்துப் பேச்சை ஆரம்பிச்சுடு...''

''நீயும் வாயேன்!''

''முட்டாள், நான் உள்ளே வந்து, என்னை அவள் பார்த்துப்பிட்டாள்னா, அப்புறம் என்னைத்தான் 'லவ்' பண்ணுவாள்! உன் முகத்தைத் திரும்பிக் கூடப் பார்க்க மாட்டாள்!''

''ஆமாம்! நீ பெரிய மன்மதன்!''

''நான் மட்டும் இல்லேடா. வேறே எந்த ஆம்பிளையாக இருந்தாலும் உன் பக்கத்திலே வந்து நின்றால், மன்மதனாட்டம்தான் இருப்பான்!''

"அதுதான் இல்லை. எங்கப்பா வந்து என் பக்கத்திலே நின்றால்?"

"நீ மன்மதனாட்டம் இருப்பே!"

"ரவி! உள்ளே போகப் பயமா இருக்கே!"

"போடா! ராஸ்கல்!" என்று அவன் கழுத்தைப் பிடித்து நெட்டி உள்ளே தள்ளினான் ரவி.

தான் விட்டாலும், இனி காதல் தன்னைச் சும்மா விடாது என்று உணர்ந்த முத்து தயங்கித் தயங்கி ராஜரத்தினத்தின் வீட்டுக் காம்பவுண்டுக்குள்ளே சென்றான்.

வெளியே நின்று கொண்டிருந்த ரவியை ஒரு கார் வேகமாகத் தாண்டிச் சென்றது. போகும்போது தெருவில் இருந்த தண்ணீரை வாரி ரவியின் மேல் பன்னீர் தெளிப்பது போல் தெளித்துச் சென்றது. ரவி கோபமாகத் திரும்பிப் பார்த்தான். அந்த வண்டியைப் பின்தொடருமாறு சற்றுத் தள்ளி நின்றிருந்த டாக்ஸி டிரைவருக்கு உத்தரவிட்டு விட்டு டாக்ஸியில் அமர்ந்தான். 'தன் மீது தண்ணீரை வாரி அடித்து ஓட்டும் கார் டிரைவரைச் சும்மா விடக் கூடாது!' என்று மனத்துக்குள் சபதம் செய்து கொண்ட ரவி, ராஜரத்தினத்தின் வீட்டுக்குள்ளே சென்ற முத்துவைப் பற்றி அடியோடு மறந்து விட்டான். தண்ணீர் வாரி அடித்த டிரைவரை என்ன வார்த்தைகளால் திட்டலாம் என்று யோசனையில் ஆழ்ந்தான். டாக்ஸி போய்க் கொண்டிருந்தது. அதற்கு முன்னால் தண்ணீரை இறைத்த கார் போய்க் கொண்டிருந்தது!

* * *

முத்து, ராஜரத்தினத்தின் வீட்டுக்குள் போய்க் கொண்டிருந்தான். ராஜரத்தினத்தைப் பற்றித் தெரியாதவர்களே சென்னை மாநகரத்தில் ஒருவரும் இருக்க முடியாது என்பது ராஜரத்தினத்தின் தீர்மானமான முடிவு! பிரபல நகை வியாபாரி; செல்வந்தர். லக்ஷம் ரூபாய் மதிப்புள்ள ஒரு வைரம் அவர் வீட்டில் ஒரு ரகசிய அறையில் ஒளித்து வைக்கப் பட்டிருப்பதாயும் நகரத்தில் பரவலாக ஒரு வதந்தி உலவி வந்தது. முத்துவின் உள்ளத்தைப் பறித்துச் சென்ற காரிகை கிரிஜாவைப் பெற்றெடுத்த புண்ணியவானும் அவரேதான். கிரிஜாவின் தாயார், கிரிஜாவையும் வளர்க்கும் பொறுப்பை அவரிடமே விட்டுச் சென்றுவிட்டாள். தாயாரின் கண்டிப்பில்லாமல் வளர்ந்த



மாமியார்: பத்து மாதம் சுமந்து இருபத்துநான்கு வருடங்கள் பாடுபட்டு, அருமையாக வளர்த்துப் பையனை உன்னிடம் ஒப்படைக்கிறேன். பத்திரமாகப் பார்த்துக்கோடியம்மா!

ஒரு பெண் எப்படி வளர்ந்திருப்பாளோ, அப்படி வளர்ந்திருந்தாள் கிரிஜா.

முத்து அவர்கள் வீட்டுக் காம்பவுண்டுக்குள் நுழைந்தபோது தந்தையும் மகளும் வீட்டு மாடியில் பேசிக்கொண்டிருந்தார்கள்.

"உனக்கு மூளையே இல்லை!" இப்படிப் பேசியது தற்காலத் தகப்பனாக இருக்க முடியாது. மகளாகத்தான் இருக்க முடியும். பேசியது மகள்தான்.

"ஏம்மா அப்படிச் சொல்றே?" என்று குழைந்து, மகள் சொல்வது ஒருவேளை உண்மையாக இருக்கலாமோ என்ற சந்தேகத்தோடு கேட்டார் ராஜரத்தினம்.

"பின்னே என்னப்பா?" பின்னலைத் தூக்கிப் பின்னால் போட்டாள் கிரிஜா. "ஊர் பேர் தெரியாத டாக்டருக்குப் போய்க் கடிதாசு எழுதி வரவழைக்கிறீர்களே. அவர் வந்து பார்த்து 'அசோக்'கைக் குணப்படுத்தி விடுவாரா?"

"உள்ளூர் டாக்டரெல்லாம் பார்த்தாச்சே! ஒண்ணும் சரிப்பட்டு வரலே. ஏதோ ஒரு சிநேகிதர், இந்த டாக்டர் மேகநாத்தை ரொம்பப் புகழ்ந்தாரு. சரி, அவரையும் அழைத்துப் பார்த்துப்பிடலாம்னுதான் கடிதாசு எழுதியிருக்கிறேன்."

"கடிதாசை இன்னொரு தடவை படியுங்க!"

"படிக்கிறேன், கேளு.

டாக்டர் மேகநாதன் அவர்களுக்கு,

வணக்கம். உங்கள் உதவி உடனே தேவை. நான் உங்களைப் பார்த்ததில்லை. ஆனால் நண்பர் மூலம் உங்கள் திறமை பற்றி அறிந்தேன். பல டாக்டர்கள் பார்த்தும் குணமாகாத எங்கள் செல்வன் அசோக்கை நீங்கள்தான் வந்து குணப்படுத்த வேண்டும். சிகிச்சை முடியும் வரை எங்களுடனேயே தங்கலாம். ஆனால் சிகிச்சை முடிந்தவுடன் புறப்பட்டுப் போய்விட வேண்டும். உடனே புறப்பட்டு வருக. இப்படிக்கு,
ராஜரத்தினம்''

என்று படித்து முடித்தார்.

''ஏதோ பைத்தியக்காரத்தனம்!'' என்று முணுமுணுத்தாள் கிரிஜா.

ஃ ஃ ஃ

இந்தச் சமயத்தில்தான் முத்து அந்த வீட்டுக்குள்ளே நுழைந்து கொண்டிருந்தான். அப்போது ராஜரத்தினம் ''சிங்காரம், சிங்காரம்!'' என்று தமது வேலையாளைக் கூவி அழைத்துக்கொண்டிருந்தார். அவர்கள் வீட்டு வேலையாளின் பெயர் சிங்காரம் என்பதை இப்போது புத்திசாலிகளான வாசகர்கள் கண்டுபிடித்திருப்பார்கள்.

சிங்காரம் மாடிப் படிகளேறி மேலே சென்று கொண்டிருந்தான். முத்து வாசற்படி ஏறி வீட்டுக்குள் வந்து கொண்டிருந்தான்.

மேலே வந்த சிங்காரத்திடம் டாக்டர் மேகநாதனுக்கு எழுதிய கடிதத்தைக் கொடுத்து ராஜரத்தினம், ''இந்தாப்பா, சிங்காரம்! இதை உடனே கவரிலே போட்டு ஸ்டாம்பு ஒட்டித் தபால் பெட்டியிலே போட்டுடு!'' என்று விளக்கமாகக் கூறினார். மற்றவர்கள் திறமையில் சற்றும் நம்பிக்கையில்லாத வர்க்கத்தினரைச் சேர்ந்தவர் ராஜரத்தினம். சிங்காரம் கடிதத்தை வாங்கிக்கொண்டு கீழே செல்லப் புறப்படும் சமயத்தில் கிரிஜா அவனை அழைத்து, ''நான் பிக்னிக் போயிட்டு வருகிறபோது கொண்டுவந்த பெட்டி கீழேயே கிடக்குது. அதை மேலே கொண்டு வந்து வைத்துவிடு!'' என்று உத்தரவு போட்டாள்.

முத்து கீழே ஹாலில் நுழைந்து சுற்று முற்றும் பார்த்தான். ''ஸார்! ராஜரத்தினம்!'' என்று உரக்க அழைத்தான். ஆனால் ஏனோ சத்தமே வரவில்லை. தொண்டையில் ஏதோ பெரிதாகச் சிக்கிக்கொண்ட மாதிரி ஓர் உணர்ச்சி ஏற்பட்டது. பிறகுதான் அவனுக்குப் புரிந்தது — ராஜரத்தினம் அவனுடைய தொண்டையிலேயே சிக்கிக்கொண்டு வெளியே வராமல் பிடிவாதம் பிடிக்கிறார் என்று. எச்சிலை விழுங்கினான். கூடவே ராஜரத்தினமும் உள்ளே சென்றார். மீண்டும் அவரை அழைக்க ஒரு முயற்சி செய்தான் முத்து. மீண்டும் அதே சிக்கல் ஏற்பட்டது.

'சரி, பயத்தில் பேச வரவில்லை' என்று உணர்ந்த முத்து அந்த ஹாலின் மூலைக்கு மூலை தன் விழிகளை உருட்டிப் பார்வையைச் செலுத்தினான். மாடிப் படிகளின் பக்கத்தில் இருந்த ஒரு சிறிய மேஜையை நெருங்கியபோது அந்த விழிகள் அசைவற்று நின்றன. அங்கே தான் அவனுடைய பெட்டி இருந்தது. உடனே அங்கு விரைந்து சென்று, தான் கொண்டு வந்திருந்த கிரிஜாவின் பெட்டியை அங்கே வைத்துவிட்டு, அங்கிருந்த தனது பெட்டியைக் கையில் எடுத்துக் கொண்டான் முத்து.

இந்தச் சமயத்தில்தான் சிங்காரம், மேலிருந்து படியிறங்கி வந்து கொண்டிருந்தான். காலடிச் சத்தம் கேட்ட முத்துவுக்கு அடிவயிற்றில் 'பகீர்' என்றது. 'யாரையும் கேட்காமல் கொள்ளாமல் பெட்டிகளைச் சர்வ சகஜமாக மாற்றிக் கொண்டிருப்பதை இப்போது, யாராவது பார்த்தால் என்ன செய்வது? தனக்குத் திருட்டுப் பட்டம் அல்லவா கிடைக்கும்!' என்று தீவிரமாகச் சிந்தனை செய்தான் தணிகாசலத்தின் தவப் புதல்வன் முத்து. காலடி ஓசை நெருங்கியது. உடனே முத்து மாடிப் படியின் கீழ் மறைந்தான்.

மேலே ராஜரத்தினமும், கிரிஜாவும் ஏதோ பேசிச் சிரித்துக் கொண்டிருந்தனர். டாக்டர் மேகநாதம் வந்து அசோக்குக்குச் சிகிச்சை அளிக்கப் போகிறார் என்று அகமகிழ்ந்து கொண்டிருந்தார் ராஜரத்தினம்.

ஆனால் சிங்காரம் அவரது பேச்சை முழுக்க முழுக்க ஒட்டுக் கேட்டுக்கொண்டிருந்ததையும், எதிராஜ் என்ற பக்காத் திருடனின் கையாள்தான் சிங்காரம் என்பதையும் அந்தச் சிங்காரத்தின் மனத்தில் இப்போது உருவாகிக் கொண்டிருந்த திட்டங்களையும் ராஜரத்தினம் அறிய நியாயமில்லை. மாடிப் படிக்கடியில் அடைக்கலம் புகுந்த முத்துவுக்கும் தானும் இந்தச் சிங்காரத்தின் சதியிலே தன்னையும் அறியாமல் சிக்கிக்கொள்ளப் போகிறோம் என்று தெரிந்திருக்க வாய்ப்பில்லை.

இப்படிப்பட்ட திட்டத்தை உருவாக்கிக் கொண்டிருந்த சிங்காரம், கம்பீரமாகத் திட்டக் கமிஷன் சேர்மன் போல் இறங்கி வந்தான்! **(தொடரும்)**

" பிச்சை எடுப்பியோ, இல்லாட்டிக் கொள்ளை யடிப்பியோ, எனக்குத் தெரியாது. நீ ஒரு இருபத்தஞ்சு ரூபாக்கு வழி செஞ்சுக்கிட்டு இங்கே வா. இல்லாட்டி நீ என் மவன் இல்லே..."

பரிசப் பணம்

ர. வெங்கடரத்தினம்





மாரியாத்தாவுக்கு வெளியே சொல்லொணுததோர் ஏக்கம்! சற்று முந்திதான் செவுத்தியான் மகள் வந்து தன் குழந்தையைக் காட்டிவிட்டுச் சென்றுள். ஆச்சு, உடனுெடொத்த ஆரோக்கிய மேரிகூடப் பாட்டியாகி விட்டாள். இத்தனைக்கும் அவள் மாரியாத்தாவை விட வயசிலே பத்து வருஷம் சின்னவள். ஏன், குப்பத்து ராமாயீகூட பேரன் எடுத்துவிட்டாள். போன பௌர்ணமியன்றைக்கு வந்து குழந்தையைக் காட்டினபோது எவ்வளவு பெருமையும் பூரிப்பும் இருந்தது அவளுடைய குரலில்! ஆமாம், பின்னே இருக்காதா? சந்ததி வளர்ந்து கொண்டு போவதைப் பார்த்து யார்தான் பூரிக்க மாட்டார்கள்! உலகத்திலேயே நடக்காதது நடந்து விட்டாப் போல, என்னவோ அதிசயமாய்த்தான் பேரனும் பேத்தியும் எடுத்த மாதிரி எல்லோரும் அந்தப் பெருமையில் மாய்ந்து போகிறார்கள்.

மாரியாத்தாளின் ஏக்கத்துக்கு இன்னொரு காரணம், குப்பத்தில் பாதிக் குடிசைகளில் பிரசவம் பார்ப்பது அவள்தான். அவள் கை வைத்தியத்திலும், மருந்துவத்திலும்தான் வட்டாரத்துக் குழந்தைகள் அத்தனையும் நல்லபடியாய்த் தாய் வயிற்றை விட்டு வெளி வந்தன. இப்படி ஊர் உலகத்துக்கு எல்லாம் மருத்துவம் பார்க்கிற அவளுக்குத் தன் மடியில் போட்டுக் கொண்டு கொஞ்சி விளையாடி மகிழப் பேரனோ பேத்தியோ இல்லையே என்கிற ஏக்கம் இருப்பது இயல்புதானே?

கேட்கிறவர்களுக்கு வேடிக்கையாக இருக்கும், கதை போல்! அவளுடைய ஒரே பையன் அமாசிக்கு இன்னும் கலியாணமே ஆகவில்லே. ஆமாம், வேடிக்கையாக இல்லையா இந்தப் பேச்சு?

அவன் இந்தக் காலத்துக்குப் பரம சாது: சரியான அப்பாவி; நாளெல்லாம் வயற்காட்டிலே, தோப்பு — துரவிலே சிற்றுள் வேலே ஏதும் கிடைத்தால் செய்வான். கழிலே ஓட்டினுல், கூட இருந்து ஒத்தாசை

செய்வான். வரப்பு மேடெல்லாம் சீராக்குவான்; களை பிடுங்குவான். இவ்வளவும் பண்ணி, இந்தக் காலத்திலே தினத்துக்குப் பத்தணா, எட்டணா காசு கொண்டு வருவான் என்றால், அவனை எதிலே சேர்ப்பது? சுத்த அசட்டுப் பயல் என்று பட்டம் கட்டி அம்மாக்காரி கூடவா ஒதுக்கிவிட முடியும், வயிற்றுப் பிள்ளையை?

மாரியாத்தாவுக்கு அவனைப் பார்க்கிற போதெல்லாம் கண்களில் மளமளவென்று நீர் பெருகும். இப்படி ஓர் அப்பாவியைப் பெற்றுப் போட்டுவிட்டேனே இந்த வஞ்சக உலகத்திலே! — இப்படி எண்ணிப் பொருமுவாள் அவள். அமாசியை உலகமே ஏமாற்றி விடலாம். ஆனால் அவனால் ஒருவரையுமே ஏமாற்ற முடியாது; ஏமாற்றத் தெரியாது; ஏமாற்றலாம் என்கிற எண்ணமே கிடையாதே அவன் மனத்திலே!

மாரியாத்தா முன்னேயே இரண்டு ஆண்டுகள் முன்பு ஒரு முறை அவனுக்குக் கல்யாணம் கட்டி வைக்க வேண்டும் என்று துடியாகத் தொடங்கினாள். கண்ணுக்கு ராசா மாதிரி நன்றாகத்தான் இருப்பான்; அதிலெல்லாம் ஒன்றும் சோடையில்லே. காதிலே பித்தளை வளையம் கடுக்கன் மாதிரி உண்டு. சுருண்டு, சுருண்டு முன் நெற்றியிலே வந்து வந்து விழுகிற கிராப்பு, ஆண் பிள்ளைத்தனத்துக்குக் கட்டியம் கூறும் மீசை — இன்றைக்கெல்லாம் பார்த்துக் கொண்டே இருக்கலாம் தன் மகனை என்பதில் மாரியாத்தாவுக்கு நிச்சயம் பெருமை உண்டு.

அப்போது இரண்டொரு இடங்களிலிருந்து பெண்ணைப் பெற்றவர்கள் அவனைக் கொள்ள முன்வரவும் செய்தனர். கையிலே காசு வேண்டுமே. பரிசப் பணம் இருபது, இருபத்தைந்து ரூபாய் கூடக் கையில் இல்லாமல், பெண் கேட்கப் போக முடியுமா? மாரியாத்தா ஆனமட்டும் யோசித்துப் பார்த்தாள். கையில் இருந்தால்தானே போட்டுப் புரட்ட முடியும்? வெறும்கை முழம் போடுமா? காலிப் படி அளந்து கொட்டுமா?

'அம்பிட்டுத் துட்டு எங்கிட்டே ஏது?' என்று முணுமுணுத்துக் கொண்டே அவள் ஓய்ந்துவிட்டாள்.

இப்போது அவளுக்கே பொறுக்கவில்லே. குப்பத்திலே தன்னை ஒத்தவர்கள் தனக்குப் பிராயத்திலே இளையவர்கள் எல்லாம் பெண் — பிள்ளைகளைக் கட்டிக் கொடுத்துப் பேரன் பேத்தி எடுப்பதை யெல்லாம் கண்ணெதிரே பார்த்துக் கொண்டு, தான் மட்டும் பிள்ளையை ஒண்டிக் கட்டையாக வைத்துக் கொண்டு, நாளெல்லாம் குடிசையில் ஈ ஓட்டிக் கொண்டு இருக்க வேண்டுமா?

அமாசி இருட்டியதும் வந்தான். சற்றுக் காரமாகவே மாரியாத்தா பேச்செடுத்தாள்.

''இந்தா லே, நீயும் ஒரு ஆம்புளே தானே? சும்மாச் சும்மா, சொல்ல மாட்டேன். ஆமா, சொல்லிட்டேன். நீ என்ன செய்வியோ எனக்குத் தெரியாது. போய் ஒரு இருவத்தஞ்சி ரூவாய்க்கி வழி பண்ண யோக்கியதை இல்லேன்னா, இனி நீ நுழையாதே.''

அமாசி கதிகலங்கிப் போய்விட்டான். ஆத்தா இப்படிப் பேசிக் கேட்டதே இல்லே.

''நான் என்ன செய்யணுமுங்கறே ஆத்தா? எம்மேலே பாயறியே?'' மாரியாத்தா படபடப்போடு பேசலானாள் — ''ஆமாண்டா, உன் வயசிலே யாராச்சும் கலியாணம் செஞ்சுக்காமே மொட்டை மரமா இந்த வட்டாரத்திலே இருக்காங்களா சொல்லு. உனக்குப் பிற்பாடு பொறந்த நேத்திப் பயலுகளெல்லாம் குஞ்சும் குளுவானுமா நல்லா இருக்கானுக. நீ ஆத்தா முந்தானையைப் புடிச்சுக்கிட்டிரு.''

அமாசிக்கு இருந்த துளி மூளையும் இயங்கவில்லே.

''என்னடா, நிக்கறே, கம்பங் கணக்கா? புடநியிலே ஏறிச்சா எம் பேச்சு?''

ஊஹூம், ஏறினால் ஏன் நிற்கிறான் அங்கே?

'' பிச்சை எடுப்பியோ, இல்லாட்டிக் கொள்ளையடிப்பியோ, எனக்குத் தெரியாது. நீ ஒரு இருவத்தஞ்சு ரூவாவுக்கு வழி செஞ்சுக்கிட்டு இங்கே வா, இல்லாட்டி நீ என் மவன் இல்லே.''

அமாசி அப்படியே வெளியேறிவிட்டான்.

மாரியாத்தாவுக்கே சிறிது என்னவோ போலாகி விட்டது. ''இந்தா, லே, ஆத்தா அடிச்சு விரட்டிச்சின்னு நெனைக்காதே. உன் நல்லத்துக்குத்தான் சொல்றேன். நீயும் எல்லோரையும் போல நல்லா இருக்கோணுமின்னு எனக்கு இருக்காதா, சொல்லு.''

அமாசி நின்று தலையை ஆட்டினான்.

''உனக்கு எப்படியும் இந்தத் தேருக்குள்ளாற, ஒரு பொண்ணைக் கட்டிடணுமின்னு துடிக்குதுடா என் மனசு. நரிவிசாப் போய், நாலு காசு சம்பாரிச்சுக்கிட்டு வா. பொண்ணுக்கொண்ணும் பஞ்சம் இல்லே. குப்பமே பிரமிச்சிடறாங்காட்டியும், உனக்குக் கட்டி வச்சிடறேன். வௌங்கிச்சா என் பேச்சு?''

ஆத்தா தன் மேல் உள்ள ஆசையினால் தான் அவ்வளவும் பேசினாள் என்பது மட்டும் அவனுக்குத் தெளிவாகியது.

''நான் வரேன் ஆத்தா, ஊட்டைப் பார்த்துக்க.''

அவன் போகிற திக்கையே பார்த்துக் கொண்டிருந்தாள் மாரியாத்தா. அவளுடைய வாய் முணு முணுத்தது: 'இந்த ஏழை சனங்க சாதியிலேதான் இந்த எழவுப் பழக்கம்! பணக்காரங்களெல்லாம் புள்ளைக்குப் பணம் கொடுத்துப் பெண்ணையும் கட்டிக் கொடுக்கறாங்க. அதே கணக்கா நம்ம சாதியிலேயும் இருந்து தொலையக் கூடாதோ? நம்ம அமாசிப் பயலுக்குப் பொண்ணைக் கொடுத்துப் பரிசம் போட ஆளா கெடைக்காது!'

இப்படி ஏதேதோ எண்ணமிட்டுக்கொண்டு மாரியாத்தா அமர்ந்திருந்தாள். அமாசி போனவன் போனவன்தானோ என்றுகூட அவள் சிறிது கலங்கிப் போய்விட்டாள். ஏனெனில், இரண்டு மூன்று நாட்களுக்கு அமாசி திரும்பவேயில்லே. சரியாக மூன்றும்

நான் மாலே வேளைக்கு, அதே விளக்கு வைக்கிற நேரத்துக்கு 'ஆத்தா' என்று கூவிக் கொண்டு ஓடி வந்துவிட்டான். காடா விளக்கு வெளிச்சத்தில் அவன் கொண்டு வந்து நீட்டிய இருபத்தைந்து ரூபாய்த் தொகையையும் பார்த்த போது மாரியாத்தா ஒரு கணம் திகைத்துப் போனாள்.

''ஏது இம்மாந்துட்டு, லே, உனக்கு?''

அவன் பேசவில்லே.

''ஆத்தா சொல்லிச்சின்னு, திருட்டு—இருட்டுச் செஞ்சுப்புட்டியா?'' — இதற்கும் அமாவாசி வாயைத் திறக்கவில்லே.

மாரியாத்தா உரக்கக் கத்தினாள். ''லே, நான் பேசறது காதிலே விழல்லே?''

அப்பாடா, அமாசி வாயைத் திறந்துவிட்டான். ''திருடப் போற ஆளா என்னே நெனேச்சிட்டியா?''

ஆத்தாளுக்கு மகிழ்ச்சி பொறுக்கவில்லே. ''போதுண்டா அமாசி, எனக்கு வேண்டியது அம்பிட்டுத்தான்.''

பணத்தைக் கொண்டு போய்ப்பத்திரமாக வைத்தாள் மாரியாத்தா. ''இத்தினி ரோசம் வந்தாத்தான், நம்ம அமாசிக்குக் கல்யாணம் ஆகும்னு இருக்கு. என்லே, அப்பிடித் தானே?''

அவன் ஒன்றுமே பேசவில்லே.

''நல்லாச் சாப்பிட்டியா இல்லியா? மூஞ்சி ஒரே வாட்டமா இருக்குதே.'' சட்டியில் இருந்து சோற்றைப் பிழிந்து பிழிந்து அவன் எதிரே சருகைப் பரப்பி அதில் வைத்துக் குவளேக் குழம்பை வார்த்தாள். வாரி வாரிப் போட்டுக் கொண்ட அமாசி கணப் பொழுதில் சருகை வெற்றாக்கினான். அவன் சாப்பிட்டுக் கொண்டிருக்கட்டும் என்று கூறிக் கொண்டே, வெகு துடிப்போடு வெளியே சென்றாள் மாரியாத்தா. பரிசம் போடப் பணம் வந்தாகிவிட்டது. இனி எப்போது வேண்டுமானாலும் பெண் கேட்கலாம் என்ற பெருமை அவள் நடையில் ஓட்டமாகத் தெரிந்தது.

அந்த ஓட்டத்தில் இருந்த வேகம் அவள் மகனின் திருமணத்தை நடத்தி வைப்பது வரை நீடித்திருந்தது. 'ஆச்சு, ஒரே வாரம்! முடுக்குத் தெரு காத்தாயி கோயிலில் அம்மனுக்கு எதிரே கெட்டி மேளம் முழங்க அமாசி குப்பத்துப் பெண் எவளேயோ மாலே யிட்டு வீட்டுக்குக்கூட அழைத்து வந்தாயிற்று. மாரியாத்தாவுக்கு வாயெல்லாம் பல்! தன் மகனே ஒன்றும் தெரியாத அசடு என்று உலகம் தவருக எடை போட்டுக் கெடுத்து விட்டதே என்ற வருத்தம் மட்டும் நெஞ்சை முட்டியது.

''நான் வெளியிலே சாலே ஓரமா விளுந்து கிடக்கறேன். நீங்க ரெண்டு பேரும் உள்ளாறப் படுங்க'' என்று கூறிக்கொண்டே மாரியாத்தா எதிர்காலக் கனவுகளேக் கண்ணெதிரே கண்ட வண்ணம் குடிசையிலிருந்து வெளியே நடத்துக்கு வந்தாள். காடா விளக்கு வெளிச்சத்தில் புது மெருகுடன் மருமகப் பெண் மலங்க மலங்க விழித்துக்கொண்டு நின்றது.



''நமது சங்க ஆண்டு விழாவிற்குத் தலைவர் காமராஜை அழைத்துவர ஏற்பாடு செய்யச் சொன்னேனே! என்ன ஆச்சு?''

''ஆகட்டும், பார்க்கலாம்!''

''நீயும் ஏன் கூட வர்றே? உள்ளாறப் படு'' என்று மருமகளிடம் கூறியபோது மாரியாத்தாவின் குரலில் இனம் புரியாத பெருமிதம் இடம் பெற்றிருந்தது.

''ஏலே, அமாசி! இப்பவாச்சும் சொல்லுவியா?'' என்று ஆத்தா எதையோ விட்ட இடத்தில் தொடர்ந்தாள்.

''என்ன சொல்லணும் ஆத்தா?'' — அமாசி கேட்டான்.

''பரிசப் பணம் இருவத்தஞ்சி ரூவாயும் இருந்தாப்பலே இருந்து எப்பிடி முளேச்சிச்சு, சொல்லேன். உன் பொஞ்சாதியும் கேட்டுக் கட்டும்.'' தன் மகனின் வீரப் பிரதாபம், அபார சாதனே அம்பலமாகட்டும் என்ற ஆவல் ஆத்தாவாகப் பேசியது.

அமாசி பேசினான்: ''நீதான் விரட்டிப் போட்டியே ஆத்தா. நேரே காத்தான் கிட்டே போனேன். அதுதான் பணத்துக்கு வழி செஞ்சுச்சு. டவுன் ஆஸ்பத்திரி இருக்கு இல்லே அங்கிட்டு என்னவோ காயிதத்து மேலெல்லாம் கைச்சாத்து வாங்கிக்கிட்டு என்னே ரெண்டு நாள் படுக்கப் போட்டாங்க. என்னவோ ஆபரேசனுமில்லே. எதாச்சும், நம்பளுக்கென்ன? கையிலே முப்பது ரூவா கொடுத்தாங்க. அதிலே காத்தானுக்குக் கமிஷன் போச்சு அஞ்சு ரூவா. பாக்கிதான் கொணந்து உங்கிட்டியே குடுத்துப்பிட்டேனே!''

அமாசி ஓர் அப்பாவி! அப்பா ஆக மாட்டான்!

அத்தியாயம் 32

இரு நிழல்கள்

சற்றுத் தூரத்திலிருந்த மேடையில் திரிவேணி ஆவேசமாகப் பேசிக் கொண்டிருந்தாள். அவளுடைய ஒவ்வொரு வார்த்தையையும் ஆமோதிப்பதுபோல் கூட்டம் கைதட்டி ஆரவாரம் செய்து கொண்டிருந்தது. அரைமணி நேரத்துக்கு மேல் ரங்கமணி, திரிவேணியின் சொற்பொழிவைக் கேட்டான். அவளுடைய பேச்சுத் திறனையும், கூட்டத்தை வசீகரிக்கும் ஆற்றலையும் ரசித்துக் கொண்டு நின்றான்.

அவனுடைய நினைவில் தேவிகா தோன்றினாள். அவளுக்கும் திரிவேணிக்கும் எவ்வளவு வித்தியாசம்! தேவிகா நெருப்பு; இவள் கோடை காலத்து மழை. இரண்டும் சக்தி வாய்ந்தவைதாம். ஆனால் தேவிகாவின் பாதையிலிருக்கும் பரபரப்பும், பயங்கரமும் இவளுடைய பாதையில் ஏது? இங்கு சாத்விகம், சத்தியாக்கிரகம் என்ற மழையில் அல்லவா நனைந்து கொண்டிருக்கிறாள் திரிவேணி? ஆனால் இதிலும் உயிர் இருக்கத்தான் இருக்கிறது.....

கமலவாசகியின் வாழ்க்கையில் இந்தத் துடிப்பு, பரபரப்பு இல்லையே.... பிரேதக்

கல்லுக்குள் ஈரம்

ர.சு.நல்லபெருமாள்





களை தட்டும் வாழ்க்கையில் அவன் என்ன தான் இன்பத்தை உணர்ந்துவிடப் போகிறான்? அற்ப நேர வாழ்வானாலும், மரக்கட்டைக் கங்கு மாதிரி காலமெல்லாம் புகைந்து கொண்டா இருப்பது?

ரங்கமணி ஒரு நீண்ட பெருமூச்சு விட்டான். அவனையும் அறியாமல் அவன் கை பச்சைக் கல் மோதிரத்தைத் தடவிக் கொடுத்தது.

அப்போது அவன் தோளை யாரோ தொடுவது போல் இருந்தது. திரும்பிப் பார்த்தான். பின்னால் சிவானந்தம் சிரித்துக் கொண்டு நின்றான்.

''என்ன மிஸ்டர், ஆளையே காணோமே?'' என்று விசாரித்தான் சிவானந்தம்.

''ஊருக்குப் போயிருந்தேன்.''

''உங்களைத் தேடி நாலைந்து தடவை சுயேச்சைப் பத்திரிகை ஆபீசுக்குப் 'போன்' செய்தேன்.''

''ஏன் என்ன விஷயம்?''

''ஒன்றுமில்லை. சும்மாதான். உங்களோடு பேசிக் கொண்டிருக்கலாமே என்று தான் போன் செய்தேன்.''

''ஊரிலிருந்து இன்றுதான் வந்தேன். ஏது இந்தப் பக்கம்? பேச்சை



ரசிக்க வந்தீர்களா?'' என்று கேட்டான் ரங்கமணி.

''போலீஸ் அதிகாரியாயிருந்து விட்டால் ரசனை போய்விடும் என்கிறீர்களா? திரிவேணியின் பேச்சு தீப்பொறியாகத் தெறித்து விழுகிறது. பார்த்தீர்களா? நம் நாட்டுப் பெண்கள் எல்லாருமே இப்படி இருந்தால், ஏன் இதில் பாதி உணர்வோடு இருந்தால் கூடப் போதுமே.....!'' என்றான் சிவானந்தம்.

''சார்! நீங்கள் ஒரு போலீஸ் அதிகாரி. அதை மறந்துவிட்டீர்கள் போலிருக்கிறதே!'' என்றான் ரங்கமணி சிரித்துக் கொண்டே.

''மறந்துவிடவில்லை மிஸ்டர். நானும் இந்தியன்தான் என்பதை நீங்கள் மறந்து விட்டீர்கள் போலிருக்கிறதே!'' என்று கூறிக் கொண்டே ரங்கமணியின் கையை வாஞ்சையோடு பற்றிக் கொண்டான் சிவானந்தம். அப்போது ரங்கமணியின் விரலில் கிடந்த பச்சைக் கல் மோதிரம் சிவானந்தத்தின் விரலில் உரசியது. ரங்கமணியின் கையைத் தூக்கிப் பார்த்தான் சிவானந்தம்.

''இந்த மங்கிய ஒளியிலும் உங்கள் மோதிரம் மின்னுகிறதே !'' என்றான். பிறகு சொன்னான்: ''வாழ்க்கையிலும் இப்படி ஒளிவிட வேண்டும். ஆனால் நம் பெண்கள் அணைந்த விளக்காக அல்லவா இருக்கிறார்கள்.''

''பெண்களின் மனம்தான் அவர்களை அப்படி இருட்டடிப்புச் செய்து விடுகிறது'' என்றான் ரங்கமணி.

'' ஆண்கள் அவர்களைச் சுடர் விடும்படி தூண்டினால்கூட அவர்கள் பிரகாசிக்கத் தயாராயிருப்பதில்லையே!'' என்றான் சிவானந்தம்.

''அது எப்படியோ! ஆனால் ஆண்களைச் சுடர்விடும்படி பெண்கள் தூண்டுகிறார்கள் இல்லையா?'' என்று கேட்டான் ரங்கமணி.

''அதுகூட அபூர்வந்தான். அப்படி எந்த ஆண், ஒரு பெண்ணின் தூண்டுதலால் பிரகாசிக்கிறான் ?''

'' உதாரணத்துக்கு நீங்களே இருக்கிறீர்களே !''

''நானா....?'' என்று வியப்புடன் கேட்டான் சிவானந்தம்.

''கடுமையான அதிகாரி என்று எல்லாரும் பயப்படும்படியாக இன்று நீங்கள் இந்த ஜில்லாவில் புகழ் அடைந்திருக்கிறீர்களே; — இந்தப் புகழுக்குக் காரணம்....''

''காரணம் என் மனைவி என்கிறீர்களா ?'' வெடுக்கென்று கேட்டான் சிவானந்தம்.

ரங்கமணி இலேசாகச் சிரித்தான். சிவானந்தத்தின் முகம் கறுத்து விகாரமாகியது.

''மிஸ்டர் நீங்கள் நண்பரைப் போல் பழகிவிட்டதால் என் கோபத்தை அடக்கிக் கொள்கிறேன். எனக்குச் சுயபுத்தி இல்லை என்கிறீர்களா ?'' என்றான் சிவானந்தம் சற்றுக் கடுமையாக.

''நீங்கள் தவறாகப் புரிந்து கொண்டீர்கள் என்றால், மன்னிப்புக் கேட்டுக்கொள்கிறேன்'' என்றான் ரங்கமணி சாந்தமாக.

''என்னுடைய தேவியின் உதவியால் எனக்குப் புகழ் வேண்டியதில்லை. எனக்குத் திறமை உண்டு, சுயபுத்தி உண்டு. அதிகாரி என்ற முறையில் எப்படி நடந்து கொள்ள வேண்டுமோ, அப்படி நடந்து கொள்ள எனக்குத் தெரியும். பிறர் சொல்லிக் கொடுத்து நான் தெரிந்து கொள்ள வேண்டியதில்லை'' என்று படபடத்தான் சிவானந்தம்.

''ஆத்திரப்படாதீர்கள். தவறான எண்ணத்தில் நான் சொல்லவில்லை. நீங்கள் தவறாக எண்ணும் பட்சத்தில் நான் மன்னிப்புக் கோருகிறேன்'' என்றான் ரங்கமணி.

சிறிது நேரம் இருவரும் பேசவில்லை. கூட்டத்தின் சலசலப்பும், திரிவேணியின் பேச்சும் தான் கேட்டுக் கொண்டிருந்தன. சிவானந்தத்தின் சிந்தனை அலைந்தது.

உண்மைதானே. கமலவாசகியின் தூண்டுதலால்தானே அவன் தன் அதிகாரத்தைச் சத்தியாக்கிரகிகள் மீது காட்டுகிறான். சில சமயங்களில் கமலவாசகியே போலீஸ்காரர்களுக்கு உத்தரவிட்டிருக்கிறாளே. அந்த அளவுக்குக் கமலவாசகியின் ஆதிக்கம் அவனிடம் உயர்ந்திருக்கிறது. ரங்கமணி சொன்னதில் தான் என்ன தப்பு? ஊரே இப்படிப் பேசுகிறது. ரங்கமணி மீது மட்டும் கோபம் கொண்டால் ஊர் வாயை மூடிவிட முடியுமா? அவளுடைய சொல்லுக்குப் பணிந்து அப்பாவியான சத்தியாக்கிரகிகளை எவ்வளவோ தடவை அடித்து மிதித்திருக்கிறான். கள்ளுக்கடை மறியலில்கூட இந்தத் திரிவேணி பிழைத்து உயிர் தப்பியது அபூர்வந்தானே? அந்த இடத்தில் அவ்வளவு பலாத்காரம் அவசியமில்லையே. ஆனாலும் தடியடிப் பிரயோகம் நடந்ததே அதற்குக் காரணம் யார்? அவன் விரும்பினானா அந்தக் கொடுமையை? கமலவாசகி எரிமலையாகக் குமுறினாள். அவள் சொல்லை அம்பலம் ஏற்றி விட்டான், சிவானந்தம். இதை ஊர் சொல்லுகிறது, ரங்கமணியும் சொல்லுகிறான். இதற்கு ஆத்திரப்பட்டு என்ன பயன்......?

சிவானந்தத்தின் ஆத்திரம் பொங்கிய பால் தணிவது போல் தணிந்து விட்டது. ரங்கமணியின் தோளைச் சுற்றிக் கையைப் போட்டுக் கொண்டு சிவானந்தம் சொன்னான்.

''மிஸ்டர் ரங்கமணி! ஏதோ கோபத்தில் கடுமையாகப் பேசி விட்டேன். மனத்தில் வைத்துக் கொள்ளாதீர்கள்.''

''உங்கள் மனத்தைப் புண்படுத்த வேண்டும் என்று நான் சொல்லவில்லை. உங்கள் மனைவியைப் பற்றிப் பெருமையாகச் சொல்ல வேண்டும் என்றுதான் சொன்னேன். நீங்கள் வேறுவிதமாக அர்த்தப்படுத்திக் கொண்டீர்கள்'' என்றான் ரங்கமணி.

''பரவாயில்லை. நீங்கள் என் நண்பர். என்ன வேண்டுமானாலும் சொல்லலாம். நான்தான் அவசரப்பட்டு வார்த்தைகளை உதிர்த்து விட்டேன்'' என்று கூறி, அவன் தோளை வாஞ்சையுடன் அழுத்தினான் சிவானந்தம். அந்த அழுத்தத்தில் சிவானந்தத்தின் நல்ல மனத்தைப் புரிந்து கொண்டான் ரங்கமணி.

திரிவேணி பேசி முடிந்ததும் சிவானந்தத்திடம் விடைபெற்றுக் கொண்டு ரங்கமணி வீட்டுக்கு விரைந்தான். இவனுக்காக வீட்டில் அத்தை காத்திருந்தாள். குமாரும் தன் வீட்டுக்குப் போகாமல் அங்கேயே இருந்தான்.

ரங்கமணி தெருத் திருப்பத்தில் வந்தபோதே அவனைத் தெரு விளக்கில் அடையாளம் கண்டு கொண்ட குமார், ''அத்தை, அண்ணா வந்து விட்டார்கள்'' என்று கூவிக் கொண்டு வீட்டுக்குள் ஓடினான். பரபரப்புடன் அத்தை வாசலுக்கு விரைந்து வந்தாள். ரங்கமணி அவசரமாக வீட்டு வாசலை அடைந்தான்.

''வாப்பா, ரங்கமணி! அப்போதே அண்ணா போன் செய்தார்கள். ஏன் இவ்வளவு நேரம்?'' என்று அத்தை வாஞ்சையுடன் கேட்டாள்.

''வழியில் திரிவேணியின் பிரசங்கத்தைக் கேட்டுக்கொண்டிருந்து விட்டேன்'' என்றான். ரங்கமணியைக் கண்டதும் ஜிம்மி வாலை ஆட்டிக் கொண்டு ஓடி வந்து அவன் மீது ஆசையுடன் விழுந்து விளையாடியது. அதை ஒரு கையில் தூக்கிக் கொண்டு வீட்டுக்குள் விரைந்தான். ரங்கமணியை ஏற இறங்கப் பார்த்தாள் அத்தை.

''மெலிந்து விட்டாயே. சாப்பாடு சரியில்லையா?'' — அத்தை பரிவோடு கேட்டாள்.

''இல்லையே, சப்பாத்தியும் பருப்பும் சாப்பிட்டு ஊறிப் போயிருக்கிறேனே!'' என்றான் ரங்கமணி சிரித்துக் கொண்டு.

''மெலிந்துதான் போயிருக்கிறாய். நேரமாகி விட்டது. சாப்பிட வாயேன். எப்போது சாப்பிட்டாயோ !''

''திரிவேணியும் வரட்டுமே?'' என்றான் ரங்கமணி.

''கூட்டம் முடிந்து எப்போது வந்து சேருவாளோ...? நேரமானாலும் ஆகும். நீ சாப்பிடு'' என்றாள் அத்தை.

''அக்காவும் வந்தாச்சு!'' என்று குமார், வாசலிலிருந்து கத்தினான்.

வாசலில் வண்டி வந்து நிற்கும் சத்தமும், அதைத் தொடர்ந்து குமார் பேசுவதும் கேட்டது.

''அக்கா, ரங்கமணி அண்ணா வந்தாச்சு'' என்றான் குமார்.

''அப்படியா....?'' என்று வியப்புடன் கேட்டுக் கொண்டே ஆவலோடு வீட்டுக்குள் விரைந்து வந்தாள் திரிவேணி. அத்தை, மெதுவாக அடுக்களைக்குள் போய்விட்டாள். வீட்டுக்குள் நுழைந்த திரிவேணி வியப்புடன் ரங்கமணியைப் பார்த்தாள்.

''இன்று வருவதாகத் தகவலே இல்லையே?'' என்றாள்.

''அப்பாவுக்குத் தந்தி அடித்தேனே !''

''அப்பா அதைச்சொல்லவா போகிறார்கள்? தீவிரவாதிகளின் நடமாட்டங்களெல்லாம் இரகசியமாயிற்றே !''

ரங்கமணி அவள் நெற்றியை உற்றுப் பார்த்தான்.

''என்ன பார்க்கிறீர்கள்? திலகமெல்லாம் ஆறி விட்டது'' என்றாள் திரிவேணி. பிறகு சொன்னாள்: ''உங்களை இன்று எதிர்பார்க்கவே இல்லை!''

''எதிர்பார்த்திருந்தால் என்ன செய்திருப்பாயாம்?'' என்று கேட்டான் ரங்கமணி, அவளைக் கூர்ந்து பார்த்துக் கொண்டே. அதற்குப் பதில் கூற முடியாமல் ஒருகணம் திணறினாள் திரிவேணி. நல்ல வேளை, அந்த இக்கட்டான நிலையிலிருந்து அத்தை காப்பாற்றினாள்.

''அப்புறம் பேசுங்கள். இலை போட்டு விட்டேன். சாப்பிட வாருங்கள். அவன் எப்போது சாப்பிட்டானோ? மிகுந்த பசியோடிருப்பான். சரியாகச் சாப்பாடு இல்லாமல் மெலிந்து விட்டானே!'' என்று அத்தை அங்கலாய்த்தாள்.

''மெலிவா? டில்லிச் சப்பாத்தியை விழுங்கி உடல் ஒரு சுற்றுப் பருத்திருக்கிறது'' என்றாள் திரிவேணி, குறும்பாக அவனைப் பார்த்துக் கொண்டு.

அன்று ரங்கமணி வயிறு புடைக்கத் தின்றான். பாவம், மூன்று வாரங்களாகக் கோதுமையைத் தின்ற வேதனை இப்போது தான் தணிந்தது. சாப்பிட்டு முடிந்தவுடன் ரங்கமணியும் திரிவேணியும் வராந்தாவில் கிடந்த சோபாக்களில் அமர்ந்தார்கள். வெளியே நிலவு காய்ந்து கொண்டிருந்தது.

''எனக்கு என்ன வாங்கி வந்தீர்கள்?'' — திரிவேணி கேட்டாள்.

''உனக்கு வாங்க வேண்டிய சாமானைத் தூக்கிக் கொண்டு வர முடியாதே; அதனால் தான் வாங்கவில்லை'' என்றான் ரங்கமணி.

''அது என்ன அவ்வளவு பெரிய சாமான்?''

''ராட்டினம்.''

இதைக் கேட்டுத் திரிவேணி 'கலீர்' என்று சிரித்தாள்.

''என்னை ஏமாற்றி விட்டீர்களே!'' என்றாள்.

''என்ன ஏமாற்றி விட்டேன்?'' — ஒன்றும் புரியாமல் கேட்டான் ரங்கமணி.

''காந்திஜியைத் தில்லியில் சந்திக்கும்படி சொன்னேனே. நீங்கள் சந்திக்கவில்லையாமே?''

''சந்திப்பதாக உனக்கு வாக்குக் கொடுக்கவில்லையே.... நான் சந்திக்கவில்லை என்று உனக்கு எப்படித் தெரியும்?''

'' மகாதேவ தேசாய் எழுதியிருந்தார். நீங்கள் வருவீர்கள் என்று தேசாய் எதிர்பார்த்தாராம்.''

''இப்போது என்ன குறைந்து விட்டது? நான் போயிருந்தால்கூட, மகாத்மாவுக்கு



கானிகாபோலி

'காணிகாபொலி' என்ற ஆங்கிலச் சொல்லைக் கேள்விப்பட்டிருக்கிறீர்களா? இல்லையானால் ஆக்ஸ்போர்டு ஆங்கில அகராதியில் தேடிப் பாருங்கள், தெரியும்! 'கணக்குப்பிள்ளை' என்ற அழகான தமிழ்ச் சொல் வெள்ளைக்காரத் துரைகளின் வாயில் விழுந்து படாத பாடு பட்டுக் 'காணிகாபொலி' (Conicopoly) யாக மருவியிருக்கிறது! —'பிரியா'

என்னைப் பார்க்க நேரம் இருந்திருக்காது. கிரிப்ஸ் திட்டம் சம்பந்தமாக ரொம்பவும் காரியமாக இருந்திருப்பார்.''

''நீங்கள் நினைப்பது தவறு. மகாத்மா என்ன சொன்னாராம் தெரியுமா? கிரிப்ஸைச் சந்தித்ததைவிட, அந்தத் தமிழ்நாட்டுப் பையனைச் சந்தித்திருந்தால் எவ்வளவோ சந்தோஷமாயிருந்திருக்கும். நன்மையும் கிடைத்திருக்கும் என்றாராம். ஆனால் நீங்கள் சந்திக்காமல் வந்து விட்டீர்களே!'' என்றாள் திரிவேணி மிகுந்த வருத்தத்துடன்.

''நான்தான் சந்திக்க மாட்டேன் என்று சொல்லி விட்டேனே!'' என்றான் ரங்கமணி அழுத்தமாக. பிறகு அறைக்குள் சென்று தோல்பெட்டியைத் திறந்து வர்ணத் தாளில் சுற்றியிருந்த ஒன்றை எடுத்து வந்து திரிவேணியிடம் கொடுத்தான். அதைப் பிரித்தாள். உள்ளே பளிங்கில் செதுக்கப்பட்ட தாஜ்மகால் இருந்தது.

''எனக்கா இது?'' — என்று ஆவலோடு கேட்டாள் திரிவேணி.

''உனக்கேதான்!'' என்றான் ரங்கமணி, அவள் முகத்தை ஆர்வத்தோடு பார்த்துக் கொண்டு.

அந்தப் பளிங்கு மஹாலை அப்படியும் இப்படியுமாகத் திருப்பி நிலவொளியில் அழகு பார்த்து ரசித்தாள். அவள் மனம் பூரித்தது. தாஜ்மஹாலே முகலாய சக்கரவர்த்தியின் காதல் காணிக்கைதான். அதையே இன்று ரங்கமணியிடமிருந்து பெற்றிருக்கிறாள்! எவ்வளவு பொருத்தம்! இந்த நினைவு அவள் உடல் முழுவதும் இன்பப் பரவசத்தை மூட்டியது.

இரவு வெகுநேரம் பேசிக் கொண்டிருந்து விட்டு இருவரும் பிரிந்தனர். படுக்கையில் புரண்ட திரிவேணிக்குத் தூக்கம் வரவில்லை. ரங்கமணி ஊர் திரும்பியதில் அவளுக்கு ஏற்பட்டிருந்த ஆனந்தத்தில் தூக்கம் எப்படி வரும்? எதையெல்லாமோ எண்ணிக்கொண்டு நினைவுச் சுழலில் மூழ்கிக் கிடந்தாள்.

ரங்கமணி . டில்லிக்குப் புறப்பட்டுப்போன அன்று இரவு கண்ட சொப்பனத்தை நினைத்துக் கொண்டு தனக்குள்ளேயே வெட்கப்பட்டுக் கொண்டாள். கை தானகக் கன்னத்தைத் தடவிப் பார்த்துக் கொண்டது. கன்னத்தில் குறுகுறுப்புத் தோன்றுவதுபோல் இருந்தது. திடீரென்று எழுந்து விளக்கைப் போட்டுக் கொண்டு ரங்கமணி கொடுத்த தாஜ்மகாலை எடுத்துப் பார்த்தாள். பிறகு அதை மேஜை மீதிருந்த ரங்கமணியின் போட்டோவுக்குப் பக்கத்தில் வைத்துவிட்டு, படத்தையும் தாஜ்மஹாலையும் மாறி மாறிப் பார்த்து ரசித்துக் கொண்டிருந்தாள். சிறிது நேரத்தில் விளக்கை அணைத்துவிட்டு மீண்டும் படுக்கையில் படுத்தாள். பக்கத்து அறையில் ரங்கமணி தூக்கமில்லாமல் புரளும் சத்தம் கேட்டது. அவள் உள்ளத்தில் ஒருவிதக் குறுகுறுப்பு ஏற்பட்டது.

இவளைப் போல்தான் ரங்கமணியும் தூக்கமில்லாமல் படுக்கையில் நெளிந்து கொண்டிருந்தான். விரலில் கிடந்த பச்சைக் கல் மோதிரத்தைத் திருகிக் கொண்டே பல நினைவுகளில் மூழ்கிக் கிடந்தான்.

நினைவில் கமலவாசகியின் . வதனம் தோன்றி அவனை வாட வைத்தது. இடையிடையே திரிவேணியின் முகமும் தோன்றும் விந்தையை அவனால் புரிந்துகொள்ளவே முடியவில்லை. கமலவாசகியின் இடத்தில் மனம், திரிவேணியை இரகசியமாக இருத்தித் தன்னை ஏமாற்றுகிறதா என்று அஞ்சினான்.

தீட்சிதர் சொன்னது எவ்வளவு உண்மை

''என்னதான் லட்சியம், புரட்சி என்று ஊருக்காகச் சுற்றிக் கொண்டிருந்தாலும், நமக்கு என்று ஒரு தனி உலகம் வேண்டுமப்பா... லட்சியத்துக்காக அலைந்து ஓய்ந்தவனுக்கு இளைப்பாற நிழல் கிடைக்குமிடம் அது தான். சீக்கிரம் ஒரு கல்யாணத்தைச் செய்து கொள்.......''

சென்னைக் கடற்கரை மணலில் தீட்சிதர் படுத்துக் கொண்டு சொன்னதை நினைவில் இழுத்து வைத்துக் கொண்டு சிந்தித்தான் ரங்கமணி.

ரங்கமணிக்கு நிழல் தேவை. அதை எங்கு தேடுவது? அவனுக்குக் கற்பகச் சோலையாகத் தோன்றியவள், நிழல் தர மறுத்துவிட்டாள். ஆனால் ரங்கமணி, அவளை எண்ணி எண்ணி வாடத் தொடங்கி விட்டான்! கைவிட்டுப் போன பொருள் மீது ஆசை மீறுகிறது. இந்த நினைவே இல்லாமல் இருந்து விடத்தான் நினைத்தான். விடுதலை இயக்கத்தில் பூரணமாக அமிழ்ந்து, உடல் அவஸ்தையிலிருந்து விடுபட்டு விடலாம் என்றுதான் நம்பினான். அந்த நம்பிக்கையில்தான் நாடு சுதந்திரம் பெற்ற பிறகு திருமணம் செய்து கொள்ளலாம் என்றிருந்தான். ஆனால் என்னதான் முயன்றாலும் மனம் இந்த மண்ணோடு தானே வந்து ஒட்டுகிறது. எவ்வளவுதான் உயர உயரப் பறந்தாலும் கடைசியில் மண்ணுக்கு வந்துதான் தீர வேண்டியிருக்கிறது.

லட்சியங்களும் கடமைகளும் மனத்துக்குத் தானே தவிர உடலுக்கு அவைகள் என்ன திருப்தியைக் கொடுத்து விடுகின்றன? மனம், மனிதனைத் தேவனாக ஆக்கினாலும் அவனை மனிதனாகவே வைத்திருக்க உடல் இருந்து தொலைக்கிறதே.

மனித இயல்புதான் இயற்கை; மாறானவை அனைத்தும் செயற்கைதான் — இப்படிச் சிலர் வாதிக்கிறார்கள்.

அதனால் இயற்கையைத்தான் தொடர வேண்டும், அதுதான் தர்மம் என்று வாதிக்க முடியுமா? செயற்கையை முழுக்க முழுக்க ஒதுக்கி விடுவதாயிருந்தால் உடை உடுத்துவானேன், படுக்கையறைக் கதவைத் தாளிடுவானேன்? மனித இயல்பில் மிருகத்தனமும் கலந்துதானிருக்கிறது. மனிதன் தன்னைத் தட்டித் தட்டித்தான் மனிதனாக ஆக்கிக் கொள்ள வேண்டியிருக்கிறது. தான் மனிதன் என்ற உண்மையை அடிக்கடி ஞாபகமூட்டிக் கொள்ளவும் வேண்டியிருக்கிறது.

மனிதனை மகானாக்குவது அறிவானால், அவனை மிருகமாக்குவது ஆசை. ஆனால், மனிதனை மனிதனாகவே இருக்கச் செய்ய அறிவும் உடலுடன் உறவாட வேண்டியிருக்கின்றது. இந்த உறவு முறிந்து, அறிவு உயர்ந்தால், மகானாகலாம்; உடல் உயர்ந்தால் மிருகமாகலாம். இந்தப் போட்டிதான் ரங்கமணியிடம் வெகுநாட்களாக அடிக்கடி நடக்கிறது. பருவம் நடத்தும் இந்தப் போட்டியில் ரங்கமணி சிக்கிக்கொண்டு தவித்தான்.

ஒரு சமயம் சென்னையில் ரங்கமணியின் அறைக்குக் கமலவாசகி வந்திருந்தபோது இந்த உண்மையைப் பூரணமாக உணர்ந்தான். தனிமை, இளமையின் துடிப்பு, எல்லாமாகச் சேர்ந்து கொண்டு சதி செய்யத் தொடங்கி விட்டன. ரங்கமணியின் கை கமலவாசகியைப் பற்றி இழுத்தது. அந்த இனிமையில் தன்னை மறந்து நின்றாள் கமலவாசகி. நெருங்கி நின்றவனை அவளுடைய பார்வை சுற்றிச் சூழ்ந்தது. பார்வையின் முற்றுகைக்குள் சிக்கிய கமலவாசகி, உணர்ச்சி வசத்தில் இருந்தாள். திடீரென்று ரங்கமணியின் கரங்கள் அவளைச் சுற்றி வளைத்தன. ஒரு கணம் இருவர் பார்வையும் கலந்து ஒன்றுபின. உலகம் மறைந்துவிட்டது. சூழ்நிலை மறைந்துவிட்டது. ஏன்... அவர்களே மறைந்து விட்டார்கள். மிஞ்சியது, வெறும் உணர்ச்சி; உணர்ச்சி மட்டுமே தான். இருவர் உதடுகளும் ஒன்றை ஒன்று நெருங்கின.....

திடீரென்று அலாரம் கடிகாரம் அலறியது. இருவரும் திடுக்கிட்டு விலகினர். எவ்வளவு பெரிய அதிர்ச்சி. உணர்ச்சி வெறியில் பொறி கலங்கி மிருகமாக மாறிக் கொண்டிருந்தவனை மனிதனாக்கி விட்டது கடிகாரத்தின் அலறல். இல்லை, இல்லை. மனிதனாக இருந்தவனைத் தேவனாக்கி விட்டது.

தேவனாக வாழ இந்த மண்ணில் பிறப்பானேன்.....?

ரங்கமணி குமம்பித் தவித்தான். தவிப்பின் வெப்பத்திலிருந்து தப்ப அவனுக்கு நிழல் தேவை. அது எங்கே இருக்கிறது? இரண்டு நிழல்கள் விழுவதாகப் பிரமை தட்டுகிறதே! கமலவாசகியும், திரிவேணியும் மாறி மாறி அவன் நினைவில் சுழன்று கொண்டிருந்தார்கள். அவனுடைய லட்சியம், கடமை எல்லாமே உயரத்தில் இருந்தன. அவன் மட்டும் மண்ணுக்கு வந்து விட்டான். மண்ணைத் தீண்டியதும் நினைவில் சேறும், சகதியும் ஒட்டிக் கொண்டன. ஒட்டிய அழுக்கை உதறி விட்டு உயரப் பறந்துவிடவேண்டும் என்றுதான் உள்ளுணர்வு துடித்தது, தவித்தது. ஆனால் காதலின் வேகம், அவனை எங்கோ இழுத்தது. எப்படியும் ஒரு முறை ஊத்துப்பட்டிக்குப் போய்க் கமலவாசகியைச் சந்திக்க வேண்டும் என்று முடிவுசெய்து கொண்டான்.

நினைவுப் பின்னலில் அகப்பட்டுத் தத்தளித்தவன், வெகு நேரத்துக்குப் பிறகு தன்னை மறந்து தூங்கி விட்டான். (தொடரும்)

மழைக்கு ஓர் ஆட்டம்



உண்மையாகவே இந்தக் கூடைப் பந்தாட்டத்துக்கும் மழைக்கும் ஓர் உறவு இருக்கிறது போலும்! இந்தப் பந்தயங்கள் நடக்கும்போதெல்லாம் மழை கொட்டு கொட்டென்று கொட்டி ஆட்டக்காரர்கள் பாஸ்கெட்பால் ஆடுவதற்குப் பதிலாக 'ஸ்கேட்டிங்' செய்ய வேண்டி நேரிடுகிறது. மழை வருவதற்கு எத்தனை எத்தனையோ பகீரதப் பிரயத்தனங்கள் செய்கிறவர்கள் இந்தக் கூடைப் பந்தாட்டக்காரர்களை வரவழைத்துத் தங்கள் ஊர்களில் ஆட வைக்கலாமோ?


இறுதி ஆட்டத்தில் இந்திய விமானப் படை ஆட்டக்காரர்களும், பெரம்பூர் பெட்டி கட்டும் தொழிற்சாலைக் குழுவினரும் மக்ளேலியா கோப்பையைப் பெறப் போராடினார்கள். 'லேட்'டாக வந்த இருவாளர் வருண பகவான் 'ஒன்ஸ்மோர்' கேட்பதற்கு மழை அஸ்திரத்தைப் பிரயோகித்து மறுநாள் ஆட வைத்துவிட்டார். மழைக் கோட்டும், குடையும் பாதுகாப்பாக எடுத்து வந்து நாலாயிரத்துக்கும் மேற்பட்ட ரசிகர்கள் ஆட்டத்தை விடாது இரண்டு நாட்களும் கண்டு களித்தார்கள். மாம்பலம் ஏஸ் ஜெப்பினர் நடத்திய இந்த இறுதிப் போட்டியில் பெரம்பூர் ரயில் பெட்டி கட்டும் தொழிற்சாலையினரே வெற்றிவாகை சூடினர். இணைந்து ஆடும் வல்லமை படைத்த ஐ. ஸி. எப். குழுவில் முனுசாமி டாப் ஸ்கோரர்!' எத்தனை எத்தனையோ ஆட்டங்களுக்குக் காக கொடுத்துப் போவதற்குத் தயங்கிய வருண பகவான் இந்தக் கூடைப் பந்தாட்டத்துக்கு 'ஓஸி' யாதலால் அழையாமலே வந்துவிட்டார்! 'ஓஸி டிக்கெட் ஒழிக!' என்று வருண பகவானுக்குக் கோஷம் எழுப்ப முடியவில்லை ரசிகர்களால்! ஏனென்றால் அவர்களும் ஆட்டத்தை ஓஸியில் பார்த்தவர்கள் தானே!

— குண்டுமணி



வசீகரமான வனப்பைப் பெறுங்கள்... முகத்திற்கு மோகன மேன்மை அளியுங்கள்!

வெண்பனிபோன்ற பாண்ட்ஸ் வானிஷிங் க்ரீமைத் தடவிக்கொண்டால் உங்கள் சருமம் மிருதுத்தன்மை பெற்று, மழமழப்பாக, பளிச்சென்று திகழும்... முகத்தில் கரும்புள்ளிகள் வராமல் தடுப்பதோடல்லாமல், காற்றிலும், வெய்யிலினாலும் சருமம் வரட்சியடையாமல் பாதுகாக்கும். அதைத் தனியாகத் தடவிக் கொள்ளலாம் அல்லது அதன் மீது பவுடர் போடலாம். பவுடர் ஒரேசீராகப் படிந்து, மணிக் கணக்காகக் கலையாமல் இருக்கும்.
உலகெங்கும் பேரழகிகள் பலரும் பாண்ட்ஸ் வானிஷிங் க்ரீம் உபயோகிக்கின்றனர்.



பாண்ட்ஸ் வானிஷிங் க்ரீம்—பவுடர் ஒற்றிக்கொள்ள ஒப்பற்ற க்ரீம்

சீஸ்ப்ரோ-பாண்ட்ஸ் இன்கார்ப்பொரேடெட்

(வரையறுக்கப்பட்ட பொறுப்புடன் யு.எஸ்.ஏ.யில் இணைக்கப்பட்டது)

P 5390

மூன்றாவது பரிசு நாவல்



மணக்கோலம்

பி. வி. ஆர்

அத்தியாயம் 20

ரகுபதியின் முன் அவன் மனைவி சாரதாவையும் மகனையும் நேரில் கொண்டு நிறுத்தியதோடு சேஷன் நிற்கவில்லை. ''முதலிலே சாரதாவுக்கு என்ன பதில் வைத்திருக்கிறீர்!'' என்றான் சேஷன். இப்படிச் சொன்னவன் ரகுபதியை நெருங்கினான்.

''என்ன பதில் அவளுக்கு! எங்கேயிருந்து வந்திருக்காளோ, அங்கேயே போகட்டும்!''

''இனிமேல் அவளுக்கு ஜாகை, மெட்ராஸிலேதான். ஒண்ணு, நீங்கள் அவளையும் பிள்ளையையும் ஒழுங்காக வைத்துக் கொள்ளணும். இல்லாவிட்டால் அவளுக்குச் சேர வேண்டியதைப் பையனுடைய பங்கைக் கையிலேயே கொடுத்துடணும். இன்னிக்கு 'ஹிந்து' பேப்பர் பார்த்தீர்களோ? நீங்க வாங்கின, வாங்கும், வாங்கப் போற கடனுக்குத் தானோ தன் பிள்ளையோ பாத்தியதை இல்லேன்னு நோட்டீஸ் கொடுத்திருக்கிறாள் உங்களுக்கு!''

''சேஷா, ஓட ஓட விரட்டாதே! நான் யார் என்கிறதை இன்னும் ரெண்டு நாளிலே காட்டறேன்...!''

''நான் பனங்காட்டு நரி. சலசலப்புக்கா பயப்படுவேன்...நீங்க யாருன்னு தான் இப்போ இத்தனை பேருக்கும் தெரிஞ்சுடுத்தே!''

''ஸார்...!'' என்று மறுபடியும் ஆரம்பித்த சீதா, ''ஒரு பெண்ணின் வாழ்க்கையை நாசமாக்கி இன்னொரு பெண்ணின் வாழ்க்கையையும் நாசம் செய்யப் பார்த்தீர்களே.... இது உங்களுக்கே அடுக்குமா? நான் என்ன தப்பு செய்தேன்?'' என்றாள்.

ரகுபதி வாய் திறக்கவில்லை.

''சரி, சரி! போதும்... அவர்களை அனுப்பு. தலைக்கு வந்தது தலைப்பாகையோடு போச்சுன்னு இருப்போம். உன் தலை எழுத்து இப்படி இருக்கணும்னு, இவர்களை நாம் நொந்து என்ன புண்ணியம்?'' என்றாள் பாகீரதி.

சந்தானமும் அதை ஆமோதிப்பது போல, ''ஜானு, கதவைத் திற....'' என்றான்.

வாயையே திறக்காத அலமேலு அம்மாள் மெதுவாக நழுவினாள்.

''மாமி போறாள்டீ...ஜானு! குங்குமம் கொடேன்...'' என்றாள் கமலா.

ஜானு வாய்விட்டுச் சிரித்தாள். அவளுடைய சிரிப்பொலி மறைவதற்குள் அலமேலு மறைந்து விட்டாள்.

ரகுபதியும் மெதுவாக நகர்ந்தான்.

''உன் அப்பாகூட நானும் நீயும் வரலாமான்னு கேளுடா கோபு!'' என்றாள் சாரதா திடீரென்று. கம்மிய அவளது குரலிலிருந்து, இத்தனை நேர மும் அவள் பிறர் அறியாமல் அழுதிருக் கிறாள் என்று தெரிந்தது.

''நீயே கேளு, சாரதா!'' என்றான் சேஷன்.

''நாங்களும் வரலாமா....?''

ரகுபதி திரும்பிக்கூடப் பார்க்கவில்லை.

''சரி..... கோர்ட்டிலே பார்த்துக் கொள்ளலாம்!'' என்றான் சேஷன்.

ரகுபதி காதில் வாங்கிக் கொள் ளாமல் வெளியேறினான்.

ஃ ஃ ஃ

ஒன்பது மணிக்கு மேல் சேஷன் சாரதாவையும் கோபுவையும் அழைத் துக்கொண்டு வெளியேற, சந்தானம் அழுது கொண்டிருந்த சீதாவைப் பார்த்து, ''நீ அழறதுதான் வேடிக்கை யாக இருக்கிறது! எதற்காக அழு கிறாய்?'' என்று கேட்டான்.

''ஒன்றுமில்லை!'' என்று சீதா கண் களைத் துடைத்துக் கொண்டாள். அந்தச் சமயத்திலே தனக்கும் கலியாணத்துக் கும் பொருத்தமே இல்லை என்ற எண்ணம் எழுந்து வேரூன்றி நின்றது.

ஜானுவும் கமலாவும் கேலியிலும் பரிகாசத்திலும் இறங்கினார்கள். அதில் கலந்து கொள்ள விருப்பமில்லாதவ னைப் போல் சந்தானம் தனது அறையை நோக்கி நடந்தான்.

ஜானு, ''என்ன சந்தானம், அவ சரம்?'' என்று கேட்டாள்.

''நீங்கள் எல்லோரும் கட்டிய மூட்டையை அவிழ்க்கணும்.... நான் மூட்டையைக் கட்டணும்!'' என்றான் சந்தானம், ஒரு கணம் நின்றுவிட்டு.

''என்ன சொல்லுகிறீர்கள்?'' என்றாள் ஜானு.

''ஆமாம்...நான் அறையை நாளைக் குக் காலி பண்ணுகிறேன்...!''

இதைக் கேட்டுக் கமலாவும் ஜானுவும் ஸ்தம்பித்து நிற்க, சீதா திடுக்கிட்டாள். பாகீரதியால் தன் காதுகளையே நம்ப முடியவில்லை.

சந்தானம் அறைக்குள் வந்து உட் கார்ந்தான். மனத்துக்கு ஓய்வு தேவை என்று படவே அவன் கண்களை மூடிக் கொண்டு நிச்சிந்தையாய் இருக்க முயன்றான்.

மறு நாள் காலையில் சீதா ஏதோ காரியமாகச் சந்தானத்தின் அறைக்குள் வந்த போது, அவனுடைய சாமான் எல்லாம் ஒழுங்காக இரண்டு மூன்று பெட்டிகளில் வைக்கப்பட்டிருப்பதைக் கண்டாள். நாற்பது அல்லது ஐம்பது புத்தகங்கள், நான்கு வரிசைகளில், ஒன்றன் மேல் ஒன்றாக அடுக்கப்பட் டிருந்தன.

சந்தானம், சீதா வந்ததையும் அறியாமல் மேஜை டிராயரில் ஏதோ தேடிக் கொண்டிருக்க, அவள் சிறிது நேரம் அசைவற்று நின்றுவிட்டு, மெது வாகக் கேட்டாள்.

''இதன் அர்த்தம் எனக்குப் புரிய வில்லை!'' என்றாள்.

''ஏன்.....?''

''நீங்கள் காலி பண்ணப் போகி றேன்னு ஜானுகிட்டே சொன்னபோது திகைப்பாக இருந்தது. சந்தர்ப்பம் சரி யாக இல்லாததனால் அப்புறம் கேட்டுக் கொள்ளலாம்னு இருந்து விட்டேன். ஆனால் நீங்கள் அவசரப்பட்டு இப் படி'' என்று குழறினாள்.

''இந்த முடிவு அவசரப்பட்டு எடுத்த முடிவு அல்ல, சீதா.... உன் கலியாணம் நிச்சயமானதும் நான் வெளியேறியிருந் தால் ஊரார் நாலு பேசக் காரண முண்டாகும். நீங்களும் என்ன நினைப் பீர்கள்? அம்மா கோபித்துக் கொண் டாள், அதனால் நான் வெளியேறிவிட் டேன் என்று நினைப்பீர்கள். நான் எப்படிச் சிநேகமான முறையிலே வந் தேனோ, அதே பாவத்தோடு செல்ல வேண்டும் என்று ஆசைப்பட்டேன். தெய்வானுகூலத்தாலே அது நிறை வேறுகிறது!''

''நாங்கள் என்ன குத்தம் செய் தோம்னு சொல்லுங்கள். மன்னிப்புக் கேட்கிறோம்!'' சீதாவின் குரல் கம்மியது.

''யாரும் எந்தக் குற்றமும் செய்ய வில்லை. ஒரு நாள் இல்லாவிட்டால் ஒரு நாள் நான் போக வேண்டிய அந்நியன்தானே!''

''நாங்கள் உங்களை அப்படி என்றைக் காவது நடத்தியிருக்கோமா?''

''இல்லை.... ஆனால் உண்மையை நாம் என்ன முயன்றாலும் மாற்றிவிட முடியாது அல்லவா?''

''என் அம்மா ஏதோ தன்வசப்பட் டுப் போய் வாய் வார்த்தையால் உங்கள் மனத்தைப் புண்படுத்தி யிருக்கலாம். அதற்காக....''

''அதற்காக நான் இப்போ கிளம்ப வில்லை. அதே உன் அம்மா எத்தனை முறைகள் என் மனசுக்கு இனிமையாக வும் இருந்திருக்கிறாள்! அதை யெல் லாம் நான் மறக்க முடியுமா?''

''ஆனால் நீங்கள் போகிறதாக இந்த முடிவு இந்தக் கலியாண விஷயத்துக்கு அப்புறம்தான் ஏற்பட்டிருக்கிறது.....

அப்போ, இதுக்கும் அதுக்கும் சம்பந்தம் இருக்கிறது என்று நான் சொன்னால் உங்களால் அதை மறுக்க முடியாது. இல்லியா....?''

''நான் ஒப்புக் கொள்ளவு மில்லே, மறுக்கவுமில்லே..... எங்கேயிருந்தாலும் நான் உங் களையெல்லாம் அடிக்கடி பார்த்து விசாரிக்காமல் இருக்க மாட்டேன்......!''

''நீங்கள் இவ்வளவு பிடிவாத மாகப் போகிற போது, அந்தக் குசலப்பிரச்னமே தேவையற்றது. மனச்சாட்சியைத் திருப்தி செய்





அவனுக்கு போர்ஹான்ஸ் கொண்டு பற்களைத் தக்கபடி பாதுகாக்கும் முறையைக் கற்பிக்க வேண்டிய காலம்

உங்கள் குழந்தை தூரத்து இடங்களைப் பற்றி அறிய ஆவலாயிருக்கும் போது உங்களை நாடுகிறான். உங்களிடமிருந்து அவன் கற்கும் முக்கியமான விஷயங்கள் பல. அவற்றில் ஒன்று போர்ஹான்ஸ் பற்பசையினால் பற்களைத் தக்கபடி பராமரித்தல். போர்ஹான்ஸ், ஈறு உபாதைகளையும், பற்சிதைவையும், தடுக்க உதவுகிறது.



பல் வைத்தியர் ஒருவரால் உருவாக்கப்பட்ட போர்ஹான்ஸ் ஈறுகளைப் பாதுகாக்கும் விசேஷப் பொருள் கொண்டது. அது உங்களுக்கு மட்டுமின்றி உங்கள் குழந்தைக்கும் நல்லது. எனவே இன்றும், என்றும் பற்கோளாறுகளைத் தடுப்பது எப்படியென்று அவனுக்குக் கற்றுக் கொடுங்கள். அவனை இரவிலும், காலையிலும் போர்ஹான்ஸ் உபயோகிக்கச் செய்யுங்கள். இப்பொழுதே அவனுக்கு ஆயுட்கால முழுதும் பற்களைப் பாதுகாக்கும் முறையைக் கற்றுக் கொடுங்கள்.

போர்ஹான்ஸினால்
பற்களைப் பாதுகாக்கும் முறையைக் கற்பிக்க இதுவே சிறந்த சமயம்



இலவசம்! "பற்களையும், ஈறுகளையும் பராமரிக்கும் முறை" என்ற விவரமான வண்ணப் புத்தகம் 10 மொழிகளில்* கிடைக்கிறது. தபால் செலவுக்கு 10 பைசா தபால் தலைகளை அனுப்பவும்: மானேர்ஸ் டென்டல் அட்வைசரி ப்யூரோ, தபால் பை நம்பர் 10031, பம்பாய்-1.

பெயர் ....

முகவரி ....

*வேண்டிய மொழியைக் கோடிட்டுக் காட்டுக: தமிழ், ஆங்கிலம், இந்தி, மராத்தி, குஜராத்தி, உருது, வங்காளம், தெலுங்கு, மலையாளம் அல்லது கன்னடம்.
உங்கள் குழந்தை படிக்க வேண்டிய முக்கியமான புத்தகங்களுள் இதுவும் ஒன்று.

K 6

போர்ஹான்ஸ் பற்பசை—பல்வைத்தியர் ஒருவரால் உருவாக்கப் பெற்றது

CMGM-18 B TM

வதற்காகச் செய்யப்படுவது என்று எனக்குப் படுகிறது......!''

சந்தானம் அவளைப் பார்த்துவிட்டு நிதானமாகச் சொன்னான்: ''சீதா! உன் நல்ல மனசும், பெருந்தன்மையும்தான் என்னை எப்போதுமே, 'நீ என் சொந்தத் தங்கையாக இருந்திருக்கக் கூடாதா?' என்று ஏங்க வைக்கும். நீங்கள் மூன்று பேரும் உங்கள் அம்மாவும் இது நாள் வரை மனம் கோணாமலேயே இருந்திருக்கிறீர்கள். அம்மா கோபிச்சுக்கிட்டதாக நீங்கள் எல்லாரும் சொல்லிக் கொண்டிருக்கிறீர்கள். ஆனால், நான் எப்பவுமே அப்படி நினைக்கவில்லை. இவ்வளவெல்லாம் இருந்தும், நான் கிளம்புகிறேன் என்றால் அதற்கு முக்கியமான நோக்கமும் இருக்கலாம். அல்லவா?''

''அது என்ன?''

இத்தனை நேரமாக ரேழியில் இருந்து கொண்டே சம்பாஷணை முழுவதையும் கேட்ட ஜானுவின் குரல் இருவரையும் தூக்கிவாரிப் போட்டது.

''ஜானு! நீயும் வந்து விட்டாயா!'' என்றான் சந்தானம். அவன் சிரித்த போது விரக்தி வெடித்தது.

''ஆமாம். வந்துவிட்டேன். நீங்கள் எப்படி இந்த வீட்டை விட்டுப் போகிறீர்கள் என்று நான் பார்க்கிறேன்!''

சொன்னவள், அடுத்த விநாடி அறையினுள் பாய்ந்தாள். ஒவ்வொரு பெட்டியிலிருந்தும் சாமான்களை எடுத்து வெளியே போட்டாள். துணிகளைப் பழையபடி அலமாரியில் வைத்தாள். அவளுடைய ஆவேசத்தைக் கண்ட சந்தானம் பொறுமையாக நின்று கொண்டிருந்தான்.

கடைசியில் பெருமூச்சுடன் ஜானு, ''இனிமேல் நீங்கள் போகிறேன்னு வாய் திறந்தால், நான் இந்த அறையிலேயே உட்கார்ந்து நாள் முழுதும் சாப்பிடாமல் இருப்பேன். ஜாக்கிரதை!'' என்றாள்.

அவன் பதில் சொல்வதற்குள் அங்கே வந்த பாகீரதி அம்மாள் இரு பெண்களையும் உள்ளே போகச் சொல்லிவிட்டு, ''சந்தானம்!'' என்று மெதுவாக அழைத்தாள்.

பிறகு, ''நான் பெரிய தப்புப் பண்ணிட்டேன்.... அதுக்கு நீ என்னை மன்னிக்காமல், பழி வாங்கறதுபோல் கிளம்பினால் அதுவே என்னை அணு அணுவா திங்க ஆரம்பித்துவிடும்... என் மூளை மழுங்கிப் போயிருந்தது. என் கண் திரையிட்டாப்ல மாதிரி தெரியாமப் போயிடுத்து...'' என்றாள்.

பாகீரதியின் தீனமான குரல் அவனுடைய நரம்புகளை ஒரு கணம் சிலிர்க்க வைத்தாலும், அவன் அவளுடைய இறைஞ்சுதலைக் கண்டு ஆச்சரியப்படவில்லை. ''நான் போகணும்னு தீர்மானிச்சுட்டேன், மாமி....''

''அந்த முடிவை எனக்காக மாற்று. மூணு பெண்களைப் பெத்து, நிர்க்கதியான நிலைமையிலே படாத கஷ்டமெல்லாம் அனுபவிச்சப்போ, நீ மனசுக்கு மருந்தா வந்து தெம்பு கொடுத்தே. இந்த மூணும் உன்னை உசிருக்கு மேலே நெனைக்கிறதுகள். இப்பத்தான் என் மனசும் சீதா மனசும் ஒடிஞ்சு கிடக்கு... நீ இந்தச் சமயம் பார்த்து...''

''நான் இங்கே இல்லாவிட்டாலும், பக்கத்திலேயேதான் இருப்பேன், மாமி....''

''நீ இந்த இடத்தை விட்டு ஒரு அடி விலகிப் போனாலும் மனசை விட்டுக் காத தூரம் போய்விட்ட மாதிரி எங்களுக்குத் தோன்றும். வீட்டுக்கு ஒரு புருஷத் துணையாய்; தைரியமாய் இருக்கிற நீ இல்லாதபோதுதான் எங்களுடைய நஷ்டம் தெரியும்....இப்போ எல்லாவற்றையும் மறந்துடணும்னு நான் பார்க்கிறேன்... அது கூடாது என்று நீ போகிறாய்!''

''என்னை மன்னித்துவிடுங்கள், மாமி! இந்த விஷயமாக நாம் என்ன பேசினாலும் எத்தனை நேரம் பேசினாலும், யாருக்கும் திருப்தியான முடிவு கிடைக்கும்னு எனக்குத் தோன்றவில்லை...''

''அவசரப்பட்டுண்டு இன்னிக்கே நீ கிளம்பும்படியாக ஒன்றும் நேரவில்லையே? கொஞ்சம் பொறு...''

''இந்த வீட்டுக்கு வந்ததிலிருந்து நீங்கள் சொன்ன எந்த வார்த்தையையும் நான் மீறினதில்லை...''

''அந்த வழக்கத்தை இப்போ மாற்றாதே. நான் இதுநாள்வரைக்கும் என்ன நினைத்துக் கொண்டிருந்தேன், தெரியுமா?... இந்த மூணு பெண்களும் ஒவ்வொருத்தரா அவரவர் சேரவேண்டிய இடங்களுக்குப் போனப்புறம் நீயும் நானும் ஒரே இடத்தில் இருந்து உன் பிள்ளை குட்டிகளை வளர்த்துக் கடைசியிலே உன் காலடியிலேயே பிராணனை விடணும்னு இருந்தேன். பிள்ளையில்லாத எனக்குப் பிள்ளையாக வாய்த்து விட்டாய் என்று எண்ணியிருந்தேன். என் புத்திஹீனத்திலே என்னென்னவோ பேசியிருப்பேன். நிதானம் இழந்து அப்படியெல்லாம் பேசினதெல்லாம் தப்புத்தான். நீ நல்லது நினைத்துத்தான் இந்தக் கல்யாணம் வேண்டாம்னு, சொன்னாய் என்று என் புத்தி போகவில்லை. அதுக்கு என் தப்புக்கு என்ன பிராயச்சித்தம் வேணுமானாலும் செய்யத் தயார்...'' பாகீரதி அம்மாளுடைய கண்கள் கலங்



"டிக்கெட் கேட்கலையோ! என்னிடம் டவுன் பஸ் டிக்கெட் ஒன்றும், நேற்று சினிமா பார்த்த டிக்கெட் ஒன்றும் இருக்கு. உங்களுக்கு எது வேணும்?"

கிக் கனைத்தன. தலை குவிந்து மீண்டும் அவள் நிமிர்ந்தபோது, கண்ணீர் அவளுடைய ஒட்டிய கன்னங்களில் வழிந்தோடியது.

இவளை இப்போது என்ன பேசியும் சமாதானப்படுத்த முடியாது என்று மௌனம் சாதித்தான் சந்தானம். அவனுடைய நீண்ட மௌனமே திருப்தி அளித்தது பாகீரதிக்கு. சந்தானம் தன் வேண்டுகோளுக்கு இணங்கிவிட்டான் என்ற நிம்மதியுடன் அவள், மௌனத்தைக் கலைக்காமலே திரும்பிச் சென்றாள்.

இரண்டு மூன்று தினங்கள் சென்றன. வீடு பழைய நிலைக்கு மெதுவாகத் திரும்பிக் கொண்டிருந்தது. பாகீரதியின் கதாகாலட்சேபங்கள், கமலாவின் சோம்பேறித்தனம், சீதாவின் இடுப்பை ஒடிக்கும் வேலை, ஜானுவின் அலங்கார ஆர்ப்பாட்டம் எல்லாம் மெள்ள மெள்ள மீண்டும் தலைதூக்கின. இந்த வீட்டிலா இப்படி ஒரு பயங்கர நிகழ்ச்சி நடந்தது என்று எண்ணும்படியாகிவிட்டதை நினைத்துச் சந்தானமே ஆச்சரியப்பட்டான்.

மனிதர்கள் எவ்வளவு சீக்கிரம் கஷ்டங்களுக்கு வளைந்து கொடுத்து, நிமிர வேண்டிய சமயத்தில் நிமிர்ந்துவிடுகிறார்கள்? தனக்குக் கல்யாணமே வேண்டாம் என்ற சீதா அம்மாவின் வற்புறுத்தலுக்குச் செவி சாய்த்தாள். அது நிறைவேறும் தருணத்தில் அவளுடைய வாழ்க்கையில் இரண்டாம் முறையாக நின்று போயிற்று. மூன்றும் பின்றும் ஒரே விதமான அமைதியுடன், உணர்ச்சியின் வெப்பமற்று நன்றாக உள்ளேயே புதைத்துக் கொண்டு அவள் இயந்திரமாக வாழ்கிறாள். வீட்டின் இன்பச் நிகழ்ச்சிகளிலோ, குடும்பப் பாரங்களிலோ தலையிடாத ஜானு. இப்பொழுது ரகுபதி யார், அவன் எப்படிப்பட்டவன், அவன் தனது தமக்கைக்கு ஏற்ற கணவன்தானா என்றெல்லாம் ஆராய்ந்திறவளைப் போல் ஆராய்ச்சியுடன் விருப்பமாக, தனக்கு முற்றிலும் புதிதான ஒரு காரியத்தில் ஈடுபட்டு, அதிலேயே தன் மூச்சைச் செலவழித்தாள். இப்போது அதை அவன் நினைவிலிருந்தே அகற்றிவிட்ட பின்போல நக்ஷத்திரமாயில் இருந்தாள். நெருக்கடியான நிலையில் தானா, தூக்கலை என்ற பந்தமெல்லாம் ஜானுவைக் கட்டிப் போட்டது! நெருக்கடி மறைந்தபோது அவள் பந்தத்தையும் மறந்தாள்!

மனித மனத்தை ஆராய்ச்சி செய்திருப்பவன் போல, நடந்ததை எல்லாம் மனதில் அவன் தன் அனுபவத்தையும் நினைத்துப் பார்த்தான். அவமேனு சொப்பனத்தில் கண்ட ராட்சஸியாகத் தோன்றினாளும். அவன் அதனுள் சிரிப்பைத்தான் மூட்டினான். ரகுபதி போன்ற அயோக்கியர்கள் புதுமை அல்ல என்று அவன் நினைத்தான். சேஷன் எடுத்துக் கொண்ட பங்கு தான் என்றென்றும் மறக்க முடியாததாகப் பட்டது. பாகீரதி அவன் மீது ஆத்திரம் கொண்டதும், அவனுடைய வெறுப்பு உச்சத்தை அடைந்ததும், அதன் பின் ஒரேயடியாக அவள் இறங்கி வந்து மன்னிப்புக் கேட்டதும், மனித குணத்தின் விசித்திரங்களைத்தான் காட்டின. மனித உள்ளம் உணர்ச்சிகளுக்கு எவ்வளவு சீக்கிரத்தில் அடிமையாகி விடுகிறது!

அவன் இன்னும் அந்த வீட்டிலிருந்து வெளியேறி விட்டாலும் காலி பண்ணி விட வேண்டும் என்கிற தீர்மானம் மறையவில்லை. இன்னும் சில நாட்கள் போனால் பாகீரதியின் மனம் அவனைப் பற்றி மட்டுமே நினைத்துக் கொண்டிராது. மெள்ள மெள்ள அது அவன் கூறும் வாதத்தையெல்லாம் ஏற்றுக் கொள்ளக் கூடிய பக்குவம் அடைந்துவிடும்.

எட்டு நாட்கள் எவ்வித விசேஷமும் இல்லாமல் ஓடின.

ஒரு சனிக்கிழமை பிற்பகல் இரண்டு மணிக்குத் தலையைப் பிளக்கும் தலை

450 லட்சம் பேருக்கு ஆடையணிவிக்கப் போதுமான செயற்கை இழைகளை ஓர் ஆண்டிலே உற்பத்தி செய்கின்றனர் குவாலியர் ரேயான்.



ஒரு கிலோ செயற்கை இழைகளிலிருந்து 15 மீட்டர் துணி தயாராகிறது. அதாவது ஒரு ஆள் ஓராண்டு காலம் உடுத்தப் போதுமான துணி. குவாலியர் ரேயான் ஆண்டு தோறும் 450 லட்சம் செயற்கை இழைகளை உற்பத்தி செய்கிறது; 450 லட்சம் பேருக்கு ஆடையணிவிக்கப் போதுமான துணி அது. துணி உற்பத்திக்குத் தேவையான இழைகளை வழங்குவதோடு நின்றுவிடுவதில்லை குவாலியர் ரேயான் பணி; உணவு உற்பத்திக்கு இடம் உண்டுபண்ணுகிறது. எவ்விதமெனில், பருத்திச் சாகுபடிக்காகப் பயன்பட்டுவரும் செழிப்புள்ள ஏராளமான நிலங்களை உணவுப் பயிர்களின் உற்பத்திக்கென விடுவிக்கிறது. குவாலியர் ரேயானுக்காக ஏதேனும் அயல்நாட்டு எந்திர சாதனங்களோ, மூலப் பொருள்களோ தேவையா என்றால் அறவேயில்லை. உள்நாட்டிலிருந்தே அனைத்தையும் பெற்றுக்கொள்கிறது. தனக்கு வேண்டிய ரேயான் ரகக் கூழினைத் தானே தயாரித்துக்கொள்கிறது குவாலியர் ரேயான். தவிர, தேவைப்படும் நுட்பமானமான எந்திரங்கள் எல்லாவற்றையும் உற்பத்தி செய்கிறது என்ஜினியரிங் டிவிஷன்.

நாட்டுச் செல்வத்தைப் படைத்திட உதவுவது குவாலியர் ரேயான்.

தி குவாலியர் ரேயான் ஸில்க் மானுபாக்சரிங் (வீவிங்) கோ. லிட., மாவூர், நாக்தா, குவாலியர்

SOBHAGYA GR 25A TM

E.I.D.-PARRY IN THE NURSERY

Any child will tell you that "Parrys" makes "Sweets", for the name "Parrys" has become synonymous with quality confectionery. Parry's confectionery is so popular that children - and adults - consume over 5,000 tonnes every year - more than 13½ tonnes a day.

The E.I.D-Parry Group became interested in sugar making during the life time of Thomas Parry and the factory at Nellikuppam was established in 1845. In the early years of the 20th Century, Parrys entered the confectionery field and about the same time became Managing Agents of The Deccan Sugar & Abkhari Co. Ltd. and later of The Travancore Sugars and Chemicals Ltd.

The E.I.D-Parry Group not only leads in the confectionery and sugar business but also in the manufacture and sale of fertilisers, fungicides, pesticides, pottery, sanitaryware and a large number of other products.

Today, the E.I.D-Parry Group, fondly known as "Parrys", is one of the larger companies in India, consisting of 9 subsidiary and associated concerns providing employment for more than 10,000 people.

E.I.D-PARRY LTD. *179 years young and still growing*



E.I.D-PARRY LIMITED Dare House Madras 1.

SUGAR ● CONFECTIONERY ● FERTILISERS ● FUNGICIDES
POTTERY ● SANITARYWARE ● AGENCIES

FDS EID 592 A

வலியுடன் வீட்டை அடைந்தான் சந்தானம். காலையில் சாப்பிட்ட மாத்திரைகள் பயனற்றுப் போயின. ஆறு மணிக்கு மேல் டாக்டரைப் பார்த்து விட்டு ஏதாவது மருந்து வாங்கிச் சாப்பிடலாம் என்று அவன் அறையில் படுத்துக் கொண்டான். கண் இதழ்கள் கனத்தன. உடலெல்லாம் அசதி வியாபித்து, தன்னைத் தூக்க முடியாமல் அடித்தது.

அவன் எவ்வளவு நேரம் மரக்கட்டை போலப் படுத்திருந்தான் என்று அவனுக்கே தெரியாது.

யாரோ அவனை எழுப்ப முயன்றார்கள். ஆனால் அரை உணர்வில் அவனால் எழ முடியவில்லை. வாயால் பதிலும் சொல்ல முடியவில்லை.

ஒரு குளிர்ந்த கரம் அவனை ஸ்பரிசிப்பதைச் சந்தானம் உணர்ந்தான். 'உடம்பு அனலாகக் கொதிக்கிறது' என்ற வார்த்தைகள் கிணற்றடியிலிருந்து கேட்பது போலக் காதுகளில் விழுந்தன.

அவன் டாக்டரைப் பார்க்கச் செல்லவில்லை. டாக்டர் அவனைப் பார்க்க வந்தார்.


முதல்நாள் வந்த டாக்டர் மறுநாள், மூன்றாம் நாள் என்று தினமும் வந்து போய்க் கொண்டேயிருந்தார். உடம்பின் சூடு குறையவில்லை. முகம் கன்றிப் போய், சந்தானம் உடலின் சக்தியே வற்றிப்போன நிலையில் தவித்தான்.

ஐந்தாம் நாள் வரை ஏதேதோ மருந்துகளையும் கொடுத்து விட்டுப் போன டாக்டர், அன்றுதான் அவனுக்கு வந்திருக்கும் ஜுரம் 'டைபாய்டு' என்றார். அதன் பிறகு பாரதி அம்மாளும், மூன்று பெண்களும் ஜரூராகவும் ஜாக்கிரதையாகவும் இருக்க ஆரம்பித்தார்கள். கமலாவுக்கு மூன்று வருடங்களுக்கு முன்பு இதே போல் டைபாய்டு வந்ததும், சந்தானம் மருந்துக்கும் டாக்டருக்கும் அலையாய் அலைந்ததும், இரவு பகல் பாராமல், அவளுக்கு என்னென்ன பணிவிடைகள் தேவையிருந்தனவோ அவற்றைக் கவனித்துச் செய்ததும் பாரதியின் ஞாபகத்துக்கு வந்தன. இப்போது சந்தானம் அவதிப்படுகையில் தங்களால் செய்யக் கூடிய பணிவிடைகள் திருப்திகரமாக இருக்குமா என்றுகூட அவள் பயந்தாள்.

நாலைந்து நாட்களாக ஆகாரம் ஏதும் உட்கொள்ளாத சந்தானம் உடம்பின் ஆயாசத்தில் முனகினான்: ''என்னை ஆஸ்பத்திரியில் 'அட்மிட்' செய்து விடுங்கள் டாக்டர்!''

''அதுதான் நல்லது!'' என்றார் டாக்டர்.

ஜெட் கிருமி



உயிரினங்களிலேயே மிக வேகமாகப் போகக் கூடியது கண்ணுக்குத் தெரியாத 'பாக்டீரியா'க் கிருமிகள்தானாம். தன்னுடைய நீளத்தைப் போல நூறு பங்கு நீளத்தை ஒரே நொடியில் கடந்து விடுமாம். அதாவது, ஆறு அடி உயரமுள்ள ஒரு மனிதன் ஒரு மணிக்கு நானூறு மைல் ஓடும் வேகத்துக்குச் சமம்! — 'பிரியா'

ஆனால் ஜானுவும் சீதாவும் ஒரே பிடிவாதமாக 'இங்கேயே இருக்கட்டும், நாங்கள் பார்த்துக் கொள்ளுகிறோம்!'' என்றார்கள். ஜானு, தொடர்ந்து, ''எனக்கு லீவு கிடைக்கிறது / கஷ்டமில்லை ஸார்! எத்தனை நாட்கள் வேணுமானாலும் லீவு போடுகிறேன்!'' என்றாள்.

டாக்டர், ''டைபாய்டு ஜுரத்திலே ஆகார விஷயத்தில் கண்டிப்பும் மருந்து கொடுக்கிறதிலே நல்ல நிர்ணயமும் தான் தேவை. அது இருந்தால் சந்தானம் எங்கே இருந்தாலும் எனக்கு ஆட்சேபணை இல்லை'' என்றார்.

''அதை நாங்கள் எல்லோரும் பார்த்துக் கொள்ளுகிறோம், டாக்டர்...!'' என்றாள் கமலா.

டாக்டர் போன பிறகு சந்தானம், தன் சக்தியையும் மீறிக் கொண்டு கத்தினான்:

''என்னை இந்த வீட்டில் வைத்துக் கொள்ளாதீர்கள்.... நான் இனிமேல் வெறும் மரக்கட்டை மாதிரி பாரமாகத் தான் இருப்பேன்... என்னை அனுப்புங்கள்... ஆஸ்பத்திரியிலே பார்த்துக் கொள்ளுவார்கள்...''.

''சந்தானம், உடம்பை அலட்டிக் கொள்ளாதே!'' என்றாள் பாரதி. அவளுக்கு அவனை ஆஸ்பத்திரியில் சேர்க்க விருப்பமில்லாமல் போனாலும் ஏதாவது விபரீதம் நிகழ்ந்துவிடுமோ என்ற பயம் பிறந்தது. அப்படி ஏதாவது நடந்து விட்டால் அவளும் மூன்று பெண்களும் என்ன செய்வார்கள்? **(தொடரும்)**



மரணத்துக்கு அஞ்சாத மாமா!

ஆபீஸ் பையன் அடிக்கடி லீவு எடுத்தான். ஒவ்வொரு சமயமும் யாராவது உறவினர் இறந்து விட்டதாகக் காரணம் காட்டி வந்தான். ஒருநாள் தன் மாமாவின் ''சாவு''க்காக லீவு கேட்டுக் கொண்டு போனான்.

அன்று மத்தியானம் கால் பந்தாட்டத்தைக் காணச் சென்ற ஆபீஸ் அதிகாரி, 'பையன்' பிரேக்ஷகனாக அங்கே உட்கார்ந்திருப்பதைக் கண்டதும், ''என்னப்பா! இது தான் உன் மாமாவின் சாவா?'' என்றார்.

அவரை அங்கே எதிர்பாராத அவன் ஒரு விநாடி திகைத்தான். பிறகு சமாளித்துக் கொண்டு சொன்னான்: ''அப்படித்தான் தோணுகிறது, சார்! அவர்தான் இந்த ஆட்டத்தின் 'ரெப்ரீ'யாக இருக்கிறார்!'' -ஏ.கே.க.

ஓர் இளைஞன் சிறந்த பேச்சாளனாக மாறத் தன் பெற்றோரால் சாக்ரடீஸிடம் அனுப்பி வைக்கப்பட்டான். சிறிது நாட்களுக்குப்பிறகு சாக்ரடீஸ் வழக்கமாகப் பெறும் தொகையைப் போல இரண்டு மடங்கு பணம் கேட்டார்.

''எனக்கு மட்டும் ஏன் இரட்டிப்புத் தொகை?'' என அந்த இளைஞன் கேட்டான்.

அதற்கு சாக்ரடீஸ், ''உனக்குப் பேசவும் கற்றுக் கொடுக்க வேண்டும். கண்டதை உளறாமல் இருக்கவும் கற்றுத் தர வேண்டும். இது இரட்டிப்பு வேலை இல்லையா?'' என்றார்.

தகவல்: 'எஸ்பி'




பல்சுவைப் பக்கம்!

'1955ல் நேருவுக்கு ருஷ்யப் பிரதமர் குருசேவால் பரிசாக அளிக்கப்பட்ட இலுஷின் விமானம் ஒன்று இப்பொழுது ஓட்டை, உடைசல் கிடங்குக்கு அனுப்பப்பட்டு விட்டது. இது வரை அந்த விமானம் 50 மணி நேரம்தான் பறந்திருக்கிறதாம்!

ஸ்டேட்ஸ்மன் — 'ஆவாரா.'





இறக்கிவிடும் ஏணிகள்!

ஏணி என்றவுடன் உயரத்துக்குப் போக உதவும் சாதனம் அது என்ற கருத்துத்தான் உண்டாகும். ஏணி மேலேயிருந்து கீழேயும் இறக்கிவிடக் கூடியது என்பது படாது. வாழ்க்கையில் மேலே தூக்கி விடுகிற ஏணியைக் காட்டிலும், கீழே இறக்கிவிடுகிற ஏணிகள் தான் அதிகம்.

—மயிலன்



இருவர் ஒருவராய் இணைந்தோம்!

கீழே உள்ள காதலர்கள் போட்டிருப்பதற்குப் பெயர் 'ஸ்வெட்டர்' அல்ல, 'ட்வெட்டர்'. எங்கு சென்றாலும் பின்னலாய் இணைந்தே செல்லலாம். இதற்கு இரண்டு கழுத்து துவாரங்களும், இரண்டு கைகளும் நடுவில், இரண்டு கைகள் இணைத்துக் கொள்ள ஒரு துவாரமும் உண்டு.

'டேனி'

ஆதாரம்: பேஜண்ட்




பல்சுவைப்பக்கம் 2

ஒரு சமயம் அமைச்சர் ஒருவரும் அவருடைய காரியதரிசியும் சொற்பொழிவாற்றுவதற்காக ஒரு கிராமத்துக்குச் சென்றார்கள். நடுவில் வழி தவறிவிட்டது. அப்போது எதிரே வந்த ஒரு கிராமவாசியை நிறுத்தி, ''இப்போது நாங்கள் எங்கே இருக்கிறோம்?'' என்று கேட்டார்கள்.

அதற்குக் கிராமவாசி, ''உங்கள் காரில்தானய்யா!'' என்று பதில் அளித்தான்.

அதைக் கேட்ட அமைச்சர் தமது காரியதரிசியை நோக்கிக் கூறினார்: ''இது பார்லிமெண்டரி பதில் மாதிரியே இருக்கிறது பார்த்தீரா? கிராமவாசி சொன்னதோ உண்மையைத் தவிர வேறு ஒன்றுமில்லை. இருந்தாலும் நமக்குத் தெரியாத புது விஷயம் ஒன்றையும் அவர் சொல்லவில்லை!''

ஏ. கே. கந்தசாமி



சளியோடு ஃப்ளூவா?

வேகமாக குணம்பெற
2 அனஸின் சாப்பிடுங்கள்



சளி பிடித்தால் நீங்கள் தவித்துப் போவீர்கள். மூக்கு ஒழுகும். ஏராளமாகத் தும்மல் வரும். வலியோ உடம்பை வாட்டியெடுக்கும். தெளிவாகச் சிந்திப்பதே இயலாதுபோகும். உடனே 2 அனஸின் சாப்பிட்டுப் பாருங்கள். 4 வழி நிவாரணம் அதி விரைவில் கிட்டும்.

1. சளியோடு ஃப்ளூவையும் தணிக்கிறது அனஸின்—வேகமாக
2. சோர்வை வெல்லுகிறது அனஸின்—வேகமாக
3. வாட்டத்தைப் போக்குகிறது அனஸின்—வேகமாக
4. படபடப்பை ஆற்றுகிறது அனஸின்—வேகமாக

இதன் காரணம், பல மருந்துகள் இணைந்த அனஸின்—டாக்டர் குறித்துக் கொடுத்த மருந்துச் சீட்டுபோல் பத்திரமானது. எனவே, வலி தணிக்கும் சாதனங்களிலே இந்தியாவிலேயே உன்னத விற்பனை உடையதாக அனஸின் விளங்குவதில் வியப்பில்லை.

சளி பிடித்த முதல் அறிகுறி தென்பட்டதுமே அனஸின் சாப்பிடுங்கள். தலைவலி, பல்வலி, உடல்வலி ஆகியவற்றையும் தணிக்கிறது அனஸின். ஆகையால் எப்போதும் அனஸின் உங்கள் கைவசமிருக்கட்டும்.

தவறாமல் எப்போதும் வாங்குங்கள் அனஸின்.

அனஸின்

சிறந்தது ஏனெனில் அது
4 வழிகளில் வேலை செய்கிறது



Regd. user: GEOFFREY MANNERS & CO. LTD.

தலையா, குல்லாவா?

இந்திரபாலசிங்

சமசீதோஷ்ண அறை. தரையில் அழகிய வேலைப்பாடமைந்த விரிப்பு. எதிரே தெரிகின்ற சுவரில் மூன்று படங்கள்; நடுவே மகாத்மா காந்தி, ஒருபுறத்திலே ராஜேந்திர பிரசாத், மறுபுறத்திலே ஜவாஹர்லால் நேரு. அறையின் நடுவிலே ஒரு பெரிய மேஜை. அதன் ஒருபுறத்தில் மேஜையைப் பார்த்தாற் போல் மூன்று சிறப்பான நாற்காலிகள். மற்ற மூன்று புறங்களிலும் பக்கத்துக்கு ஒன்று வீதம் சாதாரண நாற்காலிகள். மூன்று நாற்காலிகளுக்கு மையமாக உள்ள நாற்காலியில் மிஸ்டர் மன்சந்தா அமர்ந்திருக்கிறார். அவர் நியமனக் குழுவின் தலைவர். மற்ற இரண்டு நாற்காலிகளில் மிஸ்டர் திவாரியும் மிஸ்டர் அக்ரவாலும் உட்கார்ந்திருக்கின்றனர். இருவரும் குழுவின் அங்கத்தினர்கள். மேஜையின் ஒருபுறத்து ஒற்றை நாற்காலியில், மேஜைமேல் பைல்களை விரித்து வைத்துக் கொண்டு தலைமை எழுத்தர் அமர்ந்திருக்கிறார். மற்ற இரண்டு நாற்காலிகளும் காலியாயிருக்கின்றன. தலைவர்களின் படங்களுக்கு நேராகச் சுவரில் ஒரு சுவரொட்டிப் போஸ்டர் தொங்குகிறது. அதில் ஒருவன் இன்னொருவனுக்கு ரூபாய்க் கத்தைகளைக் கொடுப்பது போலவும் அதன்மீது ஒரு பாம்பு படமெடுத்துச் சீறுவது போலவும் படம் வரையப்பட்டிருக்கிறது. பணம் கொடுப்பவனின் காலடிகளில் பெருங்குழி ஒன்று காட்டப்பட்டிருக்கிறது. அதில் அவன் ஒரு காலைத் தூக்கி வைத்து விட்டது போன்றும் சித்திரிக்கப்பட்டிருக்கிறது. போஸ்டருக்குக் கீழே, 'லஞ்சம் தருவதும் பாவம், வாங்குவதும் பாவம்' என்று கொட்டை கொட்டையாக எழுதப்பட்டிருக்கிறது.

மிஸ்டர் மன்சந்தா: தலைமை எழுத்தர் அவர்களே, எத்தனை பேருக்கு 'இண்டர்வியூ'க் கடிதம் போயிருக்கிறது?

தலைமை எழுத்தர்: எட்டுப்பேருக்கு, ஸார்!

மன்சந்தா: சுகவீர் தயாள் பெயர் அதில் இருக்கிறதல்லவா? பாருங்கள்!

தலைமை எழுத்தர்: எல்லோருக்கும் முதலாவதாக இருக்கிறது, ஸார்! உங்கள் உத்தரவாயிற்றே! மேற்படியாமல் இருப்போமா?

மிஸ்டர் திவாரி: பிரமோத் குமாரையும் கூப்பிட்டிருக்கிறீர்கள் அல்லவா?

தலைமை எழுத்தர்: கூப்பிட்டிருக்கிறோம், ஸார்!

மிஸ்டர் அக்ரவால்: சாந்தி ஸ்வரூப்பை என்ன செய்திருக்கிறீர்கள்?

தலைமை எழுத்தர்: அவருக்கும் அழைப்பு போயிருக்கிறது, ஸார்! ஆனால் அந்த மூன்று பேருமே தகுந்தவர்களாகத் தோன்றவில்லை. உங்கள் மூவருடைய உத்தரவையும் எண்ணித்தான் அவர்களுக்கு அழைப்பு அனுப்பியிருக்கிறோம். இவர்களையெல்லாம் காட்டிலும் இன்னொருவர் தகுதி வாய்ந்தவராயிருக்கிறார்.

[தகுதி சம்பந்தமான குறிப்புக்களை எடுத்து மேஜை மீது வைக்கிறார். மிஸ்டர் மன்சந்தா அவற்றைக் கையில் எடுத்துப் பார்க்கிறார்.]



மன்சந்தா (ஒரு நீண்ட பெருமூச்சுவிட்டு): எது எப்படிப் போனாலும் சகவரதயாளைத் தான் பொறுக்கியாகணும். உதவி மந்திரியின் சிபாரிசு இருக்கிறது அவருக்கு. காரணம், விண்ணப்பதாரரின் அப்பா அந்தப் பக்கத்தில் மிகுந்த செல்வாக்கு உள்ளவராம். வாக்கு வேட்டையென்று வந்தால் அவர் உதவி தேவைப்படுமாம். அதனால் அவரைத்தான் எடுத்துக் கொள்ள வேண்டும் என்று சொல்லியிருக்கிறார்.

திவாரி: அது சரிதான், சார்! ஆனால் அடுத்த தேர்தலுக்குப் பிறகு அவர்தான் உதவி மந்திரியாக வருவார் என்பது என்ன நிச்சயம்? எந்தக் கட்சிக்குப் பெரும்பான்மை வோட்டுக்கள் கிடைக்கிறதோ? இடையிலேயே உட்பகை காரணமாக அமைச்சர் குழு மாறுகிறதே, தேர்தலுக்குப் பிறகு என்ன ஆகுமோ, யார் கண்டார்கள்? எதையும் உறுதியாகக் கூற முடியாது. எத்தனையோ அரசியல் கோஷ்டிகள் இருக்கின்றன, தேர்தலுக்கு அபேட்சகர்களை நிறுத்த. எந்தக் கோஷ்டியிலிருந்தாவது, இவரைக் காட்டிலும் செல்வாக்கு உள்ள புள்ளி நின்றால், இவர் கதி என்ன ஆவது?

மன்சந்தா: ஆனால் பிரதர், உங்களுக்கு இன்னொரு விஷயமும் தெரிந்ததுதான். உதவி மந்திரிக்கு என் பேரில் எவ்வளவு பிரியம்? எத்தனையோ பேர்களை ஒதுக்கி விட்டு, எனக்கு இந்தப் பதவியைக் கொடுத்திருந்தே தெரியவில்லையா? நீங்களே சொல்லுங்கள். உபகாரம் செய்தவர்களை மறக்கலாகுமா?

திவாரி: உபகாரத்தை யெல்லாம் விட்டுத் தள்ளுங்கள், சார்! இன்னும் எத்தனை நாள் இருக்கிறது தேர்தலுக்கு? இதற்கு நடுவிலேயே அவருக்கு உங்களைப் பிடிக்காமல் போய் விடுகிறது என்று வைத்துக் கொள்ளுங்கள். என்ன செய்துவிட முடியும் அவரால்? இன்றைக்கு இருப்பது போலவே, நாளைக்கும் இருப்பார் என்பது என்ன நிச்சயம்? அதனாலே, நான் சொல்வது என்னவென்றால், பிரமோத் குமாரை எடுத்துக் கொண்டு விடுவோம்.

மன்சந்தா: ஆமாம், பிரமோத் குமாரிடம் உங்களுக்கு இத்தனை அக்கறை ஏற்படக் காரணம்?

திவாரி: அக்கறைக்கு ஒன்றும் பெரிய காரணம் இல்லை. எங்கள் இனத்தைச் சேர்ந்த பையன் அவன். கொடுக்கலாமே என்று பார்த்தேன். அதோடு உங்களில் யாருக்கும் வேறு உறவுக்காரர்கள் இருப்பதாகவும் தெரியவில்லை.

அக்ரவால்: ஏன் இல்லை? பிரமோத்குமார் உங்கள் இனத்தைச் சேர்ந்தவன் மட்டும் தான். சாந்தி ஸ்வரூப்போ எனக்கு உறவுக்காரப் பையன் ஐயா! அவனை ஏன் எடுத்துக் கொள்ளக் கூடாது?

மன்சந்தா: உங்களுக்கு உறவா? என்ன உறவோ?

அக்ரவால்: என் மச்சினனுக்கு மச்சினனுடைய சகலையின் அக்கா புருஷனின் மாமா பிள்ளை. [மூவரும் சிரிக்கிறார்கள்] எதற்காகச் சிரிக்கிறீர்கள்? உறவு தூரத்து உறவானால் என்ன? கிட்டிய உறவானால் என்ன? உறவு உறவுதானே? அவர்களுக்கு நான் வாக்கு வேறு கொடுத்திருக்கிறேன். அவனுக்குக் கொடுப்பதனாலே உங்களில் யாருக்கும் எதுவும் நஷ்டமும் இல்லை, பாருங்கள்!

மன்சந்தா: அது சரிதான், பிரதர்! இருந்தாலும் இது உதவி மந்திரி விஷயமாயிருக்கிறதே! ஏன் எழுத்தர் சார், உங்கள் அபிப்பிராயம் என்ன?

எழுத்தர் (தலையைச் சொறிந்த வண்ணம்): நான் என்ன சொல்ல இருக்கிறது? என் அபிப்பிராயமே வேறு. அதாவது.... (தயங்குகிறார்)

மன்சந்தா: என்ன, சொல்லுங்கள்! நிறுத்தி விட்டீர்களே!

எழுத்தர்: என்னைக் கேட்டால் ராமாதார் சிங்கை எடுத்துக் கொண்டால் நல்லது என்பேன். ஏனென்றால்....

மன்சந்தா: ஏனென்றால் என்ன, சொல்லுங்களேன்!

எழுத்தர்: அவன்... அவன்... இரண்டாயிரம் ரூபாய் தருவதாகச் சொல்லியிருக்கிறான்.

மன்சந்தா (மகிழ்ச்சி பொங்க): இரண்டாயிரமா? (நண்பர்களைப் பார்த்து) சொல்லுங்கள் பிரதர், உங்கள் கருத்து என்ன?

திவாரி: அது சரிதான். ஆனால் உதவி மந்திரிக்கு என்ன பதில் சொல்லுவது?

மன்சந்தா: அவரைப் பற்றிக் கவலைப்படாதீர்கள்! நான் சமாளித்துக் கொள்ளுகிறேன்.

அக்ரவால்: ஆனால் ஒரு விஷயம்....

மன்சந்தா: என்ன, சொல்லுங்கள்?

அக்ரவால்: இரண்டாயிரம் எப்படிப் போதும்? குறைந்த பட்சம் ஆயிரம் ஆயிரமாவது தலைக்கு வந்தால் அல்லவா...

மன்சந்தா: நன்றாகத்தான் இருக்கும். ஏன் எழுத்தர் சார், ஏதாவது நடக்குமா? - நீங்கள் உங்கள் விஷயத்தைப் பேசிக் கொண்டிருப்பீர்கள்! இவர் சொல்வதையும் கேட்டுப் பார்க்கலாமா?

எழுத்தர் (தலை குனிந்த வண்ணம்): முயற்சி செய்து பார்க்கிறேன், சார்!

திவாரி: ஆமாம், இன்னும் இந்த விசேஷ அதிகாரி வரக் காணுமே! இன்டர்வியூவுக்கு நேரமாகி விட்டதே! அழைப்பு அனுப்பிய விண்ணப்பதாரர்கள் எல்லோருமே வந்து விட்டார்களே! அவர் வந்து விட்டால், அவருக்கும் சொல்லி...

மன்சந்தா: அதெல்லாம் பின்னால் சொல்லிக்கொள்ளலாம். தீர்மானம் ராமாதார் சிங்தானே?

திவாரியும் அக்ரவாலும்: உங்கள் இஷ்டம். நாங்கள் மறுத்துக் கூறப் போகிறோமா?

(டாக்டர் சின்ஹா — விசேஷ அதிகாரி வருகிறார். எல்லோரும் எழுந்து நின்று கைகுலுக்கி வரவேற்கிறார்கள்.)

டாக்டர் சின்ஹா: மன்னிக்கவேண்டும். சிறிது தாமதமாகி விட்டது. போக்குவரத்துத் தடைப்பட்டதனால். இருந்தாலும் அதிக



பம்பாய், டாடா இஞ்ஜினீயரிங் லோகோமோடிவ் கம்பெனியின் சேல்ஸ் மானேஜரான ஸ்ரீ D. S. நாராயணன் அவர்கள் குமாரத்தி சௌபாக்யவதி S. ரேவதிக்கும், டாக்டர் K. P. S. கிருஷ்ணன் M. Sc., (Tech.), M. S., Ph. D., அவர்களுக்கும், பம்பாய் ஷண்முகானந்தா ஹாலில் சமீபத்தில் திருமணம் வெகு சிறப்பாக நடைபெற்றது.

வாழ்க மணமக்கள்!

நேரமாகிவிடவில்லை என்று நினைக்கிறேன்.. ஆரம்பிப்போமா?

மன்சந்தா: தங்களைத்தான் எதிர்பார்த்துக் கொண்டிருந்தோம். (அழைப்பு மணியை அழுத்துகிறார். சேவகன் வருகிறான்) கோபால் தத்தைக் கூப்பிடு.

(சேவகன் போகிறான். கோபால் தத் பிரவேசிக்கிறான். வணக்கம் தெரிவிக்கிறான். உட்காருமாறு பணிக்கப்படவே, நாற்காலியில் அமருகிறான்.)

மன்சந்தா: மிஸ்டர் கோபால் தத்! நீங்கள் எம். எஸ்ஸி. எந்த வகுப்பில் எந்தப் பல்கலைக் கழகத்தில் தேறினீர்கள்?

கோபால் தத்: இரண்டாம் வகுப்பு. அலகாபாத் பல்கலைக் கழகம்.

அக்ரவால்: நீங்கள் நகரவாசிதானே?

கோபால் தத்: ஆமாம்.

திவாரி: நீங்கள் கிராமப்புறங்களுக்குச் சென்றல்லவா வேலை செய்ய வேண்டியிருக்கும். உங்களால் கிராமங்களில் சென்று தங்க முடியுமா? அங்கெல்லாம் கடைத் தெரு. இடைத்தெரு. சினிமா, இனிமா என்று எதுவும் நகர்ப்புறத்தைப்போல் பொழுது போக்குச் சாதனங்கள் இருக்காதே!

கோபால் தத்: ஆரம்பத்தில் கொஞ்சம் கஷ்டமாகத்தான் இருக்கும். இருந்தாலும் பழகினால் எல்லாம் தானாகச் சரியாகப் போய் விடும்.

திவாரி: சரி, ஆமாம், மத்திய உணவு மந்திரி யார், சொல்லுங்கள்!

கோபால் தத்: சிந்தாமணி தேஷ்முக் சார்!

டாக்டர் சின்ஹா: புகையிலை எப்படிப் பயிர் செய்யப்படுகிறது?

கோபால் தத்: கம்பு, கேழ்வரகு, கோதுமை மாதிரித்தான்!

மன்சந்தா: சரி, நன்றி! நீங்கள் போகலாம்.

(கோபால் தத் வணக்கம் தெரிவித்துவிட்டுப் போகிறான். இதேபோல் சுகவர தயாள், பிரமோத்குமார், சாந்தி ஸ்வரூப் போன்ற மூன்று நான்கு பேர்கள் வருகிறார்கள். 'இன்டர்வியூ' முடிந்து போகிறார்கள். பிறகு ராமாதார் சிங் அழைக்கப்படுகிறான். வணக்கம் தெரிவிக்காமல், யாரும் எதுவும் சொல்வதற்கு முன்பாகத் தானாகவே நாற்காலியில் உட்கார்ந்து கொள்ளுகிறான்.)

மன்சந்தா: மிஸ்டர் ராமாதார் சிங்! நீங்கள் எம். எஸ்ஸி. எந்த வகுப்பில் தேறினீர்கள்?

ராமாதார் சிங்: மூன்றாம் வகுப்பில்.

திவாரி: பி. எஸ்ஸி.?

ராமாதார்: பி. எஸ்ஸி.யா? செப்டம்பர், சப்ளிமெண்டரி.....

அக்ரவால்: இடைநிலை வகுப்பு எப்போது தேறினீர்கள்?

ராமாதார்: 1954ல்.

அக்ரவால்: பி. எஸ்ஸி. 1957ல் பாஸ் செய்திருப்பதாக அல்லவா எழுதியிருக்கிறீர்கள்? நடுவில் ஒரு வருஷம் என்ன செய்தீர்கள்?

ராமாதார்: ஓராண்டு பி. எஸ்ஸி.யில் பெயிலாகி விட்டேன்.

மன்சந்தா: அது சரி, இப்பொழுது உங்கள் ராஜ்ய கவர்னர் யார், சொல்ல முடியுமா?

ராமாதார்: ராதாகிருஷ்ணன்.

மன்சந்தா (முறுவலுடன்): ஹஜரத் முகம்மது இப்ராஹிமைப் பற்றி உங்களுக்கு என்ன தெரியும்?

ராமாதார்: இஸ்லாமியப் 'பைகம்பர்'களில் ஒருவர் என்று நினைக்கிறேன்.

திவாரி: ராமசரித மானஸம் – (துளசி ராமாயணம்) இயற்றியது யார்?

ராமாதார்: இயற்றியது என்று தவறான சொற் பிரயோகம் செய்கிறீர்கள். வெட்டியது என்று கூறவேண்டும். சிவபெருமான் கைலாயத்தில் வெட்டிய குளம். ஸ்ரீ ராமர் குளிப்பதற்காக அதை வெட்டினார். (எல்லோரும் சிரிக்கிறார்கள்).

மன்சந்தா: டாக்டர் சார்! நீங்களும் ஒருசில கேள்விகள் கேளுங்களேன். தொழிலுக்குச் சம்பந்தப்பட்டதாக இருக்கட்டும்.

டாக்டர் சின்ஹா: கோதுமை பயிரிடுவதற்கு உகந்த காலம் எது?

ராமாதார்: எல்லாப் பயிருக்கும் மழை வேண்டும். இது தெரியாதா? மழைக்காலம் தான் சாலச் சிறந்தது.

டாக்டர் சின்ஹா: ஓர் ஏக்கரில் கம்பு விதைக்க வேண்டுமென்றால் எத்தனை தேவைப் படும்?

ராமாதார் (யோசித்து): எட்ட எட்டவா, கிட்டக் கிட்டவா? அதைச் சொன்னால்தானே கணக்காகச் சொல்ல முடியும்? எப்படி விதைத்

காரிய விநயம்!

காரியத்தை உத்தேசித்து விநயத்துடன் இருப்பது சுபாவ விநயம் ஆகாது. காரியத்தை உத்தேசித்து விநயத்துடன் இருப்பவன் ஏற்ற மரத்துக்குச் சமானம் என்று ஒரு சுலோகம் இருக்கிறது. சால் நிரம்பினவுடன் ஏற்றமரத்தின் தலை ஆகாயத்தில் இருக்கும். சால் வடிந்ததும் தலை குனிந்து விடும். அப்படியே காரியத்தை உத்தேசித்து விநயத்துடன் இருப்பவன் ஜீவனம் கிடைக்காத போது தலையைத் தொங்கப் போடுவான். ஜீவனம் கிடைத்து விட்டால் தலை விறைத்துக் கொள்ளும். — வடமொழி சுலோகம்



பொறுமையின் சிகரம்

உலகமேதை வின்ஸ்டன் சர்ச்சிலின் தந்தையாகிய ரண்டால்ப் சர்ச்சில் பிரபு கண்ணியம், மரியாதை, பெருந்தன்மை மிக்கவர். எவர் மனமும் புண்படாத படி நாகரிகமாக இனிமையாகப் பேசுவார். அதே போல் பிறரது எத்தகைய நெடிய, கொடிய பேச்சையும் பொறுமையுடன் கேட்பார்.

ஒருநாள் இரவு ஒரு ஓட்டலில் அவர் ஓர் அதிகப் பிரசங்கியிடம் வசமாக மாட்டிக் கொண்டார். 'போர்' பொறுக்க முடியவில்லை. அதற்குமேல் தாக்குப் பிடிக்காது என்ற நிலை வந்தவுடன் ரண்டால்ப் அந்த அதிகப்பிரசங்கியிடம் மன்னிப்புக் கேட்டுவிட்டு, ஒரு பணியாளரை அழைத்து, ''அவர் தம் பேச்சை முடிக்கும் வரை கொஞ்சம் கேட்டுக் கொண்டிருக்கிறாயா? எனக்கு ஒரு அவசர வேலை இருக்கிறது!'' என்று பொறுமையோடு கூறிவிட்டுச் சென்றார்.

தானும் ஒரு மனு ஒன்றுவரை மனு தேவையப் படலாம் என்று வைத்துக் கொள்ளுங்களேன்.

மன்சந்தா: இனி நீங்கள் போகலாம்.

(ராமாதார் சிங் எழுந்து போகிறான். சேவகன் ஹரிதத்த சர்மாவை அழைத்து வருகிறான். வணக்கம் தெரிவித்துவிட்டு, உத்தரவு கிடைத்த பிறகே அவன் நாற்காலியில் உட்காருகிறான்.)

மன்சந்தா: மிஸ்டர் ஹரி தத்! நீங்கள் எம். எஸ்ஸி. எந்த வகுப்பில் தேறினீர்கள்?

ஹரிதத்: முதல் வகுப்பில். 1958ம் ஆண்டில் தேறினேன். பல்கலைக் கழகத்தில் நான் தான் இரண்டாவது ஸ்தானத்தைப் பெற்றேன்.

மன்சந்தா: பி. எஸ்ஸி. எந்த வகுப்பில் தேறினீர்கள்?

ஹரிதத்: அதுவும் முதல் வகுப்பில்தான். அதற்காகத் தங்கப் பதக்கம் கூடக் கிடைத்திருக்கிறது.

திவாரி: 1958ம் ஆண்டிலிருந்து இதுவரை என்ன செய்து கொண்டிருந்தீர்கள்?

ஹரிதத்: எத்தனையோ இடங்களுக்கு வேலைக்கு விண்ணப்பம் போட்டேன். ஆனால் எங்கும் கிடைக்கவில்லை. ஏழைகளுக்குப் படிப்பும் ஒரு சாபக்கேடு என்ற முடிவுக்கு வந்தேன். ஏதோ வயிற்றுப் பிழைப்புக்கு உழைத்துப் பிழைக்கிறேன்.

மன்சந்தா: போகட்டும். அதை விடுங்கள்! கம்பியில்லாத் தந்தியைக் கண்டுபிடித்தது யார்?

ஹரிதத்: மார்க்கோனி!

திவாரி: அமெரிக்க நீக்ரோக்களுக்குச் சுதந்திரம் வாங்கித் தந்த பெருமை யாரைச் சேரும்?

ஹரிதத்: ஆபிரஹாம் லிங்கன்.

அக்ரவால்: நம் நாட்டு முதல் உள்துறை மந்திரி யார்?

ஹரிதத்: வல்லபாய் படேல்.

மன்சந்தா: தற்போதைய மகாராஷ்டிர கவர்னர் யார்?

ஹரிதத்: சுனம் செரியன் அவர்கள்!

மன்சந்தா (டாக்டர் சின்ஹாவிடம்): மிஸ்டர் சின்ஹா! தாங்களும் ஏதாவது கேளுங்கள்.

டாக்டர் சின்ஹா: மிஸ்டர் ஹரிதத்! 'பார்னாசி' என்பது என்ன?

ஹரிதத்: உழுகின்ற கலப்பையின் ஒரு பாகம் சார்! அனுமதி அளித்தால் அதன் உருவத்தை ஒரு காகிதத்தில் வேண்டுமானாலும் வரைந்து காட்டுகிறேன்.

டாக்டர் சின்ஹா: வேண்டாம். கோதுமைக்கு எத்தகைய மண்ணும் சீதோஷ்ணமும் தேவை என்பது தெரியுமா?

ஹரிதத்: கோதுமை நன்செய்ப் பயிர். ஆகவே நன்செய் நிலம்தான் உகந்தது. விதை விடும்போது குளிர்ந்த சீதோஷ்ணமும் கதிர் முதிரும்போது வறட்சியும் இருந்தால் நல்லது.

மன்சந்தா: நன்றி, ஹரிதத்! நீங்கள் போகலாம். (ஹரிதத் வணக்கம் தெரிவித்துவிட்டு வெளியேறுகிறான்.)

மன்சந்தா (எல்லோரையும் பார்த்து): இத்தனை பேர்களில் யார் தகுந்தவராகப் படுகிறார்?

திவாரியும் அக்ரவாலும்: எங்களைப் பொறுத்தவரை ராமாதார் சிங்தான்!

டாக்டர் சின்ஹா (வியப்புடன்): ராமாதார் சிங்கா? நீங்கள் தவறிப்போய் ஆள் மாறாட்டத்தில் அவர் பெயரைக் கூறுகிறீர்களா, என்ன? அவர் எந்தக் கேள்விக்குமே சரியான விடை அளிக்கவில்லையே! பொது அறிவும் அவருக்குக் குறைவு; வேலைக்குத் தொடர்புள்ள விஷயங்களும் தெரியவில்லை. அதோடு, அவர் நடந்து கொண்ட முறைகூட நன்றாயில்லையே! அவரா தகுந்தவர் என்கிறீர்கள்? என்னைக் கேட்டால் ஹரிதத் சர்மாதான் மிக மிகத் தகுதி வாய்ந்தவர்.

மன்சந்தா: ஆனால் தகுதி மட்டும் எல்லாமும் ஆகிவிடுவதில்லையே ஸார்?

டாக்டர் சின்ஹா: ராமாதார் சிங்கின் 'பர்ஸனாலிடி'யும் நன்றாக இல்லை; நடந்து கொள்ளும் முறையும் பிடிக்கவில்லை. அப்படியிருக்கும்போது அவரிடம் நீங்கள் என்ன குணநலன்களைக் கண்டு இப்படிக் கூறுகிறீர்கள்?

மன்சந்தா: இது கவர்மென்ட் புரியும் துறையைப் பொறுத்த விஷயம். உங்களுக்கு என்ன தெரியும்? எனக்கும் ராமாதார் சிங்தான் உகந்தவராகப் படுகிறார்.

டாக்டர் சின்ஹா இப்படி ஒரு தகுதி யற்ற ஆளை வேலைக்கு எடுத்துக் கொள்வதை நான் ஏற்பதற்கில்லை. யோசித்துப் பாருங்கள். ஒரு பாமரனுக்குரிய பொது அறிவுகூட அவனிடம் கிடையாது. அவன் வேலை பார்க்க வேண்டிய துறையைப் பற்றி அவனுக்கு எதுவுமே தெரியவில்லை. அவன் எப்படி பொறுப்போடு பணி புரிவான்? இது நாட்டின் நலனுக்கு நல்லதே இல்லை.

மன்சந்தா: என்னவோ பெரிசா நாட்டு நலன் பற்றிக் கூறுகிறீர்களே! நாம் மட்டுமா நாட்டுக்கு நலன் புரிவதாகக் குத்தகை எடுத்து வந்திருக்கிறோம்? நமது மந்திரி




தேர்ந்தெடுக்கப் பலரகங்கள்
ரூ. 125 க்கு மேற்பட்டு ரேடியோக்களும் டிரான்ஸிஸ்டர்களும்
மாடல் டிபி 0816
மாடல் டிபி 0581
மாடல் டிபி 0579
மாடல் டிபி 0509
மாடல் டிஏ/டியு 0777
மாடல் டிஏ 0926
மாடல் டிஏ/டியு 0202
மாடல் டிஏ/டியு 0776
மாடல் டிஏ/டியு 0824
மாடல் டிஏ 0366
நட்பு மிக்க உங்கள் மர்பி வியாபாரியிடம் இன்றே அவற்றைக் காணுங்கள்.
murphy

தலைவலியா?

ஸாரிடான் 'ரோஷ்' சாப்பிடுங்கள்

வலி நீங்கி...



...உங்களுக்குப் புத்துணர்ச்சி அனுபவமாகும்!

அதுவே ஸாரிடானின் தனிப்பட்ட தன்மை! வலியையும் அத்துடன் மனதில் உண்டாகும் 'பளு'வையும் போக்குவது மட்டுமல்லாமல், இதத்தையும் புத்துணர்ச்சியையும் கூட அளிப்பதற்காக ஸாரிடான் ஒரு தனிப்பட்ட முறையில் தயாரிக்கப்படுகிறது. ஸாரிடான் சாப்பிட்டதும் அனுபவமாகும் அற்புதமான மாறுதலைப் பாருங்கள்! உங்கள் மூளை மீண்டும் சுறுசுறுப்பாக வேலை செய்ய ஆரம்பிக்கிறது...வேலையில் உற்சாகம் ஏற்படுகிறது...சிநேகிதர்களுடன் களித்து மகிழ முடிகிறது! ஒரே ஒரு ஸாரிடான் வலியைப் போக்கி இதத்தையும், புத்துணர்ச்சியையும் அளிக்கும். ஸாரிடான் எப்பொழுதும் உங்கள் கைவசம் வைத்திருங்கள். குழந்தைகளுக்கு ¼ லிருந்து ½ வில்லை வரை போதும்.



தலைவலி, பல்வலி, உடல் வலி, அசௌகரியமான நாட்களில் வலி உடன் நிவாரணம் பெற ஒரே ஒரு ஸாரிடான் போதும்!

'ரோஷ்' தயாரிப்பு:

ஸோல் டிஸ்ட்ரிப்யூட்டர்கள்: வோல்டாஸ் லிமிடெட்

VT. 5626. (A).

மார்களே தங்கள் பைகளை நிரப்ப வழி தேடிக் கொண்டிருக்கிறார்களே, நமக்கு என்ன வந்துவிட்டது? எல்லாருடைய வண்டியும் போவது போலவே நம் வண்டியும் போகட்டும். வேலை என்று ஏற்றுக் கொண்டுவிட்டால் எல்லாம் தானாகவே வந்துவிடும்!

டாக்டர் சின்ஹா: நீங்கள் முன்கூட்டியே இப்படி ஒரு முடிவு செய்து வைத்திருந்தீர்களானால், இந்த 'இன்டர்வியூ' நாடகம் எதற்கு? என்னையும்தான் வரவழைப்பானேன்?

மன்சந்தா: இன்டர்வியூ எதற்காக என்கிறீர்களா? எதற்கும் ஓர் ஒழுங்குமுறையைக் கடைப்பிடிக்க வேண்டாமா? அதற்காகத்தான். உங்களை எதற்காகத் தருவித்தோம் என்கிறீர்களா? உங்களுக்கும் படி கிடைக்க வேண்டாமா? அதற்காகத்தான்!

டாக்டர் சின்ஹா: இந்த 'இன்டர்வியூ' வெறும் நாடகம்தான் என்றால் நான் கையெழுத்துப் போட மாட்டேன்!

மன்சந்தா: வேண்டாம்; போடாவிட்டால் உங்களுக்குப் போக்குவரத்துப் படி கிடைக்காது. எப்படியும் ராமாதார் சிங்கைத் தான் நாங்கள் எடுத்துக் கொள்ளப் போகிறோம். நீங்கள் கையெழுத்துப் போடாவிட்டால் நாங்கள் வேறு வழிகளைப் பின்பற்ற வேண்டி வரலாம். ஆனால் ஒன்று மட்டும் நினைவு வைத்துக் கொள்ளுங்கள். உங்கள் படிச் செலவுக்காக நீண்ட பட்டியல் ஒன்று தயாரிப்பீர்களே, அது இனி நடைபெறாது. நாங்கள் வேறு நிபுணரை எங்களுக்கு ஏற்றபடி தருவித்துக் கொள்ளுவோம்.

டாக்டர் சின்ஹா (உணர்ச்சி மேலிட): அக்கறை யில்லை. உங்கள் படியை நம்பி என் வாழ்க்கை நடைபெறவில்லை. படிக்கு ஆசைப் பட்டு நான் நாட்டின் நலனுக்கு ஊறு செய்யச் சம்மதியேன்!

மன்சந்தா: நாட்டுக்கு ஏற்படும் ஊறுகளை நீங்கள் எங்கெங்கு சென்றுதான் தடுப்பீர்கள்? இந்த மாதிரி எந்தத் துறையில் நடைபெற வில்லை? விரலை மடக்குங்கள், பார்ப்போம்! எங்கே போனாலும் அவனவனும் தன் சுய லாபத்தைத்தான் பார்க்கிறான். நீங்கள் ஒருவர்தான் பெரிசா ஆதர்சம் பேசுகிறீர்கள்!

டாக்டர் சின்ஹா: நீங்கள் என்ன சொன்னாலும் சரி, என்னால் இயன்றவரை நான் இந்த மாதிரி அநீதிக்கு இடம் கொடுக்க மாட்டேன்!

மன்சந்தா: (சிறிது தாழ்ந்து): டாக்டர் சின்ஹா! அதிகமாகப் பிடிவாதம் பிடிக்காதீர்கள். ராமாதார் சிங்கிடமிருந்து கிடைப்பதில் உங்களுக்கும் ஒரு பங்கு உண்டு. திருப்தி தானே?

டாக்டர் சின்ஹா (வெறுப்புடன்): ஓகோ! லஞ்சத் தொகைக்காகவா நீங்கள் இந்தப் பாவச் செயலைச் செய்யத் துணிந்தீர்கள்? இதில் என்னையும் சேர்த்துக் கொள்ள விரும்புகிறீர்கள்? நான் கூறுகிற நியாயத்தைத் தவறு என்று சாதிக்கிறீர்கள்? (உறுதியோடு) நினைவு வைத்துக் கொள்ளுங்கள். உங்கள் ஆசை வார்த்தைகளுக்கு மயங்கி நான் வழி தவறி நடக்க மாட்டேன். எந்தக் காரணத்தைக் கொண்டும் உங்கள் அபிப்பிராயத்துக்குத் தகுந்தபடி ஆடிக் கையெழுத்துப் போட என்னால் முடியாது.

மன்சந்தா: மிஸ்டர் சின்ஹா! நீங்கள் என்ன சொன்னாலும் நாங்கள் நினைப்பதுதான் நடக்கப் போகிறது. இப்பொழுதே நன்றாக யோசித்துக் கொள்ளுங்கள். பின்னால் வருந்திப் பயனில்லை.

டாக்டர் சின்ஹா (நாற்காலியிலிருந்து எழுந்து): நீங்கள் நினைப்பதுதான் நடக்கப் போகிறது என்பது எனக்குத் தெரியும். இருந்தாலும் நான் இந்தப் பாபச் செயலில் பங்கு கொள்ள விரும்பவில்லை. நீங்கள் பிற்காலத்தைப் பற்றிச் சொல்கிறீர்கள். நான் இந்தத் தடவையே எனக்குப் படியும் வேண்டாம், இடியும் வேண்டாம் என்கிறேன். இந்தமாதிரி இடத்துக்கு, செயலுக்கு வருவதையே நான் பாபமாகக் கருதுகிறேன். (வெடுக்கென்று வெளியேறுகிறார்.)

மன்சந்தா (ஆவேசத்தோடு): என்ன பெரிசா ஆதரிசம் பேசுகிறார்! இவரைப் போல் நானும் எத்தனையோ பேர்களைப் பார்த்திருக்கிறேன்.

எழுத்தர் (கவலையோடு): இப்பொழுது என்ன ஆகும் சார்!

மன்சந்தா: என்ன ஆகும்? இரண்டாந் தடவை விளம்பரம் கொடுக்க வேண்டியிருக்கும். தகுதியான ஆள் யாரும் கிடைக்கவில்லை என்று நான் நோட் எழுதிவிடுகிறேன். ராமாதார் சிங்கை எப்படி எடுத்துக்கொள்ளலாம் என்பதை அப்புறமாக யோசித்துக் கொள்ளுவோம். என்ன நான் சொல்வது, மிஸ்டர் அக்ரவால்? சரிதானே?

அக்ரவால்: சரிதான்; சரிதான்! (எல்லோரும் ஒருவரை ஒருவர் பார்த்துக்கொள்ளுகிறார்கள்.)

காரியாலயத்தின் முகப்பில் தேசியக் கொடி காற்றில் சீறிப் படபடக்கிறது. அதன் படபடப்பும் சீற்றமும் அவர்களை என்ன செய்துவிட முடியும்? — ராஷ்டிரபாரதி



கந்தர் அநுபூதி (அருணகிரி ஹிருதயம்)

முருகன் அடியார்களுள் அருணகிரிநாதர் தலைசிறந்தவர்; முருகனைப் பாடும் பணியே பணியாகக் கொண்டு, முருகன் அருளையே துணையாகப் பெற்று, முருகன் அருளிலே திளைத்து, முருகப் பெருமானின் அருட்பிரசாதத்தை அனைவருக்கும் அள்ளி வழங்கிய அருளாளர் அவர்; சந்தத் தமிழில் கந்தனின் 'திருப்புகழை' எடுத்தோதி அவரது கடைக்கண் நோக்கைப் பரிபூரணமாகப் பெற்றவர்; முருகன், குமரன், குகன் என்று மொழிந்து உருகும் செயலையே தம் உணர்வாகக் கொண்டவர்; கந்தன் அருளுக்குப் பாத்திரமாகி, கந்தனது அநுபூதியைப் பெற்று, "கந்தர் அநுபூதி" என்னும் அரிய நூலைக் கந்தன் அடியார்கள் உய்யும்பொருட்டு இயற்றிய மாமுனிவர். வெறும் பக்தி நூல் மட்டும் அன்று அது. ஞான நூல், யோக நூல். அந்நூலுக்கு உரை எழுதுவதென்பது மிக மிக அரிய செயல். முருகப் பெருமானிடம் கொண்ட அளப்பரும் பக்தியையும், ஆசிரியரிடம் கொண்ட பெருமதிப்பையும் துணையாகக் கொண்டு, கந்தர் அநுபூதியின் ஐம்பத்தொரு பாடல்களுக்கும் **அருணகிரி ஹிருதயம்** என்ற பெயரில் மிகப் பெரிய விரிவுரை எழுதியிருக்கிறார் இந்நூலாசிரியர்.

உபநிடதம், பகவத்கீதை, சித்தர் பாடல், தேவாரம், திருவாசகம் முதலிய பல்வேறு ஆதாரங்களைக் காட்டி எழுதப்பட்டிருக்கும் இவ்விரிவுரை அரிய ஞானக் கருவூலமாக விளங்குகிறது.

கந்தர் அநுபூதிப் பாடல்கள், உருவில் சிறியவை; ஆனால் பொருளில் பெரியவை; கருத்தில் அரியவை. சாதாரணமாகப் பதப் பொருளை விளங்கிக் கொண்டாலும் ஒவ் [illegible]

விளங்காத பொருளை விளக்க ஏற்படும் உரையாசிரியர்கள் கவனத்தில் கொள்ள வேண்டும் இதை. இல்லையென்றால் உரைக்கும் ஓர் உரை தேவை என்ற நிலை ஏற்பட்டு விடும்.

இம்மாபெரும் நூலில் எழுத்துப் பிழை பல இடங்களில் கண்ணை உறுத்துகின்றன. அவற்றைத் தவிர்த்திருந்தால் நன்றாயிருந்திருக்கும்.

விரிவுரையாளர்: [illegible] நெல்லையப்பர் பத்மநாபன்; பிரசுரம்: கார்த்திகேயன் பப்ளிகேஷன்ஸ், 279, தம்பு செட்டி தெரு, சென்னை-1; விலை: ரூ. 12.50.

ஜீவகீதம்

நச்சி, சபேசன், லேகா, தம்பையா, கன்னியம்மா, மருதமுத்து, சந்திரா — இந்தப் பெயர் வரிசையில் யாருமே பிரமுகர் என்று கூறத் தக்க நிலையில் இல்லை. எல்லாரும் சாதாரண மனிதர்கள்தான். இன்னும் சொல்லப் போனால் சாதாரண மனிதர்களுக்கும் கீழான நிலையில் அவல வாழ்வு வாழ்ந்துகொண்டிருப்பவர்கள். இவர்களை, இந்தச் சாதாரணப் பாத்திரங்களை வைத்துக் கொண்டு, இந்நூலாசிரியர் அதியற்புதமானதொரு நவீனத்தைப் படைத்துவிட்டார்.

பர்மாவிலிருந்து ஓடிவந்த அகதியான சபேசன்தான் இந்த நவீனத்தின் கதாநாயகன். உலகம் தெரியாத வாலிபன். தனி [illegible] அநாதை [illegible] இந்த உலகத்தின் நடப்புகளையெல்லாம் அறிந்து கொள்கிறான். அவன் அறிந்துகொள்ளும் அனுபவங்களெல்லாம் சேர்ந்து [illegible] நவீனமாகியிருக்கிறது. சபேசன் அனுபவிக்கும் பசி, பட்டினி, துயரம் இவைகளுக்கு இடையே, அன்பு, பரிவு, பாசம், நேசம், காதல் இவைகளெல்லாம் காணக் கிடைக்கின்றன. வெறும் கதை சொல்வதோடு நின்றுவிடாமல், இந்நூலாசிரியர், சமூகத்தில் நிலவும் பொய், பித்தலாட்டம், சூது, மோசடி முதலியவைகளையெல்லாம் பல சுவையான நிகழ்ச்சிகள் மூலம் தத்ரூபமாகப் படம் பிடித்துக் காட்டுவதோடு, சுவைக்கவும் கொடுக்கிறார். ஒவ்வொரு பாத்திரம் இயங்கும் விதமும் மனத்தில் பதியும் வண்ணம் அமைந்திருப்பது இந்த நூலின் தனிச் சிறப்பு.



மிடுக்கான மற்றும் சிரமமின்றி உபயோகிக்கத்தக்க ரிரைட் பிளாஸ்டிக் சாமான்கள்.



பருக்கள், கருப்பு மச்சங்கள், வேர்க்குரு மற்றும் சிறு சரும நோய்களுக்கு



நிகோ

கிருமிநாசினி சோப்





ஒவ்வொரு நாளும், உங்கள் சருமத்திற்குத் தேவையான பராமரிப்பை அளிக்கத் தவறாதீர்கள்.

நிகோ — ஒரு பார்க்-டேவிஸ் தயாரிப்பு

எழுத்துத் தொழில் இரகசியங்கள்!

• ஏ·சுவர் •

பேனா மன்னர்களின் பணி எவ்வாறு நடைபெறுகிறது? பல நாடுகளிலுமுள்ள சிறந்த எழுத்தாளர்களை அவர்களது பணி குறித்துப் பேட்டி கண்டு எழுதிய நூலிலிருந்து வியப்பும் திகைப்பும் அளிக்கும் சில பகுதிகள்:




ஒரு கதை அல்லது நாவல் குறிப்பிட்ட நான்கு நிலைகளில் உருவாகிறது எனலாம். அதாவது (1) சிந்தனையில் தெறிக்கும் முதல் கீறல்; (2) கற்பனையிலேயே வளரும் கரு வளர்ச்சிப் பருவம்; (3) வேகமான முதல் எழுத்து வடிவம்; (4) சரி பார்த்துப் பூர்த்தி செய்யப்படும் இறுதி நிலை.

'நியூயார்க்கர்' பத்திரிகையில் ஆசிரியராக இருந்தது முதல் பலவித பிழைப்புக்கள் நடத்தி வந்த ட்ரூமன் காபட்டின் சிறுகதை அவரது பத்தொன்பதாவது வயதில், ஓஹென்றி பரிசைக் கைப்பற்றியது.

கேள்வி: உங்கள் முதல் அநுபவம் எப்படி?

பதில்: ஓ! எந்த எழுத்தாளரும் தனது முதல் அநுபவத்தை மறக்கமுடியாதே: என்னுடைய பதினேந்தாவது [வயதில் என் கதைகள் வெளியான மூன்று பத்திரிகைகளும் ஒரு நாள் காலைத் தபாலில் வந்தபொழுது தலைசுற்றல், மயக்கம் என்பதை அப்பொழுதுதான் அநுபவித்தேன்.



விபத்துக்குள்ளாகும்படி ரேஸ் கார் ஓட்டவும் துணிச்சல் பெற்ற பெண்மணி பிரான்சு நாட்டுப் பிரான்கவா சேகன்.

கே: இரண்டு நாவல்கள் எழுதி முடிக்க உங்களுக்கு ஐந்தாறு மாதங்கள்கூட ஆகாது போலிருக்கிறதே?

ப: ஆம்! சீக்கிரம் சம்பாதிக்க அது ஒரு சிறந்த மார்க்கம் அல்லவா? (புன்முறுவல்)

ஆங்கிலேயரான ஆங்கஸ் வில்சனைச் சந்திக்கும்போது.

கே: உங்கள் படைப்புக்களில் உங்களுக்கு எது மிகவும் பிடித்தது?

ப: பெற்றோரிடம் தங்கள் பிள்ளைகளில் அவர்களுக்கு மிகவும் பிடித்தது எது என்பதைப் போன்ற கேள்விதான் இது.



ஹெமிங்வே கூறியது போல் ஃபாக்னருக்கு அடுத்தபடியாக அமெரிக்க எழுத்தாளர்களில் இருப்பவர் நெல்சன் அல்க்ரென்.

கே: நீங்கள் எழுதுவதில் அசாத்திய கவனம் செலுத்துவதாகக் கூறுகிறீர்களே?

ப: ஆம், நான் எப்பொழுதும் உஷாராக இருப்பவன். அதனால்தான் ஒரு கால் புள்ளி, அரைப் புள்ளியைக்கூடக் கவனமாக வைப்பது வழக்கம். படிப்பவர்கள் என் நோக்கத்தைக் கடந்து சென்றுவிடக் கூடாதே என்பதுதான் என் கவலை.

ரஷ்யாவுக்காகச் செக்காவ் செய்ததை, அயர்லாந்துக்காக பிராங்க் ஓகோன்னர் செய்கிறார் என்று அவரது சிறுகதை இலக்கியங்களைப்பற்றிப் பிரபல விமரிசகர் ஒருவர் கூறினர். அவரைக் கேட்போம்.

கே: உங்களை ஓர் எழுத்தாளராக வரத் தூண்டியது எது?



ப: சிறு வயதில் வர்ணம் பூசும் தொழிலில் இருந்தேன். பின்னர் வர்ணங்களின் விலை ஏகமாக ஏறி விடவே அத்தொழில் கட்டுப்படியாகவில்லை. ஆகவே, நான் ஓர் எழுத்தாளனாக மாறி விட்டேன். அதற்கு ஒரு பென்சிலும், ஒரு பென்னி நோட்டுக்கும் போதுமல்லவா!

1949ம் ஆண்டு இலக்கியத்துக்கான நோபல் பரிசு பெற்ற நாவலாசிரியர் வில்லியம் ஃபாக்னர்.



கே: எழுத்தாளர் என்ற முறையில் நீங்கள் எப்படி?



ப: ஷேக்ஸ்பியரின் நாடகங்களுக்கு மூவர் உரிமை கொண்டாடுகிறார்கள். ஹாம்லட், மிட் சம்மர் நைட்ஸ் ட்ரீம் ஆகியவை தான் முக்கியமே ஒழிய அவற்றை யார் எழுதினார்கள் என்பது அல்ல.... ஒவ்வொரு நாவலாசிரியனும் முதலில் கவிதை புனையவே விரும்புகிறான். தன்னால் இயலாது என்று கண்டதும் சிறுகதையாவது எழுதலாம் என்று முயலுகிறான். அதுவும் கவிதையை அடுத்த கடினமான சமாசாரம். இத்தோல்விகளுக்குப் பின்னரே அவன் நீண்ட நாவல்கள் எழுதத் தொடங்குகிறான்.

கே: இரு முறை, மும்முறை படித்தும் உங்கள் நாவல்களைப் புரிந்து கொள்ள முடியவில்லை என்று சிலர் கூறுவது ஏன்?

ப: அவர்கள் நான்கு முறை படிக்கட்டும்.

நீங்கள் எப்பொழுது எழுதுகிறீர்கள் என்ற கேள்விக்கு நகைச்சுவை எழுத்தாளர் ஜேம்ஸ் தர்பர் பதில் கூறுகிறார்: "நான் எப்பொழுது எழுதாமல் இருக்கிறேன் என்பதுதான் எனக்குச் சரியாகத் தெரிவதில்லை. விருந்து நடைபெற்றுக் கொண்டிருக்கும். நான் இருப்பது என்னவோ உணவுக்கு எதிரில்தான். ஆனால் எனது மனைவி, 'சனியன்! எழுதுவதை நிறுத்து தர்பர்' என்பாள். என் சிந்தனையோட்டத்தில் ஒரு பாராவுக்கிடையில் வந்து மறித்து நிற்பதே அவள் வழக்கம். அப்பொழுது என் பெண் கேட்பாள், 'அவருக்கு உடல்நலமில்லையா?' என்று. 'இல்லையில்லை. அவர் சிந்தனையில் ஏதோ எழுதிக் கொண்டிருக்கிறார்' என்பாள் என் மனைவி சூடாக.

கடற்படையில் பணியாற்றும்போதே எழுதிப் புகழ்பெற்ற வில்லியம் ஸ்டைரோன்:

கே: எழுதுவதில் நீங்கள் இன்பம் காணுகிறீர்களா?

ப: நிச்சயமாக இல்லை. அந்த நாட்களில் நான் மிகவும் அவஸ்தைப்படுகிறேன். ஒரு கற்பனை உருவாகும் முன்போ அல்லது அதை எழுதி முடித்த பின்போதான் என்னை நான் சாதாரணமாக உணர்கிறேன். எழுதுவதென்பது நரகம். ஆனாலும் என்னால் அதை ஒதுக்க முடியவில்லையே!

ஓஹென்றி பரிசுபெற்ற பிரபல அமெரிக்க ஆசிரியை டோரத்தி பார்க்கர். அவரது கவிதைகளும், கதை நாடக நூல்களும் விற்பனையான வேகம் அமெரிக்கா அதற்குமுன் கண்டிராத ஒரு புதுமை. இவரது எழுத்துக்களில் நகைச்சுவை மிளிர்ந்தாலும் கடுமையைக் கையாள்வதில் தவறுவதில்லை.

கே: பெரும்பான்மையான உங்களது எழுத்துப் பணி எதைக் குறிக்கிறது?

ப: பணத் தேவைதான், அன்பரே.

கே: அதைத் தவிர?

ப: நீங்கள் வெறுப்பன பற்றி யெல்லாம் எழுதுவது மிக எளிதாயிற்றே — அதாவது மோசமான நாடகம், தரமற்ற நூல் இவற்றை விமரிசிப்பது போலத்தான்.

கே: எவ்வாறு உங்கள் பாத்திரங்களுக்குப் பெயரிடுகிறீர்கள்?

ப: டெலிபோன் டைரக்டரி மற்றும் பத்திரிகைகளில் வரும் இறந்தோர் பட்டியல் இவற்றிலிருந்து பொறுக்குகிறேன்.

கே: கதையை எவ்வாறு காகிதத்தில் ஏற்றுகிறீர்கள்?

ப: இரண்டு விரல்களால் டைப் செய்து முடிக்கிறேன். டைப் அடிப்பதில் எனக்குள்ள அநுபவம் எவ்வளவு என்பதை அறிந்தால் ஏளனம் செய்வீர்கள். ஒரு முறை அந்த யந்திரத்திலுள்ள பழைய ரிப்பனை மாற்றத் தெரியாததால், டைப் மெஷின் ஒன்று புதிதாகவே வாங்கி வந்து அடிக்க ஆரம்பித்தேன்.

மிக விரைவாக நாவல்களை எழுதி முடிக்கும் திறமை பெற்ற பிரபல ஃபிரெஞ்சு நாவலாசிரியர் ஜார்ஜ் ஸிமெனோன் ஒரு முறை இருபத்தி ஐந்து மணி நேரத்தில் ஒரு நீண்ட நாவலை எழுதி முடித்தவர்.

கே: எவ்வாறு உங்கள் எழுத்துப் பணி நிறைவேறுகிறது?

ப: என்னுள் ஏதேனும் உதித்தபின், அதை எண்ணிக் கொண்டிருக்க இரண்டு நாட்களுக்கு மேல் என்னால் இயலாது. உடனே எழுதத் தொடங்கி விடுவேன். பின்னர் நான் யாரையும் பார்ப்பதில்லை, பேசுவதில்லை, டெலிபோனுக்கும் செவிசாய்ப்பதில்லை. நான் முழுதும் கதாபாத்திரங்களில் ஒருவனாகவோ ஒருத்தியாகவோ இருப்பேன். அந்த நாட்களில் எனது இரத்த அழுத்தம் உயர்ந்தே இருப்பதும் நாவல் முடிந்தபின் குறைந்து விடுவதும் சகஜமானது. என்னால் நீண்ட நாட்கள் இதைத் தாங்கிக் கொண்டிருக்க முடியாது களைத்து விடுகிறேன். என் நாவல்கள் அதிக நீளம் இல்லாமல் இருப்பதன் முக்கிய காரணம் இதுதான்.

ரோம் நகர மாது என்ற ஒரு நாவல் மட்டும் பதினொன்று மொழிகளில் பிரசுரமாகி விற்பனையாயிற்று. அதன் ஆசிரியரான ஆல்பர்டோ மொரேவியா சொல்லுகிறார். "சுயசரிதம் எழுதுவதென்பது என்னால் இயலாது: ஏனென்றால் எப்பொழுதும் சுற்றமும் கற்பனையும் கலந்தே எனது கருத்துக்கள் வந்து சேர்கின்றன. ஆம், உண்மையில் நான் ஒரு பொய்யன், அதுதான் நாவலாசிரியன்."

நூலின் பெயர்: Writers at Work.

வெளியீடு: Secleton & Warren, London.

விலை 21 ஷில்லிங்குகள்.

பொருளாதாரம் என்பது நிலக்கரியை எப்படிச் சேமிப்பது என்பது அல்ல. நிலக்கரி எரியும் நேரத்தைப் பலனுள்ள வகையில் பயன்படுத்திக் கொள்வதே பொருளாதாரமாகும். — எமர்ஸன்

தகவல்: ஏ. கே. கந்தசாமி

புகை நடுவினிலே

ஸ்ரீப்ரியா



““என்ன, நேரமாகுமா இன்னும்?” நடையை விட்டிறங்கிய காமு, சீதாவைக் கேட்டாள்.

“ஆகும் போல்தான் இருக்கிறது. நீ எதற்கும் ஒரு வாய் சாப்பிட்டுவிட்டுப்போ. யாருக்காகவோ காத்திருப்பதுபோல் தோன்றுகிறது.”

“யார் வர வேண்டும் இன்னும்?” காமு புருவத்தை நெரித்தாள்.

“யார்? காமுவா? புறப்பட்டாச்சா? ஒரு நிமிஷம் இரு. நானும் வருகிறேன். எனக்குச் சமாசாரமே தெரியாது. காலையில் இவர்தான் 'பால்பூத்'துக்குப் போய் வந்தபோது ஏதோ சந்தேகமாகக் கூட்டம் தெரியவே போனாராம்! என்ன அநியாயமடீ... கல்லுப்போல் நேற்று இருந்தவன். ம்? பாவம், கல்யாணி!” என்று பின்னலை அவிழ்த்து முடித்தபடி தலையை நீட்டினாள் பக்கத்துப் போர்ஷன் பர்வதம்.

“என்ன செய்வது? அவரவர் வழி! கலி முற்றி விட்டதடியம்மா! புண்ணியவான்கள் அதிகமாகி விட்டார்கள். எங்கள் தாத்தா சொல்வார். படுக்காமல், கிடக்காமல் 'பட்'டென்று போக வேண்டும் என்பார். புண்ணியாத்மாக்களுக்குத்தான் அது கிடைக்குமாம். அப்படியானால் இந்த நாளில் புண்ணியவான்கள் அதிகரித்து விட்டனர். 'சட்பட்'டென்று 'ஹார்ட் ஃபெயில்யூர்', ரயிலில் வெடி, விமான விபத்து என்று இரண்டு கை போதாமல் வாருகிறான் யமன்.” விரக்தியும் வேதனையுமாகக் குமுறினாள் கல்யாணியின் அத்தியந்த சிநேகிதி வனஜா.

“போகிறவன் போனால் இருக்கிறவர்களுக்கு வாய் வார்த்தை பேச முடியவில்லையென்றிருக்குமோ. ஆனால் எல்லாம் அவரவர் வினை. ஒருவன் நட்டுப் பறித்தால், இன்னொருவன் அதையும் எட்டிப் பறிப்பான்.” காமுவின் குரலில் கடுப்பு வழிந்தது. கல்யாணியிடம் போலவே அவள் தோழியிடமும் அவளுக்கு ஏனோ ஒரு கசப்பு இருந்தது.

“ம்... அதெல்லாம் இப்போது எதற்கு?” தெரு முனை வந்து விட்டதன் அறிகுறியாகச் சீதா எச்சரித்தாள்.

வனஜா தலை குனிந்தாள். காமுவின் சீற்றம் அவளுக்குப் புரியாமல் இல்லை. கல்யாணி மீதும்தான் என்ன தவறு? அவள் வேண்டுமென்று வஞ்சித்தாளா? சேகரிடம் உறவை வேண்டினாளா? ஆனால் எப்படியோ எல்லாம் நடந்து விட்டன. இத்தனைக்கும் சேகருக்கு அவள் இரண்டாம்தாரம்தான் என்று அறிந்த வனஜா பரிகசித்ததும் எல்லாம் கனவாகி விட்டன. ஏன், கல்யாணிக்கே தான் மூன்று வருடங்கள் அவனுடன் கூடி

வாழ்ந்தது இன்று கனவாகத்தான் ஆகி யிருக்கும். தவறு முழுதும் கல்யாணியின் அழகின் மீதோ, அவள் சேகரிடம் ஸ்டெனோ வாக வந்ததிலோ இல்லை! அதற்குக் கார ணம் அவன்.... அந்த மூத்தவன்....?

க் க் க்

"என்ன, தயார்தானே?" சேகரின் அடுத்த தம்பி அவனுக்கு அங்கு நிற்பதே நெருப்பாக இருந்தது. சொந்த அண்ணன் கட்டையாகி விட்டான். ஆனால் கல்யாணி? அவள் இன்னும் பசுமரமாகத்தானே எதிரே நிற்கிறாள். பாவி! பெண்களின் அழகு போகாதது என்பார்கள். இது கொள்ளை அழகு. அதுதான் துடைத்து விட்டதோ!

"அம்பி, தயார்தான். ஆனால் ஒரு வார்த்தை. அவள்...உன் பெரிய மன்னி ஒருத்தி இருக்கிறாள் இல்லையோ, அவளுக்குச் செய்தி அனுப்பியாகி விட்டதா? அப்போது நான் போலே......"

"யாருக்கு, சுசீலாவுக்கா?" ராமு இறுக் கிட்டான். "அவளுக்கும் நமக்கும் இனி ஏது உறவு? இருந்த நாளிலேயே ஒட்டவில்லை. இனி போய்......" — ராமு வெட்டிப் பேசினான்.

"சரி.... உன் விருப்பம்." சாஸ்திரிகள் இதிலும் தெரிந்தவர் போலும். அதிகம் வற் புறுத்தவில்லை.

ஆனால் ராமு? பெண்கள் கும்பல் ஒன்று நுழைவது கண்டு ராமு ரூமிலேயே போய் உட் கார்ந்து விட்டான். அந்த ரூமே! அதோ, நடு வாசலில் இப்போது கால் நீட்டிப் படுத்துவிட் டானே அண்ணா. இது என் வீடு என்று முழு வதையும் ஆக்கிரமிப்பது போல் ஆதாரமுமாரு வாகக் கிடக்கிறானே அவனிடம் இந்த ஒரு ரூமிலாவது முடங்கிக் கிடக்க இடம் கேட் டுத்தான் அவள் ஓர் இரவு முழுதும் அழுதுக் கெஞ்சினாள். ராமுவுக்கு நன்றாக நினைவிருக் கிறது. சுசீலா அவன் மூத்த அண்ணி. "ராமு! நீயாவது அண்ணாவிடம் சொல்லு. ஐயோ, நான் நிரபராதி. என்னை ஏன் பூமி விழுங்க வில்லை? ஏன் எனக்கு இந்த அபவாதம்?" என்று அவள் கதறிக் கதறி முட்டிக் கொண் டது இந்த ரூமில்தான்.

அதை நம்புவது யார்? அழகில் அது ஒரு ரகம்! தானே அநுபவிக்க இயலாது இழந்து நிற்கும் அவல அழகு கல்யாணியினுடையது என்றால், எல்லாவற்றையும் அநுபவிக்கத் துடித்து நின்ற அழகு சுசீலாவினுடையதோ? சுசீலா! சீலம் என்றால் ஒழுக்கம் என்று



அர்த்தம். ஆனால் சுசீலா....? சே! அவ ளுக்குச் செய்தி அனுப்பவா? இல்லாவிட் டால் கட்டை வேகாதா?

க் க் க்


ஊர்வலம் புறப்பட்டு விட்டது. ராமு தான் முன்னால் நடந்தான். அவனைத் தொடர்ந்து வந்தன அழுகையும் பேச்சு மான குரல்கள்.

"கல்யாணி! உனக்கு இஷ்டமில்லையோ. போனவன் தானும் வாழாமல் உன்னையும் சபித்து விட்டானே....." — இது வனஜா.

"ஏன், ஒரு பெண்ணின் வயிற்றெரிச்சல் வீண் போகுமா?" — இது காமுவின் முணு முணுப்பு.



ஆறடி நிலமே சொந்தம்



''உலகம் முழுவதும் தமக்குப் போதவில்லை என்று கூறிய இவருக்கு இப்பொழுது இந்தக் கல்லறை போதுமானதாக உள்ளது.''

இந்த வாசகம் உலகப் புகழ் பெற்ற மாவீரன் ஒருவரின் கல்லறையில் பொறிக்கப்பட்டுள்ளது. அம்மாவீரன், வெற்றி கொள்ள இன்னும் நாடுகள் இல்லையே என்று ஏங்கிப் புலம்பிய 'அலெக்ஸாண்டர்' தான்!

ஆதாரம்: ''ஊன்றுகோல்''
தகவல்: ச. ஸ்ரீதரன்

ராமு சட்டியுடன் நடந்தான். அது புகைந்தது!

''என்னிடம் படித்த குழந்தை. எனக்கு வழி காட்டிக் கொண்டு முன்னால் புறப்பட்டு விட்டான்...'' பள்ளியாசிரியர் பரசுராமனின் குரல் கேட்டது.

''ஏன் சார்! இப்போது... அவன்.... அது தான் ரத்து செய்து கொண்டு போனவள் விதவையா இல்லையா?'' இது பொழுது போக்குக்கென்றே ஒருவர் அசை போட்ட கேள்வி!

''ஹூம்.... அவனுக்குத்தான் எள்ளும் தண்ணீரும் தெளித்தாகி விட்டதே! ஓடுகாலி......!''

ராமு குமுறினான். அந்த அளவுக்குச் சேகரின் வாழ்க்கை ஓர் ஏமாற்றம்தான்! எத்தனை ஆசையுடன், அழகி, படித்தவள் என்று இரக்கப்பட்டு அவன் கவிதாவை மணந்து கொண்டான். கல்யாணத்துக்குமுன் வேலை பார்த்த அவனுடைய ஆபீஸ் நண்பர்கள், அவளை அன்று கேலிகள் பல பேசிய போதுகூட அதை எப்படிச் சாதாரணமாக ரசித்து அவனும் சிரித்தான்! ஏன், யாரோ ஒரு நண்பர் பெரிய அட்டைப் பெட்டியில் காகிதத்துக்கு மேல் காகிதமாகச் சுற்றி ஒரு பரிசு தந்ததும் அதை உடன் இருந்தவர்கள் கிண்டல்பாட்டுடன், அல்லது குழந்தைப் பொம்மை என்று நினைத்தபடி பிரிக்கவும், அதனுள் ஓர் ஆணும், பெண்ணுமாக 'ஸ்கூட்டரில்' பறப்பதுபோல் ஒரு பொம்மை இருந்த போது அதைச் சேகர் முதலில் எப்படி எண்ணிக் கொண்டான்? தன்னுடன் அவள் அப்படி உல்லாசமாக வாழப் போவதையே அது பிரதிபலிக்கிறது என்றல்லவா அவன் எண்ணினான்! ஆனால்...?

யாரோ ஒருவன், அவளை ஸ்கூட்டரில் வைத்துச் சுற்றியவனின் ஏக்கத்தின் பிரதிபலிப்பு அது என்ற உண்மையை அவன் அறிய எத்தனை நாட்களாயின?

ராமுவின் கைச்சட்டி, உள்ளே கனிந்த தீயுடன் புகைந்தது. அண்ணாவின் அன்பு நெஞ்சில் அவன் இன்றுதானா தீ வைக்க வேண்டும்? அந்தப் பாவிதான் என்றோ கொட்டி விட்டாளே! ராமுவின் கண்கள் கலகலவென்று பொழிந்தன.

அண்ணன் அவளை வெட்டிப் பேசியும், அடித்தும் சண்டையிட்டும் அடக்க முயன்றது அவன் கேள்விப்பட்ட செய்திதான். குணம் மாறுமா? அவளும் அழுது ஆகாத்தியம் செய்திருக்கிறாள்! கடைசியில் அண்ணனுடன் இனி ஒத்து வராது என்று விவாகரத்து கோரிய போது, அதுவும் அவளாகவே பிரஸ்தாபித்த போது சேகர் எப்படித் திகைத்து விட்டான். அவனுடைய ஆண்மைக்கு ஒரு சாட்டையடி அது! நல்ல காலம்! அவனுக்கு அப்போது பைத்தியம் பிடிக்காமல் காப்பாற்றிவிடக் கல்யாணி எங்கிருந்தோ வந்து சேர்ந்தாள். சேகரும் சற்றுத் தேறினான். என்ன ஆனாலும் ஆண் பிள்ளைதானே? கல்யாணி எதிர்வீட்டில் குடியிருந்து அவனுக்கு இங்கேயே வேலை பார்த்தவள். காலின் கீழ் கிடைத்த ஏணியைப்போல அவளது அன்பு அவனுக்கு உதவியது. கல்யாணியின் அழகும், குணமும் யாரைத்தான் மயக்காது! சேகர் அவள்முன் அடிமையாய்த் தன் இழப்பை ஈடு செய்து கொண்டது அதிசயமேயல்ல.

ஆனால், இன்று அந்தப் பச்சைக் கொடிக்கு யார் துணை? பொங்கும் இளமையும், கொப்புளிக்கும் அழகும் இந்த ஒரு சட்டி நெருப்புடன் அழிய வேண்டியதுதானா? சே.... கவிதாவின் செய்கையால் இன்னோர் இளம் பெண்ணின் வாழ்வும் அல்லவா பாழாகி விட்டது! பாதகி! அவளுக்குச் செய்தி அனுப்ப வேண்டுமாம். சட்டப்படி வெட்டி விட்ட உறவுக்கு இன்னும் என்ன வேண்டியிருக்கிறது? அவளை அவன் கணவனாக மதித்திருந்தால் அல்லவா இன்று கவலைப்படப் போகிறாள். தூ.... அது ஒரு ஜன்மமா? என்னமோ, இந்தக் காரு மாமி ஒருத்தி உளறுகிறாள். அவள் ஊர்க்காரியாம். 'எங்கள் கவிதா மாதிரி கிடையாது' என்று கல்யாணியைப் பழிக்கிறாள். ஐயோ! கல்யாணி, உனக்கா இந்த அவல நிலை!

ராமுவின் நெஞ்சு விம்மியது. கல்யாணி கன்னியாயிருந்தபோது, ஒரு முறை வீட்டில் வந்த ராமுவே அவளிடம் மனத்தைப் பறிகொடுத்திருக்கிறான். ஆனால் விதி ஏதேதோ விளையாடி விட்டது. கைப்பிடிக்க நினைத்தவள், தாய் ஸ்தானத்தில் அமர்ந்ததும், தன் மனத்தை அடக்கி விட்டான் ராமு. அண்ணன் வாழ்வில் மறுபடியும் ஒரு சந்தேகம் - கவிதாவின் மறு பிரதி தோன்றி - விடக் கூடாதே என்று! ஆனாலும் இன்று அவளைக் கண்டால் அவன் மனம் பதறத்தான் செய்கிறது. என்ன செய்வது......?

பாழும் விதி! கவிதாவின் அறிவைப் பறிப்பானேன்? அதனால் கல்யாணியின் கன்னித் தன்மை அழிவானேன்? இன்று சேகரின் உயிரைக் குடிப்பானேன்? ராமு


சுறுசுறுப்பான நாளினை இலேசாக்க
16.95
Bata
16.95



''நீங்கள் சாகும்வரை உறுதியாகக் காங்கிரஸ் காரராக இருப்பீரா?''

''காங்கிரஸ் முதலில் இறந்துபோவதாக இருந்தாலொழிய...''

எதையும் கூற இயலாது கையையும் வாயையும் கட்டிக்கொண்டு நெஞ்சுக்குள் கல்யாணிக்காகவும், வெளியில் அண்ணனுக்காகவும் கண்ணீர் வடிப்பானேன்? நினைக்க நினைக்க ராமுவுக்குச் சுசீலாவின் மீதே எரிச்சல் பிறந்தது. அவளை மட்டும் கண்டால், இந்த நெருப்புச் சட்டியை உயிரோடு அவள்மீது எறிந்து விடலாம்!

ஃ ஃ ஃ

''**ம**னத்தைத் திடப்படுத்திக்கொள், அப்பா! ஒரு மகன் இருந்தால் உனக்கு இப் பொறுப்பு இல்லை. என்ன செய்வது? கல்யாணமான எட்டாம் மாதம் பிறந்த பிள்ளை தொட்டில் ஏறுமலே போய் விட்டது கல்யாணிக்கு.'' — அனுபவஸ்தர் ஒருவர் ராமுவைத் தேற்றினார்.

''ஐயோ.... என்னைச் சீராட்டி வளர்த்த மார்பில் என் கையால் தீ வைக்கவா?'' என்று அலறினான் ராமு.

''நீயும் இல்லாவிட்டால் கல்யாணியாக்கும் இதைச் செய்ய வேண்டும்.''

''அப்பப்பா...'' ராமு பதறினான். அவனால் கற்பனைகூடச் செய்ய முடியவில்லை. கட்டி அணைத்து மகிழ்ந்த மார்பில் தீ வைக்க எந்த மனைவி துணிவாள்? இந்து மதச் சட்டங்கள் பயங்கரமானவைதாம்! ராமு கட்டை ஏறிவிட்ட அண்ணன் முகத்தருகே குனிந்தான்.

''இரு.... இரப்பா....'' திடீரென்று ஓர் உருவம் கூட்டத்தை விலக்கிக் கொண்டு ஓடி வந்தது. ''ஒரு நிமிஷம்....!''

''ஏன்..... என்ன?'' பல குரல்களுக்குப் பதில் வருமுன்.... யாரது? தலைவிரிகோலமாக அலறிக் கொண்டு வருவது யார்?

''சுசீலா.... நீதானா?'' — ராமுதான் முதலில் விளித்தது. வெளியே பெண்கள் கோஷ்டியுடன் இருந்த அவள் எப்படி உள்ளே வந்தாள்? சுசீலாவைக் கண்டாள்?

அணைக்க வந்த கரத்தை விலக்கி ஒதுங்கினாள் சுசீலா. ''என்னைத் தொடாதே ராமு. நான் விதவை.....''

''சே.... யாரது?'' என்று ராமு முகம் சுளித்தான்.

''ராமு, ஒரு நிமிஷம். அவர் முகத்தைப் பார்த்து விடுகிறேன். அவர்.... அவர் என்னவர். இந்த உரிமையை எனக்குக் கொடு.''

''மன்னி.... அந்த உரிமை என்றோ ரத்தாகி விட்டதே! நீ அவனிடமிருந்து ஓடிப் போனவள்.....!'' — ராமு நெருப்பாய்ச் சொற்களைக் கொட்டினான்.

சுசீலா 'பக்'கென்று சிரித்தாள். இந்த நிலையில் இப்படி ஒரு சிரிப்பா? ''இல்லை.... ராமு.... நீ என்னை என்னவென்று கூப்பிட்டாய்? மன்னி! அதுவே காட்டுகிறது, உறவு அழியவில்லை என்று. என்னைப் பெயரிட்டு அழைக்கக் கூசுவதே எனக்கு மரியாதை செய்கிறாய் என்கிறது! நான் ஓடிப் போனவள் தான். ஆனால் எனக்காக, என் சுகத்துக்காக அல்ல. ம்... அந்தக் கதை இப்போது சாவின் சந்நிதானத்தில் எதற்கு?''

''பின், எதற்கு வந்தாய்?'' ராமுவுக்குக் கை பரபரத்தது, தன் கையில் உள்ளதை அவள் தலையில் கொட்ட. மனிதன் செத்த பின்கூட அந்த நிலையிலும் அவமானத்தின் சின்னமான இவள் ஏன் வந்தாள்? உறவாம், உறவு! கோர்ட் ஏறவில்லை! நல்ல காலம், பத்திரிகையிலும் ஊர் வாயிலும் சந்தி சிரிக்குமுன், காது கிள்ளிக் கொடுத்து விலகிவிட்டான். சட்டத்தில் அதற்கு ஓர் இரகசிய வழியும் வகுத்தவன் வாழ்க! ஆனால், மறுபடியும் ஏன் வர வேண்டும்?

''உனக்கு யார் செய்தி அனுப்பியது?'' ராமு குரோதத்துடன் ராமுவை நோக்கினான்.

''நான் வரவேண்டாமா? சாஸ்திரிகளைக் கேள். ராமு, நான் மூத்தவள். சட்டத்துக்காக, சௌகரியத்துக்காக விலக்கப்பட்டேன். ஆனால் நமக்குத் தெய்வம் தான் சட்டம். நாம் கூடியது சட்டத்தினால் அல்ல! அதனால் சாஸ்திரீக உறவை, சாஸ்திரீக முறையில் துண்டிக்க வந்தேன். இன்னும் என்னைத் துளைத்து என் வேதனையைக் கிளறாதே ராமு. இதற்குமேல் எனக்குச்சொல்லத் தெரியாது.'' படீரென்று உடைத்த குடம் போல் கண்ணீர் வெள்ளமாகப் பாய்ந்தது.

ராமு ஒரு கணம் திகைத்தான். ஓடு காலி. அடங்காப் பிடாரி. குடும்பப் பண்பற்றவள்தி! என்று விமர்சித்த ஊர் வாய் பிளந்து நின்றது. இவளா அழுகிறாள்? இவளா பேசுகிறாள்?



ஒவ்வொரு மாவட்டத்திலும் ஏதாவது ஒன்று இல்லை என்றிருக்கும். ஆனால் ஒரு மாவட்டத்தில் மட்டும் மேற்கண்ட எட்டும் இல்லை. அது என்ன மாவட்டம்?

1. ரயில் பாதை
2. மந்திரிப் பிரதிநிதித்துவம்
3. துறைமுகம்
4. மருத்துவக் கல்லூரி
5. பொறி இயற் கல்லூரி
6. விமான தளம்
7. வானொலி நிலயம்
8. பல்கலைக் கழகம்

[illegible]
[illegible]

தொகுப்பு: சிவசக்தி

"சாத்தான் வேதம் ஓதுகிறதோ?...." என்னத்துக்குக் குரல் கொடுத்தார் ஒருவர்.

சுசீலா ஒரு நிமிஷம் நிமிர்ந்து நோக்கினாள். "ஆமாம்... உலகத்தில் ஒரு பண்பு மட்டும் எல்லோருக்கும் எப்போதும் பொதுவாக இருக்கிறது. படைத்த கடவுளையே நம்பாத உலகம் ஒன்றை மட்டும் நூறு சதவிகிதம் நம்புகிறது! அதுதான் ஒரு பெண்ணைப் பற்றிய அபவாதம்! அதை, ஆண் மனம் பயன்படுத்திக் கொள்ள நினைத்த போது — என்னை அதற்குப் பலியாக்கிய போது, சே...! ராமு நான் நிரபராதி. அன்று சொன்னதையே இன்று சாவின் சன்னிதானத்திலும் சொல்கிறேன். ஒரு சொட்டுக் கண்ணீர் விட்டு என் மங்கலத்தை இழக்க வந்தவள் நான் இப்போது. அந்த அளவில் கல்யாணிக்குள்ள உரிமை எனக்கும் உண்டு. வேறு பேச்சு எதற்கு? என்னைக் கைப்பிடித்தவருக்கு நான் துரோகம் செய்யவில்லை. பாவம், கல்யாணி! அவளுக்கு என் அநுதாபங்கள். நான் போகிறேன்..."

கடைசியாக ஒரு முறை சேகரின் மரத்துப் போன முகத்தைப் பார்த்துவிட்டு, 'பளிச்' சென்று திரும்பி வந்தாள் சுசீலா. மௌனமாக ஒரு நாடகம் பார்ப்பதைப்போல் திகைத்து நின்றவர்கள் தன் உணர்வு பெறுமுன், சுசீலாவின் ஒற்றை உருவம் தனித்து வெகு தூரத்துக்கப்பால் சென்று விட்டது. புகைந்த நெருப்புக்குள் நீருக்குகள் பொறி தட்டின.

வீட்டினுள் ஒரு சூன்ய உணர்வுடன் நுழைந்த ராமுவுக்கு ஒன்றுமே பிடிக்கவில்லை. கல்யாணியை எப்படி நோக்குவான்? சுருண்டு மூலையில் துவண்டு கிடக்கும் அந்த இளமையை அவன் எப்படித் தேற்றுவான்? மேஜையில் கவிழ்ந்து கிடந்த அவள் முன் நிழல் தட்டியது. "யாரது? கல்யாணி மன்னி! நீயா? ..." ஒரு கணம் அவள் உடல் பதறியது. "என்ன வேண்டும்?"

"சுசீலா வந்தாளாமே, எங்கே?"

"சே...மறுபடியும் அவள் பேச்சுத்தானா?" அழிக்க முயலும் புற்று நோய் மறுபடியும் மறுபடியும் தலைகாட்டுவது போல், ஏதோ வந்தாள், நாடகமாடினாள். தான் நிரபராதி என்றாள். சென்று விட்டாள்..." என்றான்.

"அவளை இங்கு அழைக்கவில்லையா நீங்கள்?"

"எதற்காக? என் அண்ணன் இறக்கும் போதே அவன் வாழ்வைக் கசக்க அடித்தவள். இப்போது துக்கம் பொங்கி வழிகிறதோ?"

"அப்படிச் சொல்லக் கூடாது, ராமு. பழி ஓரிடம், பாவம் ஓரிடம். என்ன ஆனாலும் சாவின் முன் துக்கம் எல்லோருக்கும் உண்டு. அதிலும் அவள் அவருடைய உண்மையான மனைவி....." கல்யாணி ஜன்னலுக்கு வெளியே பார்த்து நின்றபடி பேசினாள்.

"நீங்கள் என்ன சொல்கிறீர்கள்?" — ராமு திடுக்கிட்டான்.

"இன்று சொல்வதால் என்ன, ராமு? தவறு எங்களுடையது — என்னுடையதுதான். அவர் இங்கு வேலைக்கு வந்த நாள் அவர் மணமானவர் என்று அறியாமலே அளவு மீறிப் பழகினேன். அவருடைய ஆண் மனமும் சலனமுற்றது. எதிர் வீட்டிலேயே குடியேறியபோதுதான் என் தவறு புரிந்தது. ஆனால் அப்போது என் உள்ளமும், உடலும் என் கட்டுப்பாட்டுக்கு அடங்கவில்லை! விஷயத்தை ஊகித்துக் கண்டித்த சுசீலாவுக்குக் கிடைத்ததெல்லாம் அடி, திட்டு, சண்டை, கண்ணீர்! அவள் கல்யாணம் முதல் நடந்த ஒவ்வொன்றையும் வேறு விதமாகத் திரித்துக் கூறிய அபவாதம்! சமூகம் அதை நம்பியது. கடைசியில் அதற்கு முத்தாய்ப்பாக அமைந்தது காலத்துக்குள் கனிந்துவிட்ட எங்கள் காதல் கனி. அப்போதுதான் சுசீலா உயர் பிறவி எடுத்தாள். தன் பொய்யைக் கணவனே கெடுத்து விட்டான். ஆனால் இன்னொரு பெண்ணுக்கும், அத்துடன் குற்றமறியாத ஒரு புது உயிருக்கும்கூட மாசு வந்துவிடும் என்று அவளாகவே பிரிந்தாள். ஐயோ! சுசீலா! நீ மன்னித்துவிடலாம் என்னை. ஆனால் தெய்வம் பழிவாங்கி விட்டதம்மா. பெற்ற குழந்தையும் தங்காமல், கட்டிய கணவனும்.... ஐயோ..." கல்யாணி ஜன்னலில் முகம் புதைத்துக் குலுங்கினாள்.

படீரென்று ஓர் உண்மை வெடித்துச் சிதறிய வேகத்தில் சிலையாக நின்றான் ராமு. சுசீலா கடைசிவரை கணவனைக் காட்டிக் கொடுக்காது, கைம்மையை ஏற்க வந்த அவள் முகம் புகை மூட்டம் விலக்கி ஒளிரும் சுடராக அவனுக்குத் தோன்றியது.

இண்டியனுயில்

நம்முடையது !





நான் வேலை செய்யும் தொழிற்சாலையில் "தொழிலக உரைசல்" எதுவும் கிடையாது. யந்திரங் களில் அசையும் உறுப்புகளுக்கிடையே உரை-சலின்றி தடுக்க இண்டியனுயில் மகோன்னத ரக மோபில் எண்-ணெகள், கிரீஸ்கள் மற்றும் ரசாயனக் கலவைகளை விநியோகிக்கின்றது. தவிர அதன் தொழில் நுட்பச் சேவை சிப்பந்திகள் லூப்ரிகேஷன பிரச்னைகளில் நுங்கள் நிபுண ஆலோசனைகளை வழங்குகின்றனர்.

இண்டியனுயில் மக்களுக்காக நிலங்களில் விளைச்சலைப் பெருக்க எனக்கு உதவுகின்றது. எனது பத்தும் புதிய டிராக்டருக்கு வைஸ்பீட் டீசல் எண்ணெயும், எனது பாசன வேலைக்கான பம்புக்கு லேசான டீசல் எண்ணெயும், உரங்களுக்கு நாப்தா மற்றும் எனது பண்ணைக் கருவி களுக்கு பசை எண்ணெகளும் அதுதான் சப்ளை செய்கிறது.

இண்டியனுயில் இவ்வளவும் செய்ய முடிகிறதென்றால் அது நமக்குச் சொந்தமாக இருப்பதே காரணம்.

INDIANOIL

இண்டியன் ஆயில் கார்ப்பொரேஷன் லிமிடெட்

IOC-7217B.TAM

வட்ட மேஜை

- ☐ தகவல் எழுத்தாளர் சங்கம்
- ☐ ரஸமான கதை, கட்டுரைகள்
- ☐ ஆசிரியர் படும் பாடு
- ☐ பொன்மணியின் தியாகம்

'தகவல் எழுத்தாளர் சங்கம்' என்ற தலைப்பில், 'அபர்ணா' எழுதியுள்ள கதையைத் தங்களது 30-7-67 இதழில் படித்தேன். மகிழ்ச்சி நிரம்ப வேண்டிய மனத்தில் வேதனை தான் நிறைந்தது.

தகவல் எழுத்தாளர் ஒருவரது பெயரை ஓரெழுத்தையோ, ஈரெழுத்துக்களையோ மாற்றி எழுதி விட்டதன் மூலம் 'அபர்ணா' திருப்தி அடைந்து விட்டாரா ?

கதையின் கடைசியில் பிரசுரிக்கப்பட்டுள்ள மூன்று அல்லது நான்கு பத்திகளைப் படிப்பதற்கே கண்கள் கூசின.

சென்னை — 44
30-7-67 பாமா கோபாலன்

[யாருடைய மனத்தையும் புண்படுத்தும் நோக்கம் கதாசிரியர் அபர்ணாவுக்கோ அல்லது எங்களுக்கோ சிறிதும் இல்லை. நகைச்சுவை மிக்க நல்லதொரு கதை என்ற ஒரே நோக்கில்தான் 'தகவல் எழுத்தாளர் சங்கம்' கல்கியில் பிரசுரமாகியது. 'தகவல் எழுத்தாளர்கள்' பலருக்குக் கல்கி ஆக்கமும் ஊக்கமும் அளித்து வருவதை நினைவூட்ட விரும்புகிறோம்.
- ஆசிரியர்]

''தொண்டிக் கழுதை'' என்ற கதையைப் படித்தேன். நகைச்சுவையுடன் கிராமங்களின் நிலவும் பொருளாதாரச் சூழ்நிலையை வெகு அழகாகப் படம் பிடித்துக் காட்டி விட்டார் கதை ஆசிரியர் 'ஆத்தூரான்'.

ஆத்தூர்
22-7-67 வி. ப. துரைசாமி

''அரிசியிலிருந்து நெய்'' என்ற கதையைப் படித்தேன். சிரிப்பும் சிந்தனையும் கலந்த சீரியதோர் படைப்பு. ஆசிரியர் முகுந்தனுக்கு என் பாராட்டுக்கள். லோக சபா நடவடிக்கைகளில் வரும் கேள்வி பதில்கள், சர்க்காரின் கமிட்டி அமைப்பு எல்லாவற்றுக்கும் மேலாக அச்சுப்பிழை, அதற்கும் சிகரம் வைத்தாற்போல் 'ப்ரூப் ரீடரா'கச் சொல்லிச் சபிப்பது — அனைத்தும் பிரமாதம்!

சென்னை—24
27-7-67 கே. அருணாசலம்

திருநெல்வேலிக் கோட்டத்தில் ராமநாதபுரம், திருநெல்வேலி ஜில்லாக்களில் பயர் நிலைப் பள்ளிகளிலும், ஆதாரப் பயிற்சிப் பள்ளியிலும் வேலை பார்க்கும் செகண்டரி கிரேடு ஆசிரியர்கள் இருபத்தாறு பேர்களை வேலை நீக்கம் செய்து விட்டார்கள்.

கல்வி இலாகாவில் ஆசிரியர்களை ஒரு டிவிஷனில் வேலை நீக்கம் செய்துள்ள போது, வேறு டிவிஷனில் ஆள் எடுக்கிறார்களாம் !

இப்படி வேலையிழந்தவர்களையாவது வேறு டிவிஷனில் வேலையிருக்கும் இடங்களில் போடக் கூடாதா?

இந்த வேலைநீக்க விவரம் கல்வி மந்திரிக்குத் தெரியாமல், கல்வி இலாகாவால் செய்யப்பட்டதாகக் கூறுகிறார்கள். கல்வி மந்திரி இது பற்றிக் கவனித்து, வேலை இழந்தவர்களுக்கு உடன் வேலை வழங்கியும், வேலையிழப்புச் செய்யப்பட்ட நாட்களுக்கு ஊதியம் வழங்கியும் ஏழை ஆசிரியர்களைக் காப்பாற்ற வேண்டுகிறோம்.

ராமநாதபுரம் டி. பி. ஆறுமுகம்,
அ. பட்டாறத்து.
30-7-67 ஏ. பெருமாள்.

காதல், கடமை, தியாகம் ஆகிய மும்பெரும் உணர்வுகளை, எழுச்சிகளை ஒருங்கு இணைத்துத் தித்திக்கும் தூய தமிழ் நடையில் அருமையான ஓர் இலக்கியப் படைப்பை அளித்து, எம் போன்றோரின் உள்ளங்களைப் பரவசமடையச் செய்த திரு சோமு அவர்களைத் தமிழ்கூறும் நல்லுலகம் மறவாது. அறம், துறவு, சமயம், ஊழ், வீரம் ஆகிய தத்துவங்களைத் தீந்தமிழ்ச் சுவையோடு கூறும் அவ்வரிய படைப்பு காலந்தால் அழியாமல் நிற்கும்.

பங்களூர்
27-7-67 அ. சோதிநாதன்.

சாலையில் செவ்வனே சென்று கொண்டிருக்கும் ஒருவன் எதிர்பாராமல் சிறு ஆபத்துக்குள்ளாகி அதிர்ச்சி அடைந்தால் எப்படி இருக்கும்? பொன்மணி உண்மையாகவே துறவு மேற்கொண்டதை உணர்ந்ததும் என்நிலை அத்தகையாகியது. பொன் மணியின் வாழ்வு இப்படி அமைந்து விட்டதே என மனம் வெதும்புகிறது. ஆனால் பொன் மணியின் தியாகம் என்றும் நம் மனத்தில் பொன்னே போல் ஒளி வீசும்.

பெங்களூர்—16
27-7-67 பெ. ச. பரமசிவன்

வெண்ணிலவுப் பெண்ணரசியில் வரும் பொன்மணியின் தியாகம் என் நெஞ்சைத் தொட்டு விட்டது. ஆசிரியர் சோமு அவர்கள் அழகுத் தமிழில் வடித்தெடுத்த இப்புதினம் காலத்தையும் கடந்து நிற்கவல்லது. வெல்க, அவரது முயற்சிகள்.

கம்பம்
27-7-67 சி. மு. ஸாதிக்

Printed & published by R. Ananthanarayanan on behalf of Messrs. Bharathan Publications Private Limited at Kalki Press, Kilpauk, Madras-10.
Managing Editor: T. Sadasivam.

உங்கள் கேசத்தை ஆரோக்கியமுடன் பளபளப்பாக வைத்திருப்பது

பிரில்க்ரீம்




பிரில்க்ரீம் மட்டுமே

அதிக எண்ணெய்ப்பற்று இல்லாமலும், தாறுமாருக உரோமம் கலையாமலும் நேர்த்தியாக தலையை வார உங்களுக்கு உதவுகிறது.

- மிகவும் சிக்கனமானது-ஒருமுறை தடவி வாரிக் கொண்டால் நாள் முழுவதும் உங்கள் தலை கலையாது அழகாக தோற்றமளிக்கும்.
- உரோமம் உதிர்ந்து வழுக்கை விழாமல் தடுக்கக் கூடிய, ஆரோக்யமான உரோம வளர்ச்சியைத் தூண்டக்கூடிய, நேர்த்தியான கலவை வாய்ந்தது.

இனிமேல் பிரில்க்ரீமையே உபயோகியுங்கள்.

கருமையோடு பளபளக்கும் ஆரோக்கியமான கேசத்திற்கே!



B-1-P-L-67-TH/.

REGISTERED No. M. 4392
Registered as a Newspaper in Ceylon

இலங்கையில் 40 சத
தபால் செலவு தனி

